Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :94 மாசி 19ஆம் நாள் திங்கட்கிழமை 02 மார்ச் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

முச்சந்தி முரளி



அப்ப இனி தேர்தல் திருவிழா களை கட்டப் போகுது. ஸீரோவா இருந்த பொதுசன மெலாம் கொஞ்ச நாளைக்கு ஹீரோ மாதிரி மாறப் போகுதுகள் பாருங்கோ

## நாடாளுமன்றம் இன்று கலைப்பு

கொழும்பு, மார்ச் 2

எட்டாவது நாடாளுமன்றக் கூட்டத் தொடர் இன்று நள்ளிரவுடன் முடிவுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளு மன்றத்தைக் கலைக்கும் வர்த்த மானி நேற்றே தயார் செய்யப்பட்

23

## மனித உரிமைகள் சபையிலிருந்தே இலங்கை அரசு வெளியேறவேண்டும்

### கடும்போக்கு சிங்கள அமைப்புக்கள் கோத்தாபயவுக்கு அழுத்தம்

கொழும்பு, மார்ச் 2

ஜெனிவா மனித உரிமை ஆணைக் குழுவின் அங் கத்துவத்தில் இருந்து வில குவது தொடர்பாக கடும் போக்கு சிங்கள அமைப் புக்கள் முன்வைத்த கோரிக்கை தொடர் பில் ஜனாதிபதி

06

## யோசிதவும் தேர்தலில் போட்டி!!!



கொழும்பு, மார்ச் 2

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வின் இரண்டாவது புதல்வரான கடற்படை லெப். கொமாண்டர் யோஷித ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்

04

### பொதுத்தேர்தலின் பின்னர்

# 60 அரச உயர் பதவிகள் படை அதிகாரிகளுக்கு!

### கோத்தாவின் திட்டம் இதுவே: மக்களை எச்சரிக்கின்றது ஐ.தே.க.!

கொழும்பு, மார்ச் 2

பொதுத்தேர்தலின் பின்னர் அரச சேவையின் முக்கிய பதவிகளுக்கு 60 இராணுவ அதி காரிகளை ஈடுபடுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படுவதாக எமக்கு அறியக்கிடைத் துள்ளது. இதனால் நாடு இராணுவ ஆட்சியை நோக்கிப் பயணிக்கின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

23

## கொள்ளை சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்ப்பாணம் உள்பட வடக்கு மாகாணம் முழுவதும் வீடுக ளுக்குள் புகுந்து கைக்குண்டு கள் மற்றும் வாள்களைக் காட் டிக் கொள்ளையிடு வது, பெண்களுக்கு

23

## பெண் சாவு

சாவகச்சேரி, மார்ச் 2

59 வயதுக் குடும்பப் பெண் மாரடைப்பால் உயிரிழந் துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தி னம் மீசாலை மேற்கில் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு திடீ ரென நெஞ்சுவலி ஏற்படவே அங்கி

23

## ரூ. 5 லட்சம் பெறுமதியான ஐஸ் போதைப் பொருள் மீட்பு

### ஜி.பி.எஸ். கருவியும் சிக்கியது

கிளிநொச்சி, மார்ச் 2

கிளிநொச்சி இரணைமடுப் பகுதியில் ஐந்து இலட்சம் ரூபா பெறு மதியான ஐஸ் போதைப்

23



### போராடிய மக்களை

## பரப்புரைக் கூட்டத்துக்கு அழைத்துச் சென்ற எம்.பி.

முல்லைத்தீவு, மார்ச் 2

போராட்டத்தில் நின்ற மக்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு வர் தேர்தல் பரப்புரை கூட்டத்துக்கு அழைத்துச் சென்றதாக தெரி விக்கப்படுகின்றது.

கேப்பாபிலவு மக்கள் தமது சொந்த நிலங்

23

## வீட்டின் மீது குண்டு வீச்சு



வவுனியா, மார்ச் 2

வவுனியா பண்டாரிக்குளத்தில் வீட்டின் மீது நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் பெற் றோல் குண்டுத் தாக் குதல் நடத்தப்பட்

23

## மூவின மக்களும் ராஜபக்ஷ அரசை தோற்கடிப்பதற்கு அணி திரளுங்கள்

### ரணில் அறைகூவல்

கொழும்பு, மார்ச் 2

நாடாளுமன்றம் இன்று நள்ளி ரவு ஜனாதிபதியால் கலைக்கப் படலாம். எனவே, நடைபெற வுள்ள பொதுத்தேர்த லில் ராஜபக்ஷ அர

23

## 14 தங்க விருதுகளை அள்ளியது வடக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 2

இலங்கையின் 844 அலுவல கங்களில் 110 நிறுவனங்க ளுக்கு வழங்கப்பட்ட தங்க விரு துகளில் வடக்கு மாகாண சபை 14

23




## எஞ்சிய காணிகளையும் உடனே விடுவியுங்கள்

### கேப்பாபிலவு மக்கள் நேற்றுப் போராட்டம்

முல்லைத்தீவு, மார்ச் 2

ஒரு தொகுதிக் காணிகள் விடு விக்கப்பட்டதைப் போன்று, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்க ளின் மிகுதிக் காணிகளையும் இராணுவத்தினர் விடுவிக்க வேண்டுமென, கேப் பாப்பிலவு மக்கள்

23

# தேர்தல் காலத்திலும் பட்டதாரிகளுக்கு நியமனம்

## ஆணைக்குழு அனுமதி என்கிறது அமைச்சு

கொழும்பு, மார்ச் 2

தேர்தல் அறிவிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் 42 ஆயிரம் பட்டதாரிகளை அரச சேவைக்குள் இணைப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு இணக்கம் தெரிவித்திருப்பதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுத் தெரிவித்துள்ளது.

42 ஆயிரம் பட்டதாரிகளை நியமிக்கத் திட்டமிட்டுள்ள நிலையில் 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலர் எஸ்.ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

'பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்களை வழங்குவதற்கு சிறப்பு தபால் சேவை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். முன்மொழியப்பட்ட வேலைத் திட்டங்கள், நேர்முகத் தேர்வுகள் மற்றும் நியமனங்கள் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் விளக்கம் கோரப்பட்டது. தேர்தல் அறிவிப்புக்கு முன்னர் இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதால் அவற்றை நடைமுறைப்படுத்த தேர்தல்கள் ஆணைக்குழு ஒப்புதல் வழங்கியுள்ளது' என்றும் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலர் எஸ்.ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

'தேர்தல் பரப்புரை காலங்களில் பட்டதாரி நியமணங்களை வழங்க தேர்தல்கள் ஆணைக்குழு அனுமதியளிக்கவில்லை. எனவே. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் இந்த நியமனங்களை அனுமதிக்கவேண்டாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோருவோம்' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

'தேர்தல் முடியும் வரை இந்த வேலைத்திட்டங்கள் நிறுத்தப்படவேண்டும். பட்டதாரிகளுக்கான வேலைவாய்பை எதிர்க்கவில்லை, ஆனால் அது சரியான முறையில் செய்யப்படுவதை உறுதிசெய்ய விரும்புகின்றோம்' என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

(ஓ.5)



# பஸ் தீக்கிரை

கொழும்பு, மார்ச் 2

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில், அம்பாந்தோட்டையிலிருந்து கொழும்பு நோக்கி நேற்று மாலை பயணித்த, இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் திடீரென தீ பற்றியது. பேருந்து முற்றாக எரிந்து நாசமாகியது.

(ஓ.5)

# பாட்டை ஒலி பரப்ப பணம் செலுத்தவேண்டும்

கொழும்பு, மார்ச் 2

இலங்கையில் வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளில் பாட்டுக்களை ஒலிபரப்புச் செய்வதாயின், அந்தப் பாடல்களின் உரிமையாளர்களுக்கு பணம் செலுத்தவேண்டும் என்று அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள் நேற்று முதல் ஒலி மற்றும் ஒளி பரப்பப்படும் ஒவ்வொரு பாடலுக்கும் அந்தப் பாடலின் உரிமையாளர்களுக்கு பணம் செலுத்த வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வானொலியில் ஒலிபரப்பப்படும் ஒரு பாடலுக்கு ரூபா 20 மற்றும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் பாடலுக்கு ரூபா 100 வீதம் செலுத்த வேண்டுமென வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

(ஓ.5)

# கோத்தா ஆட்சியில் அடிக்கல் திறக்கப்போவது சஜித் அரசே!

## வெற்றி உறுதி என்கிறார் திகாம்பரம்

கொழும்பு, மார்ச் 2

பொதுத்தேர்தலில் சஜித் பிரேமதாச தலைமையிலான கூட்டணியே வெற்றிபெறும் என்றும், கோத்தாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் அடிக்கல் நாட்டப்பட்டாலும் எமது ஆட்சியிலேயே திறப்பு விழா நடக்கும் என்றும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய முன்னணியின் கூட்டம் ஹட்டன் டீ.கே.டபிள்யூ கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்துக்கு தலைமையேற்று உரையாற்றிய திகாம்பரம் மேலும் கூறியவை வருமாறு,

தை பிறந்தால் மலையக மக்களுக்கு வழி பிறக்கும் எனச் சொன்னார்கள். அதன் பின்னர் மார்ச் முதலாம் திகதி முதல் ஆயிரம் ரூபா கிடைப்பது உறுதி என்றார்கள். ஆனால் ஏப்ரல் 10 ஆம் திகதியே அது கிடைக்கும் என இன்று அறிவிக்கின்றார்கள்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போது 750 ரூபா வழங்கப்பட்டுவரும் நிலையில் அதனுடன் மேலும் 250 ரூபாவை சேர்த்து நாள்சம்பளமாக ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுத்தால், நாம் மாலை அணிவித்து வரவேற்போம்.

எனினும், கொழுந்து அதிகமாக எடுக்க வேண்டும், 75 வீத கட்டாய வரவு இருக்க வேண்டும் என்றெல்லாம் நிபந்தனை களை விதித்தும், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றையும் சம்பளத்துடன் சேர்த்துக்காட்டி எப்படியும் ஆயிரம் என்ற முடிவு எடுக்கப்படுமானால் அதனை ஏற்கமுடியாது. தொழிலாளர்களும் ஏற்கமாட்டார்கள்.

50 ரூபாவை பெற்றுக்கொடுப்பதற்கு முழு வீச்சுடன் செயற்பட்டேன். நிதி அமைச்சிலிருந்து அதற்கான நிதி பெருந்தோட்டக் கைத்தொழில் துறை அமைச்சுக்கு வழங்கப்பட்டது. எனினும், அமைச்சர் ஆறுமுகனும், முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்கவும் இணைந்து நாடகமாடியே 50 ரூபாவை இல்லாமல் செய்தனர்.

அதேவேளை நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னரே வேட்பாளர்கள் தொடர்பில் நாம் முடிவுகளை எடுப்போம்.

ராதாகிருஷ்ணன் உட்பட தமிழ் முற்போக்கு கூட்டணியில் நுவரெலியா மாவட்டத்தில் மூவர் போட்டியிடுவோம். மூவரும் வெற்றி பெறுவோம். தேசியப்பட்டியல் ஊடாகவும் ஒருவரை நாடாளுமன்றம் அழைத்துசெல்வோம். மலையகத்தில் உடைக்கவே முடியாத கூட்டணி என்ற பெருமையும் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு இருக்கின்றது. பொதுத்தேர்தலில் சஜித் தலைமையிலான கூட்டணி வெற்றிபெற்றதும் நான் மீண்டும் அமைச்சராவேன். அவர்கள் அடிக்கல் நட்டாலும் எங்கள் ஆட்சியிலேயே திறப்புவிழா நடக்கும் - என்றார்.

(ஓ.5,44)

# படங்களை காட்சிப்படுத்த வேண்டாம்



## ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 2

தனது ஒளிப்படங்களையோ அல்லது சித்திரங்களையோ பிரசித்த மான இடங்களில் காட்சிப்படுத்த வேண்டாம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு அறிவித்துள்ளார். அரச செயலகங்களில் தமது அல்லது அமைச்சர்களின் படங்களுக்குப் பதிலாக அரச இலச்சினையை காட்சிப்படுத்துமாறு முன்னதாக ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஓ.5)

# 1000 ரூபாவை எப்படி வாங்க வேண்டும்? ஜனாதிபதிக்குத் தெரியும்!

## ஏப்ரலிலேயே கைகளுக்கு வந்து சேரும் என்கிறார் தொண்டா

கொழும்பு, மார்ச் 2

ஆயிரம் ரூபா சம்பள உயர்வுக்கான ஒப்பந்தம் இன்னும் ஓரிரு நாள்களில் கைச்சாத்திடப்படும். அதன்பின்னர் ஏப்ரல் 10 ஆம் திகதி தொழிலாளர்களின் கைகளுக்கு நிச்சயம் சம்பள உயர்வு கிடைக்கும், என்று சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மார்ச் முதலாம் திகதி முதல் நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா கிடைக்கும் என அன்று அறிவித்திருந்தேன். இன்றும் அதனையே தெளிவாகவே கூறுகின்றேன். வழங்கப்பட்ட உறுதிமொழியின் பிரகாரம் நிச்சயம் மார்ச் 1 (நேற்று) முதல் ஆயிரம் ரூபா கிடைக்கும்.

சம்பள உயர்வுக்கான ஒப்பந்தத்தில் சில சரத்துகளில் சிக்கல் இருப்பதால் அவற்றை திருத்துமாறு கோரியிருந்தோம். அதன் அடிப்படையில் இன்னும் ஓரிரு நாள்களில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.

ஒப்பந்தம் எப்போது கைச்சாத்திடப்பட்டாலும், மார்ச் முதலாம் திகதி முதலே சம்பளம் கணிக்கப்படும் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்கின்றேன். ஏப்ரல் 10 ஆம் திகதி முழுமையான சம்பளம் கைகளுக்கு கிடைக்கும்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ சிறந்த நிர்வாகி என்பதால் ஆயிரம் ரூபாவை எப்படி வாங்குதென்றும், வழங்குவதென்றும் அவருக்கு நன்கு தெரியும். நானும் முன்வைத்த காலை பின்வைக்க மாட்டேன். எனவே, ஆயிரம் ரூபா நிச்சயம் கிடைக்கும் - என்றார்.

(ஓ.5,44)

# இழந்த அடையாளத்தை மீட்டெடுப்பது அவசியம்

## பேராசிரியர் கந்தசாமி எடுத்துரைப்பு

சாவகச்சேரி,மார்ச்.2

**நாம் கடந்த காலங்களில் இழந்த எமது அடையாளங்களை மீட்டெடுப்பதற்கான வழிகளைத் தேட வேண்டும். நமது பாரம்பரியங்கள், கலைகள் மீண்டும் உருப்பெற்று எம்மை அடையாளப்படுத்த வேண்டும். இவ்வாறு யாழ் பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி தெரிவித்தார்.**



தென்மராட்சிக் கல்வி வலய இசை ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து வழங்கிய ஏழிசை மாலை 28 நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

நமது அடையாளங்களை இழந்து விடக் கூடாது என்பதற்காக இத்தகைய நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. இன்றைய உலகத்தில் சரியான திசையில் செல்லாத மாணவர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் வழிதவறிச் செல்கின்றார்கள். போருக்கு முன்னர் மூலைக்கு மூலை பரதநாட்டியம், இசை பழகக்கூடிய நிலைமை இருந்தது. இன்று அத்தகைய இடங்களைக் காண்பது அரிதாக வுள்ளது.

பெற்றோர்களின் சிந்தனை மாறுவதால், தனியார் கல்வி நிலையங்களில் கணிதம், விஞ்ஞானம் துறைகளைப் பிள்ளைகள் படிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். இதனால் எமது அடையாளங்கள் அழிந்து கொண்டு செல்கின்றன. மாணவர்களைச் சுயமாகக் கற்க விடுங்கள். அவர்களைச் சமூகத்துக்குத் தகுந்தவர்களாக உருவாக்கலாம். ஆரோக்கியமான மாணவர் குழுவை உருவாக்கலாம். - என்றார். (க-159)



# 100 கடைகளுக்கு தரச்சான்றிதழ்

கிளிநொச்சி,மார்ச்.2

கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட 100 கடைகளுக்கான தரச் சான்றிதழ்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

கரைச்சிப் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் வைத்து கடை உரிமையாளர்களிடம் குறித்த சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் வேழமாலிதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதேச சபை உறுப்பினர்கள் தரச் சான்றிதழ்களை வழங்கினர். (க-35)



# 200 இடங்களில் சிரமதானம்

உடுவில்,மார்ச்.2

நாடளாவிய ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கைச் கிராமங்களில் செயற்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ், "பொலிவடைந்த கிராமம்" என்னும் கருப் பொருளில் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 200 பொது இடங்களில் நேற்றுச் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 200 பொது இடங்களில், சமுர்த்தி உத்தியோகத்தர்களின் நேரடியான வழிப்படுத்தலில் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது. (க-39)

# மாதாந்த சிகிச்சைக் கட்டடம் அமைக்கப்பட்டதில் சர்ச்சை!

## அத்தியட்சகரிடம் விளக்கம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 2

தெல்லிப்பழை மருத்துவமனையில் மாதாந்த (கிளினிக்) சிகிச்சைக்கென புதியகட்டம் அமைத்துத்திறந்துவைக்கப் பட்டுள்ள நிலையில், அந்தக் கட்டடம் அமைக்க கூறுவிலை கோரப்பட்டதா? என்பது தொடர்பில் விளக்கமளிக்குமாறு மருத்துவமனை அத்தியட்சகரிடம் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் பணித்துள்ளார்.

பெருந்தொகை நிதியில் கட்டடம் அமைப்பதாயின் மாதிரி வரைபடம் தயாரிக்கப்பட்டு சுகாதார திணைக்களத்தின் திட்டமிடல் பகுதியின் அனுமதியுடன் பகிரங்கக் கூறுவிலை கோரியே ஒப்பந்தம் வழங்கப்பட வேண்டும் என்பது அரச பொது விதி. எனினும், அந்தக் கட்டடம் அமைக்கும் முன்பாக அரச முறைமை மற்றும் நிதி நடவடிக்கை முறையாகக் கைக்கொண்டு அமைக்கப்படவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்த நிலையிலேயே, அந்தக் கட்டடம் அமைக்க பகிரங்க கூறுவிலை கோரல் மேற்கொள்ளப்பட்டதா செலவு மதிப்பீடு செய்யப்பட்டதா போன்ற விவரங்கள் மருத்துவமனை அத்தியட்சகரிடம் எழுத்தில் கோரப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இது தொடர்பில் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் தேவநேசனிடம் கேட்டபோது,

கொடை வள்ளல் ஒருவர் நல்நோக்கம் கருதி பெருந்தொகை நிதி அன்பளிப்புச் செய்துள்ளார். எனினும், அதில் உரிய அரச முறைமைகள் கையாளப்படவில்லை. அதிக நிதிச் செலவு எனக் கூறப்படுகின்றது. அதேநேரம், கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே, அது தொடர்பில் விளக்கம் கோரப்பட்டுள்ளது. அதற்கான பதில் கிடைத்த பின்னரே மேலதிக விவரத்தைத் தெரிவிக்க முடியும். - என்றார். (த-105)

### பார்வையற்ற முதியோருக்கு காப்பகம் அமைக்க காணி

யாழ்ப்பாணம்,மார்ச்.2

யாழ்ப்பாணம் விழிப்புலனற்றோர் சங்கத்தினரால் அமைக்கப்படவுள்ள இலங்கையின் முதலாவது பார்வையற்ற முதியோருக்கான காப்பகத்துக்கான காணி கணபதிப்பிள்ளை திரவியத்தின் ஞாபகார்த்தமாக கணபதிப்பிள்ளை ஆனந்தமணியால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக கைதடி நுணாவில் மேற்குப் பகுதியில்.21 பரப்புக் காணி வழங்கப்பட்டுள்ளது என்றும் யாழ்ப்பாணம் விழிப்புலனற்றோர் சங்கம் தெரிவித்துள்ளது. (எ)

# 'எதிர்பார்த்த விழிகள்', 'உறையாத குருதி'

## வெளியிடப்பட்டன

கிளிநொச்சி மாவட்ட இளம் கலைஞர்களின் படைப்புக்களை ஊக்கப்படுத்தவும், சமூக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நோக்கிலும் 'உறையாத குருதி' எனும் குறுந்திரைப்படம் மற்றும் 'எதிர்பார்த்தவிழிகள்'எனும்காணொலிப் பாடல் என்பவை வெளியிடப்பட்டன. குறும்பட இயக்குநர் ரி.தர்சன் இயக்கத்தில் உருவான இரண்டு படைப்புக்களும் யாழ் அச்சுநகர், குருசுமுத்து ஜோ. அன்ரனி கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையில் மித்திரசேனை குழுமத்தினரால் கடந்த சனிக்கிழமை வெளியிடப்பட்டன. நிகழ்வில் அருட்தந்தையர்கள், சமூக ஆர்வலர்கள், படைப்பாளிகள், கலைஞர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (த-222)



# மன்னாரில் துப்புரவுப் பணி

மன்னார், மார்ச் 2

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை பிரதான வீதியிலிருந்து தாழ்வுப்பாடு வரையான பிரதான பாதையில் நேற்றுமுன்தினம் துப்புரவுப் பணி நடைபெற்றது.

மன்னார் நகர சபை மற்றும் 'சனிவிலேஜ்' கடற்படையினர் இணைந்து இதில் ஈடுபட்டனர்.

வீதியின் இரு பகுதிகளிலும் காணப்பட்ட பற்றைகள் வெட்டப்பட்டு துப்புரவு செய்யப்பட்டன. உக்காத பிளாஸ்ரிக் பொருள்களைக் கடற்படையினர் சேகரித்து அகற்றினர். (த-56)




## யோசிதவும்...

டத்தில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் பட்டியலில் போட்டியிட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் மோசடி குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்ட யோஷித ராஜபக்ஷ விளக்கமறி யலிலும் வைக்கப்பட்டிருந்தார்.

ராஜபக் ஷ குடும்பத்தைச் சேர்ந்த மஹிந்த ராஜபக் ஷ, கோத்தாபய ராஜபக் ஷ, சமல் ராஜபக் ஷ, பஸில் ராஜபக் ஷ, நாமல் ராஜபக் ஷ, நிருபமா ராஜபக் ஷ, ஷசீந்திர ராஜபக் ஷ ஆகியோர் ஏற்கனவே அரசியலில் இருந்து வருகின்றனர். (ஓ.5)

# மரண அறிவித்தல்கள்

## செல்வராசா தவராசா
### (முன்னாள் சாரதி - சீ-நோர் நிறுவனம்)



காரைநகரைப் பிறப்பிடமாகவும் சின்னப்பா வீதி, நவாலி கிழக்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா தவராசா (முன்னாள் சாரதி - சீநோர் நிறுவனம்) நேற்று (01.03.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் பத்தினிப்பிள்ளை (ஓய்வுபெற்ற குடும்பநல உத்தியோகத்தர்) தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம் செல்வரட்ணம் தம்பதிகளின் மருமகனும் தேவகுமாரியின் பாசமிகு கணவரும் பிரதீபா (குடும்பநல உத்தியோகத்தர்- பிரதேச வைத்தியசாலை, மானிப்பாய்), கெற்சி (அபிவிருத்தி உத்தியோகத்தர், தொல்லியல் திணைக்களம் மற்றும் வருகை விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்), ஹோமிகா (ஆசிரியர் - யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி), கிறிஷோ (ஆசிரியர் - வவு/ முதலியார்குளம் றோ.க.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் டானியல் நிலானின் அன்பு மாமனாரும், எரோன் டானியலின் அன்புப்பேரனும் ஜெயராசா (லண்டன்), விஜயராசா (பிரான்ஸ்), பத்மராசா (பேராசிரியர், பேராதனை பல்கலைக் கழகம்), மோகனராசா (பேராசிரியர், அமெரிக்கா), ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவமாலா, தேவகுமார், ஜெயக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.03.2020) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நவாலி அமெரிக்கன் மிசன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சின்னப்பா வீதி, நவாலி கிழக்கு,
மானிப்பாய்

தகவல் : குடும்பத்தினர்
021 225 6375

பிறப்பு
09 . 07 . 1971



இறப்பு
01 . 03 . 2020

## இராஜரட்ணம் சிறிவரதன் (குசன்)

வேலணை கிழக்கு 2ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் சிறிவரதன் (குசன்) நேற்று (01.03.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜரட்ணம் - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் ராஜ்குமார், மங்கயற்கரசி, சிறிதர், இராஜவக்சலன், இராஜபரமேஸ்வரன், காலஞ்சென்ற கவிதா மற்றும் டயானி, புருசோத்தமன் ஆகியோரின் சகோதரனும், கோமதி, பத்திநாதன், காந்திமதி, செல்வராணி, சுசிலா, கிருபாமூர்த்தி, ராதிகா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2020) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துறையூர் அம்பலவாணன் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை கிழக்கு,
2ஆம் வட்டாரம்.

தகவல்:-
குடும்பத்தினர் மற்றும் பெறாமக்கள்

தொடர்புகளுக்கு:- 021 568 0401, 076 3054924

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுவேந்திரராணி சிவப்பிரகாசம்



தோற்றம்
31.03.1961

மறைவு
29.02.2020

169.கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கு மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுவேந்திரராணி சிவப்பிரகாசம் கடந்த (29.12.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராஜா யோகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் மாணிக்கம் வள்ளியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சிவப்பிரகாசத்தின் (கங்காணி) அன்பு மனைவியும் சிவதர்சினி, துஸ்யந்தினி, நிசாந்தினி (இத்தாலி) சுவேந்திரன், பாமினி ஆகியோரின் அன்புத்தாயாரும் சிவாகரன், சிறிகரன், சுபாஸ் (இத்தாலி), சிமிதா, அர்ச்சுனா ஆகியோரின் அன்பு மாமியாரும் காருண்யா, பர்மிலன், யனோஜன், துசானிகா, நிகாஷ் (இத்தாலி), நிகிதா, ஆருஷியன், நிருஷா (இத்தாலி), மிதுர்சன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் தெய்வேந்திரம் (சுவிஸ்), ஜீவராணி, விஜயராணி, இராசேந்திரம் (சுவிஸ்), ரவீந்திரன் ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற மகேஸ்வரி, இராஜேஸ்வரி, பூபாலசிங்கம், மற்றும் குணரட்ணம், ஜெயரட்ணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2020) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

பிறப்பு
12 . 02 . 1987



இறப்பு
27 . 02 . 2020

## பேணாட் டர்ஷன் தேவஞானேந்திரன்

(பீடாதிபதி , விரிவுரையாளர் CORNERSTONE College of International Studies தலைம், முன்னாள் வியாபார முகாமைத்துவ பாட இணைப்பாளரும் விரிவுரையாளருமாகிய BCAS Campus Colombo, முன்னாள் விரிவுரையாளர் American College of Higher Education, பகுதிநேர விரிவுரையாளர் British School of Commerce)

யாழ்ப்பாணம் பழையபூங்கா வீதியை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பேணாட் டர்ஷன் தேவஞானேந்திரன் 27.02.2020 அன்று காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான வேதநாயகம் தேவஞானேந்திரன் - மேரி ஜோசப்பின் (சந்திரா) தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருளப்பு - தங்கரட்ணம் மற்றும் வேதநாயகம் - மேரிதிரேசா ஆகியோரின் பாசமிகு பேரனும் ராஜன்-சாந்தி (ஹொலண்ட்), ஜெயா-லூசி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஜெயா-மரியதாஸ், றஞ்சி-ஆனந்தராசா, நிர்மலா-ஜெயராஜா ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் இந்திரன் (U.K), ஜெகன், றெக்னோ (அமெரிக்கா), பவன் ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் காலஞ்சென்ற பேர்னடெற், றெஜினா (அமெரிக்கா), மனுவலா (U.K), வத்சலா (U.K) ஆகியோரின் அன்பு மருமகனும் கிஷோ, மரியா, டினேஷ், மடோனா, டிலானி, வினோ, ஜெரோல்ட், ஜொஷேனா பிறேமி, யூட் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும்,சுபா,அல்றின்,ஐஸ்மினா,அருண் ஆகியோரின் மைத்துனரும் ஜொய்லின்,ஜெய்டன்,தக்ஷிதா ஆகியோரின் பாசமிகு மாமாவும் திரிஷிகாவின் பாசமிகு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இல.32/16, அச்சக வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரின் பெரிய தாயாரான ஜெயா மரியதாஸின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 04.03.2020 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டு பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் திருப்பலியின் பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

ச.மரியதாஸ் - 077 078 1112, ஜெ.நிர்மலா - 077 729 7981
டினேஷ் - 077 949 8889, வினோதன் - 076 630 0799



# விஜய்க்கு அன்பு முத்தம் கொடுத்த விஜய்சேதுபதி

விஜய்யின் 64ஆவது படம் மாஸ்டர். லோகேஷ் கனகராஜ் இயக்கி இருக்கும் இந்தப் படத்தில் விஜய் சேது பதி, அர்ஜுன் தாஸ், மாளவிகா மோகனன், ஆண்ட்ரியா, கவுரி கிஷன், வி.ஜே.ரம்யா, ஸ்ரீமன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். சத்யன் சூரியன் ஒளிப்பதிவு செய்துள்ள இந்த படத்துக்கு அனிருத் இசையமைத்து வருகிறார்.

இந்த நிலையில், மாஸ்டர் படத்தின் படப்பிடிப்பு நேற்றுடன் நிறைவடைந்தது. இதையடுத்து பின்னணி வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. ஏப்ரல் மாதம் இந்தப் படம் திரைக்கு வருகிறது. இதனிடையே அண்மையில் மாஸ்டர் படத்தின் படப்பிடிப்பின் போது விஜய்க்கு விஜய்சேதுபதி முத்தம் கொடுத்ததாக செய்திகள் வெளியாகின. தற்போது அந்த புகைப்படத்தை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர். அந்த புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகப் பரவி வருகிறது.



## துயர் பகிர்கின்றோம்

எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியையான

**திருமதி ஜனார்த்தனி பிரபாகரன்** அவர்களின் தாயார்

**திருமதி கமலவேணி ஆறுமுகம்**

அவர்கள் கடந்த 08.02.2020 அன்று இறைபதமடைந்தார். அ[illegible] பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்[illegible] தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.கல்வி வலய இசையாசிரியர் கழகம்.**

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

**சுப்பிரமணியவேல் ஜெகதீஸ்வரி**

(ஆசிரியர், யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்)

**அன்னை மடியில்**
**29.04.1960**

**ஆண்டவன் அடியில்**
**01.02.2020**

எமது குடும்ப விளக்கு அணைந்த செய்தி கேட்டு விரைந்து வந்து மீளாத் துயரில் அமிழ்ந்திருந்த எமக்கு ஆதரவுக் கரம் நீட்டி எம் துயரில் பங்கேற்று அன்னாரின் ஈமச்சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள், கல்விச் சமூகம், பொது அமைப்புக்கள், நிறுவன ஊழியர்கள் மற்றும் அனைவருக்கும் எம் சிரம் தாழ்த்திய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டோர், பதாகைகள் மூலம் கண்ணீர் அஞ்சலி தெரிவித்த மற்றும் மலர் வளையம் வைத்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகள் பல அத்துடன் பல்வேறு ஊடகங்கள் ஊடாக அனுதாங்களை பகிர்ந்துகொண்ட புலம்பெயர் தேசத்து உறவுகள், நண்பர்களுக்கும் நன்றிகள் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிரியைகள் இன்று (02.03.2020) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குமர நகர்
கைதடி மத்தி, கைதடி.

**குடும்பத்தினர்.**
**077 388 0535, 077 220 8245, 077 481 2791**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னலட்சுமி நடராஜா



ஊரெழு வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி நடராஜா கடந்த 28.02.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும், வரதலோஜனி (ஜேர்மனி), ஸ்ரீகரன், மனோகரன், தனலோஜனி (கனடா), தர்மலோஜனி (பிரான்ஸ்), ஜெயகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), சித்திரா, ஜெயரத்தினம் (கனடா), யோகரத்தினம் (பிரான்ஸ்), துஷி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சர்மிளா, பாமினி, ஜெனா,மயூரன், பவிதரன், ஜெயபரிஸ்ணன், ஜெயகிருஸ்ணன், றொபிந்தன், அருஷா, அவிஷா ஆகியோரின் பேர்த்தியும், தவராஜலிங்கம், பாலச்சந்திரன், காலஞ்சென்றவர்களான இராஜரத்தினம், ஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவபாதம், தங்கேஸ்வரி, காலஞ்சென்ற தவமணி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2020) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஊரெழு வடக்கிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**ந.மனோகரன் (மகன்)**

(J/11773)(11,17)

**021 490 0029**

## மரண அறிவித்தல்

### செல்வேஸ்வரி சர்வானந்தன்



தோற்றம் 31.07.1942 மறைவு 27.02.2020

அளவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வேஸ்வரி சர்வானந்தன் கடந்த **(27.02.2020)** வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து இராசையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சர்வானந்தனின் பாசமிகு மனைவியும், அனுசா (கனடா), சுகிந்தன் (கனடா), அம்பிகா (கனடா), தேவகி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குமுதினி, பிரான்சிஸ், மைக் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆனியா, கைலா, மாயா, லோகன், சமந்தா, ஹைடன், ரைலர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, ராஜேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவபாக்கியம் (மலேசியா), மாணிக்கவாசகர் (கனடா), டொக்ரர் தர்மராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சசிதரன் (கனடா), பகீரதன் (UK), சிவாஜினி (அமெரிக்கா), ராஜன் (மலேசியா), ஈஸ்வரி (UK) ஆகியோரின் அன்ரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யானைக்குட்டி மதவடி,
தெல்லிப்பழை கிழக்கு.

தகவல்
Dr.பொ.தர்மராஜசிங்கம்.

**021 224 3623, 077 625 7969**

**மண்ணில்**
**06 . 09 . 1932**



**விண்ணில்**
**01 . 03 . 2020**

### திருமதி சிவலோகம் விநாயகமூர்த்தி

எழுதுமட்டுவாழை பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவலோகம் விநாயகமூர்த்தி நேற்று (01.03.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரர் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி (ஆசிரியர்) அவர்களின் பாசமிகு மனைவியும் சிறீதரனின் அன்புத் தாயாரும், சிறிரமணியின் பாசமிகு மாமியாரும் ஆதித்தன், அபிராம் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் (ஆசிரியர்), குமாரசாமி மற்றும் சரவணமுத்து, தெய்வானைப்பிள்ளை, சுந்தரலிங்கம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான வியாலாட்சி, சின்னம்மா மற்றும் சிவஞானசுந்தரி, அருந்தவநாயகி, சிவகாமிப்பிள்ளை, யோகரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் சிறிகாந்தன் - கலாவதி, தயாபரன் - பரமேஸ்வரி, கலைச்செல்வி- மதிரூபன், திருச்செல்வி - பகீரதன், தவச்செல்வி - சயந்தன், கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஷாயினியின் பாசமிகு பெரியம்மாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2020) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிராமசபை ஒழுங்கை (V.C லேன்)
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்:- சிறீதரன் (மகன்)
077 808 4422

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்டிய பிரதேசத்தில் இணைந்த குளியல் அறையுடன் 3 அல்லது 5 Room வசதியுடன் வீடு தேவை. Main Roadஐ அண்டிய பகுதி விரும்பத்தக்கது.

077 695 9642, 077 974 8135

## நாஹா மருத்துவ நிலையம்

கை, கால் அதிக விறைப்பும் உணர்வற்று போதலும், முழங்கால் வாதம், பாரிசவாதம், அல்சர், தீராதபுண்கள், மூலவருத்தம் குணமாதல்.

வங்கி முன்லேன்,
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி,
(ஜெகபதிவீடு) மானிப்பாய்.

தொடர்பு: 077 321 2740

## வேலையாள் தேவை

**Lovely Flowers** கிளிநொச்சி
வயது எல்லை - 18 - 35
சம்பளம் 15 000 - 18 000

077 400 5023




## விற்பனையாளர் தேவை

யாழ்ப்பாணம், ரவுண் புத்தகசாலைக்கு
ஆண்/ பெண் இருபாலாரும்
வேலைக்குத் தேவை.

072 287 5625




## STUDY IN TAMILNADU WITH 100% SCHOLARSHIP FOR SRI LANKAN STUDENTS

**Scholarship Entrance Exam on March 07th 2020**

Application Closing on March 05th 2020

For Registation Contact: 076 817 0077 | 021 492 7780

**B.E. / B.Tech** UGC Recognized University Awarded Degree

AERONAUTICAL ENGINEERING
CIVIL ENGINEERING
MECHNICAL ENGINEERING
ELECTRONICS & COMMUNICATION ENGG.
COMPUTER SCIENCE ENGINEERING
INFORMATION TECHNOLOGY

A+ NAAC

**Excel** TAMILNADU, INDIA

**POLYTECHNIC**
AUTO | MECH
CIVIL | ECE | EEE

**COMMERCE & SCIENCE**
B.A. English, Tamil | B.C.A. | B.Com. | B.Com-CA
B.B.A. | B.Com. (AF) | B.Sc., Computer Science | Microbiology
Textile & Fashion Designing | Vis.com. | Mathematics | Costume Design & Fashion | Physics | Information Technology | Bio-chemistry



**ADMISSION OFFICE** கற்பகவனம், 551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில்)


## மின்னியலாளர்களுக்கு தொழில் உரிமம் வழங்குதல் தொடர்பான மாவட்ட கருத்தரங்குகள்

வவுனியா
2020 மார்ச் **03**
நகரசபை கலாசார மண்டபத்தில்

கிளிநொச்சி
2020 மார்ச் **05**
பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில்

மன்னார்
2020 மார்ச் **12**
நகரசபை மண்டபத்தில்

முல்லைத்தீவு
2020 மார்ச் **14**
மாவட்ட செயலகத்தில்



மின்சாரத் துறையில் மின்னியலாளர்களாக பணிபுரியும் உங்கள் அனைவருக்கும் தொழில் ரீதியான அங்கீகாரம் கிடைக்கும் வகையில் உரிம முறையொன்று (லைசன்) நடைமுறைக்கு வரவுள்ளது. இது தொடர்பான இலவச மாவட்ட மட்ட கருத்தரங்குக்கு அனைத்து மின்னியலாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

www.facebook.com/pucsl/

தொலைபேசி மூலமாக முன்பதிவு செய்யவும் **0770399119**

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு
மின்சாரத் துறையின் ஒழுங்குறுத்துகை அமைப்பு

## மனித...

கோத்தாபய கூடிய கவனத்தை செலுத்தி வருவதாக அரசுக்கு ஆதரவான சிங்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்துக்கு எதிரான தீர்மானங்கள் தொடர்ந்தும் எடுக்கப்படுமாயின், ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவில் இருந்து இலங்கை விலக வேண்டும் என்று சில பிரதான சிங்கள தேசிய அமைப்புகள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் யோசனைகள் முன்வைத்துள்ளன. இது குறித்து கூடிய கவனத்தை செலுத்துவதாக ஜனாதிபதி, அந்த அமைப்புகளிடம் கூறியுள்ளதாக அரசுக்கு நெருக்கமான தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த அரசு இணை அனுசரணை வழங்கிய ஜெனிவா யோசனையில் இருந்து இலங்கை விலகியமை சம்பந்தமாக ஜெனிவாமனிதஉரிமைஆணையாளர்கடும்விமர்சனங்களை முன்வைத்து கருத்து வெளியிட்டுள்ளதாக அந்த இணையத்தள செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அரசியல் விமர்சகர்கள், இந்தத் தகவலானது பெரும்பாலும் சிங்கள - பௌத்த இனவாத வாக்குகளை இலக்கு வைத்து மேற்கொள்ளும் பரப்புரையாக இருக்கலாம் என தெரிவித்துள்ளனர். இலங்கை இப்படியான தன்னிச்சையான தீர்மானத்தை எடுத்தால், அது சர்வதேச ரீதியாக பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் நிலைமையை உருவாகும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஒ.5)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
10 . 09 . 1937



மறைவு
01 . 02 . 2020

கடந்த 01.02.2020 சனிக்கிழமை அன்று இறைபதம் எய்திய

**அமரர் திருமதி**
**பரமேஸ்வரி முத்துலிங்கம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.03.2020) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் இந்நிகழ்விலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டுவினி,
இணுவில் மேற்கு

குடும்பத்தினர்

# மாணவர்கள் உயிரிழப்பு ஆசிரியர்கள் மீது நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 2

கல்விச் சுற்றுலாவொன்றின் போது நான்கு மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தமை தொடர்பில் எட்டு ஆசிரியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஹாலிஎல விஞ்ஞானக் கல்லூரியிலிருந்து கடந்த 19ஆம் திகதி திருகோணமலைக்கு மாணவ, மாணவிகள் 87 பேரும் ஆசிரியர்கள் 8 பேருமாக கல்விச் சுற்றுலா மேற்கொண்டிருந்தனர். கொமரன்கட மதவாச்சி குளத்தில், சுற்றுலாவுக்கு வந்த மாணவர்கள் பலர் குளிக்கச் சென்றிருந்த வேளையில், நான்கு மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தார்கள்.

ஊவா மாகாண கல்வித் திணைக்களம், ஊவா மாகாண ஆளுநர் ஆகிய இரு பகுதியினரால் இரு குழுக்கள் நியமிக்கப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்விச் சுற்றுலாவை ஏற்பாடு செய்திருந்த ஆசிரியர்களின் கவனயீனமே மாணவர்களின் உயிரிழப்புக்கு காரணமென்று ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

நியமிக்கப்பட்ட இரு விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் வெளிவரும் முன்பே, கல்விச் சுற்றுலாவை ஏற்பாடு செய்திருந்த எட்டு ஆசிரியர்களும், சம்பந்தப்பட்ட கல்லூரியிலிருந்து விசாரணைகள் முடியும் மட்டும் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

(ஓ.5)

# துணைவேந்தரை நீக்கு போராடியோர் கைது

கொழும்பு, மார்ச் 2

ருகுணு பல்கலைக்கழக துணைவேந்தரை பதவி நீக்குமாறு கோரிப் போராட்டம் நடத்திய தேரர்கள் இருவர் உள்ளிட்ட 22 பேர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டு இன்று வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ருகுணு பல்கலைக் கழக துணைவேந்தரை பதவி நீக்குமாறு கோரி, பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் கடந்த வியாழக் கிழமை முதல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்னால் உணவு ஒறுப்புப் போரட்டத்தில் ஈடுபட்டு வருகின்றது. இந்த நிலையில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக, 22 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை இன்று வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(ஓ.5)

BLC CAMPUS
LINCOLN UNIVERSITY COLLEGE
UNIVERSIDAD AZTECA
QUEST INTERNATIONAL UNIVERSITY PERAK
your success... our achievement...
VACANCIES at JAFFNA BRANCH



BLC Campus ia a well-established institution and is a pioneer in providing a variety of internationally accredited tertiary education programmes catering to the demands of both Sri Lankan and foreign students. With our growth, we are looking forward to have smart, dedicated and dynamic people joining our team in the following positions:

**Academic Coordinator**

Job Requirments:
- Bachelor's Degree is preferred
- Minimum 2 Years experience in any administrative environment.
- Age 25 to 40 years.
- Excellent communication & presentation skills in English & Local Languages.
- Fluent in MS-office softwares

**Marketing Executive - Front Office**

Job Requirments:
- Age 18 to 40 years.
- G.C.E. A/L Qualification is preferred
- Prior experience in similar positions will be added an advantage.
- Should be able to work on weekends.

Preference will be given to those who reside in Jaffna District.
Send your detailed CV to blccampusjaffna@gmail.com
with the position applied for in the subject line of your e-mail.

We belive there is nothing more important than Education

JAFFNA CAMPUS
4th Lane, Brown Road, Jaffna.

COLOMBO CAMPUS
NO.15, Aloe Ave, Colombo.

T - 021 493 5555, 021 437 4443 | E - info@blccampus.edu.lk

# கோத்தாவின் நியமனத்துக்கு தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 2

சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் வைத்திய ரவிப்பிரிய நியமிக்கப்பட்டதற்கு கடும் எதிர்ப்புக்கள் நிலவி வருகிறன. சுங்க தொழிற்சங்கங்கள், இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்தினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகிறார்கள்.

இந்த விவகாரம் தொடர்பாக தொழிற்சங்க பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில், 2 வருடங்கள் மட்டும் இராணுவ அதிகாரி பதவியிலிருப்பார் என்றும், அதன் பின்னர் நிர்வாக சேவை அதிகாரியொருவர் நியமிக்கப்படுவார் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வாக்களித்துள்ள போதும், சுங்கத் திணைக்கள தொழிற்சங்கங்களின் எதிர்ப்புத் தணியவில்லை.

இலங்கை நிர்வாக சேவைகள் தர அதிகாரியொருவரே சுங்கத் திணைக்கள பணிப்பாளராக பதவி வகிக்கலாமென வர்த்தமானி பிரகடனம் உள்ளது. இதை மீறியே இராணுவ அதிகாரி நியமிக்கப்பட்டார்.

இந்த விவகாரம் தொடர்பாக, இலங்கை நிர்வாக சேவைகள் அதிகாரிகள் சங்கம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தியது. ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தவதாக பிரதமர் குறிப்பிட்டிருந்தாலும், இராணுவ அதிகாரி நியமனத்தை அவராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. இந்தச் சங்கம் அண்மையில் ஜனாதிபதியின் செயலருடனும் பேச்சு நடத்தியது. கடந்த மூன்று வருடமாக சுங்கப் பணிப்பாளர் துறை வெற்றிடமாக இருந்ததாகவும், அந்த துறையில் ஊழல், மோசடி கட்டுப்படுத்த முடியாதளவு உயர்ந்துள்ளதால் இராணுவ அதிகாரியை நியமித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஓ.5)

# அரசை அடக்கி வைத்திருக்கின்ற பலத்தை எங்களுக்குத் தாருங்கள்

## ஐ.தே.கவின் மோதல் முடிவுக்கு வராது என்கிறது ஜே.வி.பி.



கொழும்பு, மார்ச் 2

225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் எமக்கு 10 முதல் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தால், எப்படி 225 பேரை நெறிப்படுத்துவது என்பது எமக்குத் தெரியும். எனவே, அரசை அடக்கி வைக்கும் பலத்தை எமக்குத் தாருங்கள். இவ்வாறு கேகாலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய நிலைப்பாடுகளை அந்தக் கட்சியினர் கூட ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எதிர்க் கட்சியின் கடமையைச் செய்ய ஐக்கிய தேசியக் கட்சியினரால் முடியாது. அந்தக் கட்சியினர் இரண்டாகப் பிரிந்து மோதிக்கொள்கின்றனர். இரண்டு அணிகளும் சின்னத்துக்குப் போட்டி போடுகின்றன.

சின்னப் பிரச்சினையுடன் அவர்களிடம் இரண்டு நிலைப்பாடுகள் உள்ளன. ஓரளவுக்கு ஒற்றுமையாகத் தேர்தலில் போட்டியிட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருக்கும் அந்த மோதல் முடிவுக்கு வரப்போவதில்லை. தேர்தலுக்குப் பின்னரும் நீடிக்கும்.

எனவே, பலமான எதிர்க்கட்சியின் பங்களிப்பை செய்வதற்கான அதிகாரத்தை எமக்குத் தாருங்கள்- என்றார்.

(ஓ.5)

# மரண அறிவித்தல்கள்



பிறப்பு 22 . 09 . 1959

இறப்பு 26 . 02 . 2020

## எகதீஸ்வரி செல்வராஜா (ராதா - கனடா)

சரவணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட எகதீஸ்வரி செல்வராஜா அவர்கள் 26.02.2020 புதன்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை பூமணி சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சீனியர்-பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும், செல்வராஜாவின் (சிவம் - சண்டிலிப்பாய் சீரணி அம்மன் ஊழியர், பன்னாலை, தெல்லிப்பழை) ஆருயிர் மனைவியும், ஈசன் (கனடா), பாமா(கனடா), சசி (சுவிஸ்), காலஞ்சென்ற மங்கை, ஆனந்தி, வாசுகி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதி பிரதம செயலாளர் அலுவலகம் திட்டமிடல் - கைதடி, இணைப்பு - மாகாண கல்வித் திணைக்களம், நல்லூர்), தாஸ் (கனடா), மயூரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாமினி (கனடா), கருணா (கனடா), சுபாகரன் (சிவா - மின் இணைப்பாளர்), சித்திராங்கி (கனடா), முருகையா, கனகராசா, பாலசுப்பிரமணியம், தேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜதுசன், (கனடா), ஜனுஷா(கனடா), கவின் (யா/ மானிப்பாய் இந்து கல்லூரி) ஆகியோரின் அன்புப் பெரிய தாயாரும், விதுசன் (கனடா), றஜீன் (கனடா), ஹரிஸ் (கனடா), அரிஸ் (கனடா) ஆகியோரின் அன்புப் பெரிய அத்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (02.03.2020) இலங்கை நேரப்படி திங்கட்கிழமை Cremation Centre8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada இல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home இல் ஞாயிறு மாலை கனடா நேரப்படி 5.00 மணியிலிருந்து இரவு 9.00 மணிவரை (இலங்கை நேரப்படி திங்கட்கிழமை காலை 6.30 மணியிலிருந்து 10.30 மணிவரை) பார்வைக்கு வைக்கப்பட்டு மறுநாள் 03.03.2020 முற்பகல் 11.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை (இலங்கை நேரப்படி காலை 12.30 - 2.30 மணிவரை) இறுதி கிரியைகள் நடைபெற்று, பின்னர் பிற்பகல் 2.00 மணியளவில் (இலங்கை நேரப்படி செவ்வாய்க்கிழமை காலை 3.30 மணிக்கு) தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மேதர்ஸ் ஒழுங்கை,**
**(சென்ற் அன்ரனீஸ் வீதி)**
**அந்தோனியார் கோவில் அருகில், மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 994 6285, 077 623 8977, 077 615 8773** (J.11775) (13.17)

# முதலாம் ஆண்டு நினைவுதினம்



தோற்றம் 07 . 01 . 1943

மறைவு 02 . 03 . 2019

## அமரர் திருமதி சரஸ்வதி சண்முகம்

(திதி : ஏகாதசி)

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் –
செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பில் காண்போம் இனி.



கல்லூரி ஒழுங்கை,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

**பிள்ளைகள்**



## திருமதி K.K.விஸ்வலிங்கம் பரமானந்தம் யோகராணி

காரைநகர் களபூமி திக்கரையைப் பிறப்பிடமாகவும் காரைநகர் களபூமி பாலாவோடை,திருகோணமலை ஆகிய இடங்களை வசிப்பிடமாக கொண்ட திருமதி. K.K.விஸ்வலிங்கம் பரமானந்தம் யோகராணி அவர்கள் 29.02.2020 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு தம்பையா நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான K.K.விஸ்வலிங்கம் தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும், பரமானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், இந்திராணி.அம்பிகைபாகன் (ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் - கனடா), தியாகலிங்கம் (வர்த்தகர்.யாழ்ப்பாணம்), நடேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், புவனேஸ்வரி, குலரத்தினம், மற்றும் பஞ்சலிங்கம், சகுந்தலாம்பிகை, இராஜேஸ்வரி, திலகவதி, இந்திராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2020) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் தில்லை மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
K.K.விஸ்வலிங்கம் பரமானந்தம் (கணவர்)
(இலங்கை) +94776623391

**தகவல் :**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## சின்னப்பு இராசகுலேந்திரன் (குலம்)



பிறப்பு 15.10.1947

இறப்பு 01.03.2020

குப்பிழான் வடக்கு வீரபத்திரர் கோயிலடியை பிறப்பிடமாகவும் விளையாட்டரங்க வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு இராசகுலேந்திரன் (குலம்) நேற்று (01.03.2020) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு (எழுதுவினைஞர் - Gardan Frazer Company.Ltd) தங்கம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான நடராசா (இளைப்பாறிய அதிபர்) நாகேஸ்வரி (ஆசிரியை) தம்பதிகளின் அன்பு மருமகனும் நீலலோஜினியின் (ராணி) ஆருயிர்க் கணவரும் சிறிரங்கன் (U.K) ஷஞ்சீவன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் கோப்பாய், நல்லூர்), சாரங்கா (UK), ஷண்முகப்பிரியா (U.S.A) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஷதீசா (UK), கோபிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வலி கிழக்கு பிரதேசசபை), கிருஷ்ணராசா (UK), அருள்ரங்கன் (U.S.A) ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஐசு, அபிஷா, அமீனா, சர்வின், சன்விகா, அபிசா, இனியா ஆகியோரின் பாசமிகு பேரனும் கமலாதேவி (கனடா), சிவானந்த ராசா (கனடா), பத்மாசலன் (கல்வியங்காடு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் புஷ்பலக்சுமி, பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான நிர்மலா, கண்ணன் மற்றும் நித்தியா, கலா, கிருஸ்ணா, கோபு, லக்கி, முருகன், குமார், ஜனனி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் லோகன், காலஞ்சென்ற சறோ மற்றும் ரஞ்சன் ஆகியோரின் பாசமிகு தாய்மாமனும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (04.03.2020) புதன் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்

021 223 1633
மகன் இ. ஷஞ்சீவன் - 077 691 3253

# குவாடன் எனும் பெரிய மனிதன்




ஆர்.பிரகாஷ்

இந்த உலகம் சிறுவர்களின் எதிர்காலத்தைத் தொடர்ந்து சவாலுக்கு உட்படுத்தியே வந்துள்ளது. வருகின்றது. இதற்குப் பல்வேறு உதாரணங்களை வரிசையாக எடுத்துக் காட்டலாம்.

வியட்நாம் போரில் குழந்தைகள் எவ்வாறு வதைபடுகின்றார்கள் என்பதற்கு இரசாயனத் தாக்குதல் ஒன்றின்போது நிர்வாணமாக ஓடிவந்த சிறுமி மிகச் சிறந்த உதாரணம், சிரியாவில் இடம்பெறும் உள்நாட்டுப் போரால் வெளியேறும் அகதிகளின் துயரத்தை படம்பிடித்துக் காட்டியவன் அய்லான் என்ற பாலகன்தான்.

பாகிஸ்தானில் பெண்கள் கல்விக்கு எதிராகப் பெரும் அடக்குமுறை பிரயோகிக்கப்படுகின்றது என்பதை புட்டுப்புட்டு வைத்தவள் மலாலா என்ற பதின்ம வயதுச் சிறுமிதான். பருவநிலை மாற்றத்துக்கு எதிரான போராட்டங்கள் உச்சம் கண்டிருக்கின்றன என்றால் அதற்குக் காரணம் கிரெட்டா தன்பேர்க் என்ற சிறுமிதான். இந்த வரிசையின் ஆகப் பிந்திய வரவு ஆஸ்திரேலியச் சிறுவன் குவாடன்.



## தற்கொலைக்காக தவித்தவன்

ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பெய்னைச் சேர்ந்தவர் யாரகா பேல்ஸ் என்ற பெண். இவர் இந்தக் கதையின்நாயகன் குவாடனின் தாயார். யாரகா ஒரு காணொளியை கடந்த வாரம் வெளியிட்டிருந்தார். அதில் அவரது மகன் குவாடன் தேம்பித் தேம்பி அழுதவாறு பேசுகின்றான். எனக்கு ஒரு கயிறு கொடுங்கள் அம்மா. நான் தற்கொலை செய்துகொள்ளப் போகிறேன். எனது இதயத்தில் கத்தியால் குத்திக்கொள்ள விரும்புகிறேன். என்னை யாராவது கொன்றுவிட வேண்டும் என விரும்புகிறேன் என்று புலம்புகின்றான். குவாடனின் பீறிட்ட அழுகைக்கு என்ன காரணம். குவாடன் மரபணு நோயால் பாதிக்கப்பட்டவன். வயதுக்கு ஏற்ற வளர்ச்சி இல்லாமல் குள்ளமாக இருப்பால் வகுப்பில் சக மாணவர்கள் அவனை ஏளனம் செய்தும் துன்புறுத்தியும் வந்துள்ளனர். இதுவே அந்தப் பிஞ்சு தற்கொலையை தன் உயிரினும் மேலாக நேசிக்க காரணமாக அமைந்துவிட்டது.

**குவிந்த ஆதரவு**

குவாடனின் காணொளி இரண்டு நாள்களில் சுமார் 5 கோடிப் பேரால் பார்க்கப்பட்டது. அவனுக்கு ஆதரவு ஒவ்வொரு மணிநேரமும் எகிறிக்கொண்டே இருந்தது. கடந்த வாரம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ரக்பி ஆட்டமொன்றில் குவாடன் விருந்தினராக அழைக்கப்பட்டு, ஆஸ்திரேலிய அணியை வழிநடத்தினான். ஹொலிவூட், பொலிவூட் நடிகர்களும் குவாடனுக்கு பெரும் ஆதரவை வழங்கினர். சுமார் 10 கோடி ரூபா நிதி திரட்டப்பட்டு குவாடனுக்கு வழங்கப்பட்டது. 10 கோடி என்ற இமாலயத் தொகையை 'தன் உயரத்தால்' உதறியுள்ளான் குவாடன்.

தன்போன்றிருக்கும் சிறு வர்களுக்கு இந்தத் தொகை உதவட்டும் என்று முடிவெடுத்திருக்கின்றான் அவன். 'என் மகனைப் போன்ற வாழ்க்கையை யாரேனும் வாழ்ந்திருந்தால் அவர்களுக்கு இந்த நிதி உதவட்டும். அவனின் அன்றாட வாழ்வில் அவன் எதிர்கொண்ட சவால்களை விளையாட்டு என எதிர்கொண்டு எங்கும் தப்பித்திருக்க முடியாது. யாரும் அதுபோல் வாழக்கூடாது. என் மகனுக்கு என்ன நேர்ந்தது என அனைவருக்கும் தெரியும். அவன் கிண்டலுக்கு ஆளானான். நம்முடைய சமூகத்தில் இதுபோன்ற கேலி, கிண்டல்களால் கறுப்பின, வெள்ளை இனத்தில் எத்தனை பேர் தற்கொலை செய்துள்ளார்கள். குவாடன் இந்தப் பணத்தை தொண்டு நிறுவனங்களுக்கு வழங்க முடிவெடுத்துள்ளான். அவர்களுக்குத்தான் இந்தப் பணம் தேவைப்படுகிறது. அவர்களுக்குத்தான் இந்தப் பணத்தை எவ்வாறு செலவு செய்ய வேண்டும் என்பது தெரியும்' என்கின்றார் குவாடனின் தாயார்.

**கற்பிதம் செய்கின்றான்**

குவாடனின் பிரச்சினை தனியே குவாடனுக்கு மட்டுமான பிரச்சினை இல்லை. எள்ளல்களும், கேலிப் பேச்சுக்களும் நிறைந்தது இந்த உலகு. இதில் குவாடன் போன்றவர்களுக்கு இருப்பேயில்லை. நாம் அனைவரும் அவ்வாறானவர்களைக் கடந்துதான் பயணித்திருப்போம். குவாடன் போன்றவர்களுக்கு நிகழ்ந்த கொடுமைகளுக்கு நாமும் தனிமனிதச் சாட்சிகள்தான். எம்மைப்போன்றவர்கள் தன்னை எப்படி அணுகவேண்டும் என்பதற்கு தக்க கற்பிதம் செய்துவிட்டு சத்தமில்லாமல் செல்கின்றது கங்காருகளின் தேசத்துக் கங்காருக் குட்டியொன்று.






உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பாண்டவர்கள் செய்தது சகோதரப்படுகொலையா?

**மகாபாரதப் போரின் முதல் நாள்.**

குருஷேத்திரக் களத்தினுள் அர்ச்சுனனின் தேர் நுழைகின்றது. தேரோட்டியது கிருஷ்ணன். வீரத்துக்கும், ஒழுக்கத்துக்கும் பெயர் பெற்ற அர்ச்சுனன் போர்க்களத்துக்குள் நுழைந்ததுமே அவன் வீரம் இருந்த இடம் தெரியாமல் ஒளிந்து கொள்கின்றது. கையிலிருந்த வில் அவனையறியாமலே கீழே விழுகின்றது. கால்கள் துவள்கின்றன. கிருஷ்ணனுக்கு ஒரே ஆச்சரியம். அர்ச்சுனனை ஒருநாளும் அவன் அப்படிப் பார்த்ததில்லை.

"அர்ச்சுனா, என்னாயிற்று உனக்கு. எடு வில்லை, தொடு போரை" என்று சொன்னான்.

"கண்ணா, எப்படிப் போர் புரிய முடியும்? எனக்கு எதிராக நிற்பவர்கள் எல்லாமே நேற்றுவரை என் பிரியத்துக்குரியவர்கள். என் உறவுகள், சகோதரர்கள். அவர்களை எப்படி நான் போர் புரிந்து கொல்வேன்?"

என்று அவன் கதறினான். ஆனால் மாயக்கண்ணன் புன்முறுவலோடு, அர்ச்சுனனுக்குப் போரியல் விதிகளையும், உலக நியதியையும் தெளிவாக எடுத்துச் சொன்னான்.

" போரில் சகோதரர்கள் என்றால் கூட எதிரிகளாகிவிட்டால், கொல்வதே தர்மம். தர்மத்தை நிலைநாட்ட யார், எவர் என்று பார்ப்பதை விடவும், தர்மத்தின் பக்கம் நிற்பவர்களைக் காப்பதும், அதர்மத்தை அழிப்பதுவுமே சுத்தவீரனுக்கு அழகு" என்ற ரீதியில் கண்ணனின் உபதேசங்களால் அருச்சுனன் தெளிந்தான். பாரதப்போரில், அதர்மத்தின் பக்கம் நின்ற பாண்டவர்களின் சகோதரர்களான கௌரவசேனை அழிக்கப்பட்டு, உலகில் தர்மம் நிலைநாட்டப்பட்டது. உலகமே பாண்டவர்களைக் கொண்டாடியது; கொண்டாடி வருகின்றது. எவருமே இதுவரை பாண்டவர்கள் பாசிசவாதிகள் என்றோ, சகோதரப்படுகொலை செய்து ஜனநாயகத்தைப் புதைத்தவர்கள் என்றோ ஒருபோதும் சொன்னதில்லை. ஆனால், இதே செயலைச் செய்த விடுதலைப் புலிகளை மட்டும் ஒருசிலர் தம் அரசியல் நோக்கங்களுக்காக அல்லது சர்ச்சையை உண்டுபண்ணி தம் மீதான கவனக்கோரலுக்காக 'புலிகள் சகோதரப் படுகொலை செய்தார்கள்' என்ற ரீதியில் வசைபாடத் தொடங்கி விட்டனர். தேர்தல் காலத்தில் சிலருக்கு இப்படியான புலிவசை பாடுவதென்பது ஒரு வருத்தமாகவே மாறிவிட்டது.

புலிகள் ஒருபோதுமே வலிந்து சகோதர இயக்கங்களைப் போட்டுத் தள்ளியவர்கள் இல்லை. அத்தோடு மாற்று இயக்கங்களும் அந்தளவுக்கு புனிதங்களைப் பூசியவையும் அல்ல. இந்திய, இலங்கை அரசுகளின் இரகசிய ஏவலாளிகளாக அந்த இயக்கங்கள் மாறி, போராடப் புறப்பட்ட இலட்சியத்துக்கு எதிரான திசையில் பயணிக்கத் தொடங்கின. பொதுமக்களைக் கடத்துதல், கப்பம் பெறல், விடுதலைப் புலி உறுப்பினர்களைக் கொல்லல் என்று சினமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டன. அதனால் தான் அத்தகைய இயக்கங்களில் சித்திரவதைக்கென்றே சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள் உயர்பதவியில் இருந்தார்கள். சித்திரவதைக்கென தனிப்பிரிவுகள் கூட இருந்தன. வவுனியா உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்களையும், புலிகளையும் அடைத்துவைத்துக் கொலை செய்யவென மிகப்பெரிய வதைக் கூடங்களை அமைத்த சில இயக்கங்கள் வைத்திருக்கவும் செய்தன.

இப்படி குள்ளநரிகளாக மக்களையும், தம்மையும் பலியெடுக்கும் பதர்களைப் பார்த்துக் கொண்டு ஓர்மமும், ஒழுக்கமும் கொண்ட புலிகள் எத்தனை நாளுக்குத் தான் பதுங்கி இருக்க முடியும். ஒரு கட்டத்தில் பொறுமையை உடைத்துக் கொண்டு, அவர்கள் குள்ளநரிக் கூட்டத்தின் மீது பாய்ந்தார்கள். புலிகள் கொஞ்சம் பதுங்கும் போது ஆடிய நரிகள் கூட்டம் சின்னாபின்னமாகி, களைகள் களையப்பட்டு, தமிழின விடுதலைப் போர் புனிதமானது. இதைச் சகோதரப் படுகொலை என்றால், மகாபாரதத்தில் வருகின்ற பாண்டவர்கள் செய்ததும் சகோதரப்படுகொலைதான். அப்படியல்லாமல் பாண்டவர்கள் , கொடிய கௌரவர்களைக் கொன்றமைதான் தர்மம் என்றால் புலிகள் செய்ததும் போரியல் தர்மமே. தர்மத்துக்கான போரில் , அநீதியின் பக்கம் எவர் நின்றாலும்அது சகோதரனாக இருந்தாலும் கூட அவர்கள் மீது பாரபட்சம் காட்டமுடியாது என்பதே மகாபாரதத்தில் கண்ணன் சொன்ன கீதா உபதேசம். ஆகவே புலிகள் செய்தது ஒருபோதும் பாசிசமோ, சகோதரப் படுகொலையோ கிடையாது என்பது மக்களுக்கு நன்கு தெரியும். அதனால் தான் என்ன இழப்பு வந்தபோதும், புலிகள் பக்கம் நின்றார்கள்.

மக்களிடமிருந்து அந்நியப்பட்டு நிற்பவர்களால் மக்களின் மனதுக்குள் இன்னமும் இதய தெய்வங்களாக இருப்பவர்கள் யார் என்பது பற்றியோ, தமிழ்த் தேசியம் பற்றியோ, புலிகளின் தியாகம் பற்றியோ புரிந்து கொள்ளமுடியாமல் போவதில் அதிசயமொன்றுமில்லைத்தான். ஆனாலும் தமது காவல் தெய்வங்களாக இருந்தவர்கள் மீது களங்கம் பூசுபவர்களை இனங்கண்டு, அவர்களின் அதிகார இருப்பியலை இல்லாததாக்கும் வல்லமை மக்களுக்கு மட்டுமே உண்டு. அதைக் காலம் வரும்போது கட்டாயம் செய்வார்கள்.

# அரச சார்பற்ற நிறுவனங்களை கட்டுப்படுத்த புதிய திட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச்.2

வடக்கு, கிழக்கில் பணியாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், மாவட்டச் செயலகங்கள் ஊடாக அரசு புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச தொண்டு நிறுவனங்கள் உள்ளூரில் சிறு உதவிகள் என குடும்பங்களிடம் நேரடியாகச் சென்று சந்திப்பதோடு, மாவட்டங்கள், கிராமங்களில் உள்ள விடயங்களை உடனுக்குடன் அறிவதால் அதனைத் தடுக்கும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களை சாதாரண சிறுவேலைகளில் ஈடுபடாமல், பெரிய வேலைத்திட்டங்கள் மற்றும் இனம்காணப்பட்ட வேலைகளை அடையாளம் கண்டு பணியாற்றுமாறு மாவட்டச் செயலாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் செயல்பாடானது மக்கள் தொடர்பான தகவல்கள் வெளிவருவதனைத் தடுக்கும் புதிய முயற்சி என்று குற்றம் சாட்டப்படுகின்றது. (க-105)

## தேவாலயத்துக்குள் நுழைந்த முஸ்லிம்கள் நால்வர் கைது!

கொழும்பு, மார்ச் 2

மட்டக்களப்பு புனித செபஸ்ரியான் தேவாலயத்தில் ஆராதனை இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 2 பெண்கள் உட்பட நான்கு முஸ்லீம்கள் தேவாலயத்துக்குள் சென்றதால் பரபரப்பு ஏற்பட்டது. அவர்கள் நால்வரையும் பொதுமக்கள் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று நடந்தது என்று மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர். கல்லடி பாலத்துக்கு அருகில் அமைந்திருக்கும் அந்தத் தேவாலயத்தில் நேற்று ஞாயிறு காலை ஆராதனை இடம் பெற்றுக் கொண்டிருந்தது. அப்போது இரு பெண்கள் உட்பட 4 பேர் கொண்ட முஸ்லீம்கள் ஆலயத்தினுள் நுழைந்துள்ளனர். ஆராதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மக்கள் பீதியடைந்தது அவர்களைப் பிடித்து ஆலயத்தின் அருட் தந்தையிடம் கையளித்து பொலிசாரிடம் ஒப்படைத்தனர். சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அம்பாறை இறக்காமம் பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய பெண், 39 வயதுடைய வாய் பேசமுடியாத மகள், 23 வயதுடைய மகன், 33 வயதுடைய மருமகன் எனத் தெரியவந்துள்ளது. இவர்கள் வாய் பேசமுடியாத மகளின் நோயைக் குணப்படுத்துவதற்காக மட்டக்களப்பு சீயோன் தேவலாயத்துக்கு வந்தனர் என்றும், அங்கு ஆலயம் பூட்டப்பட்டிருந்ததால், ஆராதனை வேறு இடத்தில் நடப்பதாக அறிந்து இந்த தேவாலயத்துக்குள் சென்றார்கள் எனப் பொலிசாரின் ஆரம்ப விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மட்டக்களப்புத் தலைமையக பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (எ-22)

## விஜேவீரவின் புதல்வர் மகிந்த அணியில்?

கொழும்பு, மார்ச் 2

மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபகத் தலைவரும், புரட்சியாளருமான ரோகண விஜேவீரவின் புதல்வர் உவிந்து விஜேவீர எதிர்வரும் பொதுத் தேர்தலில் மொட்டுச் சின்னத்தில் போட்டியிடவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் உவிந்து விஜேவீரவை அண்மையில் சந்தித்துள்ளார்.

இதன்போது பொதுத்தேர்தலில் தங்களது கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதமாக கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட வேண்டும் என்று உவிந்து விஜேவீரவை இருவரும் கோரினர் என்று கூறப்படுகின்றது. உவிந்து கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட அதிகம் விரும்புகின்றார் என்று கூறப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் ரோகண விஜேவீரவின் மனைவி சித்ராங்கனி விஜேவீரவும் உடன் இருந்தார் என்று கூறப்படுகின்றது. (எ)

## மத மாற்றத்தால் பௌத்த மக்களுக்கே அதிகம் பாதிப்பாம்!

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

மத மாற்றத்தால் பௌத்த மக்கள்தான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொண்ட வெற்றியைத் தக்க வைக்க வேண்டுமானால் நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றே ஆக வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த நவம்பரில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் சர்வதேச சதித் திட்டங்களுக்கு மத்தியில் தான் இடம்பெற்றது. தேரர்களின் ஒத்துழைப்பாலேயே, கடந்த 5 வருடங்களாக நாட்டையே அழிவுக்குட்படுத்திய அரசை எம்மால் கவிழ்க்க முடிந்தது. இதன் ஊடாக நாட்டையும் பௌத்தத்தையும் நாம் பாதுகாத்துள்ளோம். மக்களும் யதார்த்தத்தையே விரும்புகிறார்கள் என்பதையும் நாம் இதன் ஊடகத் தெரிந்துக்கொண்டோம். எனினும் இன்னும் சிலர் இந்த யதார்த்தத்தை இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்பதையும் நாம் கூறியே ஆக வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியும், பிரதமராக நானும் பதவியேற்றுக்கொண்டாலும், நாடாளுமன்றில் எமக்கு பெரும்பான்மைபலம் கிடையாது. எதிர்த்தரப்பினரே நாடாளுமன்றில் பலம் மிக்கவர்களாக இருக்கிறார்கள். 19ஆவது திருத்தச்சட்டத்தின் விளைவாகவே இது ஏற்பட்டுள்ளது. அதனால் எந்தவொரு அபிவிருத்திகளையும் மேற்கொள்ள முடியாதுள்ளது. நவம்பரில் நாம் பெற்றுக்கொண்ட வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமெனில், நாம் எதிர்காலத்தில் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. தற்போது மதமாற்றத்தால், பௌத்த மக்கள்தான் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். இது தொடர்பாக அனைவரும் அவதானத்துடன் இருக்க வேண்டும். என்றார். (எ)

**"ஆப்கானிஸ்தானில் கடந்த 40 ஆண்டுகளாக நடைபெற்றுவந்த நீண்ட போர் முடிவுக்கு வந்துள்ளது. ஆப்கானிஸ்தான் உலகின் நிகழ்காலப் போர்க்களம் என்று விவரிக்கப்படும் அளவுக்கு அதன் கடந்த காலம் துயரங்களாலும் மனிதச் சதைகளாலும் நிரம்பியது. இத்தகைய பின்னணியில் ஆப்கான் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்ப்பதென்பது தவிர்க்க முடியாததாகின்றது. அதை முன்னிட்டு இந்தப் பதிவுகள் வெளிவருகின்றன."**



# 40 ஆண்டு காலத்தை போரில் கழித்த ஆப்கன்!

ஆப்கானிஸ்தானின் கடந்த 40 ஆண்டுக்கால வரலாறு என்பது ஏவுகணைகளாலும், துப்பாக்கிக் குண்டுகளாலும், மனிதர்களின் குருதிகளையும், உடல்களையும் சுமந்து வந்த வரலாறு. முதலில் சோவியத்யூனியன், பின்னர் தலிபான்கள், அல்கொய்தா, அமெரிக்கா என இந்தப் போரின் ஆக்கிரமிப்புக்கும், அதிகார வேட்கைக்கும் இந்த நாட்டு மக்கள் தங்கள் அமைதியையும், உயிரையும் தியாகம் செய்துள்ளார்கள்.

கடந்த 1979ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் திகதி சோவியத் யூனியனின் 'ரெட் ஆர்மி', ஆக்ஸஸ் ஆற்றைக் கடந்து ஆப்கானிஸ்தானுக்குள் புகுந்தது. அதன் பின் சோவியத்யூனியனுக்கு எதிராகப் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் முஜாகிதீன் ஆகியோர் அமெரிக்க நிதியுதவியுடன் போரிடத் தொடங்கினார்கள். அன்று தொடங்கிய போர் அதன்பின் நிற்கவே இல்லை. ஆப்கானிஸ்தான் கடந்த 40 ஆண்டுகாலத்தில் கடந்து வந்த பாதையைச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

1980 -பாகிஸ்தான் சர்வாதிகாரி முகமது ஜியா உல் ஹக் மூலம் பண உதவியும், ஆயுத உதவியும் அமெரிக்க சிஐஏ ஆப்கானிஸ்தானுக்கு வழங்கியது.

1983- அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகன், ஆப்கானிஸ்தான் முஜாகிதீன் தலைவர்களை வெள்ளை மாளிகைக்கு அழைத்துப் பேசினார். (தலிபான்களை வளர்த்துவிட்டதே ஒருவகையில் அமெரிக்காதான்)

1986(செப்) - ஆப்கானிஸ்தான் முஜாகிதீன்களுக்கு தேவையான ஆயுதங்களும், விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் வழங்கியது. சோவியத் யூனியனுடன் பேச்சு தீவிரமானது.

1987(ஜனவரி) -ஆப்கானிஸ்தான் கம்யூனிஸ்ட் தலைவர் நஜிபுல்லா தேசிய மறுமலர்ச்சி திட்டத்தைக் கொண்டுவந்து, முஜாகிதீன்களை புதிய அரசில் பங்கேற்க அழைத்தார். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டனர்.

1989 (பெப்ரவரி) -கடந்த 10 ஆண்டு ஆக்கிரமிப்புக்குப்பின் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற சோவியத்யூனியன் சம்மதித்தது.

1992 (ஏப்ரல்) -முஜாகிதீன் படையினர் காபுலுக்குள் புகுந்து நஜ்புல்லாவை விடுவித்தனர். ஆனால்




விமானநிலையம் வரும்போது அவர் சிறைபிடிக்கப்பட்டு ஐ.நா. முகாமில் தங்கவைக்கப்பட்டார்.

1992-1996 -முஜாகிதீனின் 7 பிரிவுகளுக்கு இடையே அதிகாரத்தைப் பகிர ஒப்பந்தம் செய்யப்பட்டது.

1994 - முஜாகிதினின் முன்னாள் உறுப்பினர்கள் சிலர் சேர்ந்து தெற்கு காந்தகாரில் தலிபான் படையினராக உருவெடுத்தார்கள்.

1996செப்.26 - கடுமையான சண்டைக்குப்பின் காபூல் நகரை தலிபன்கள் கைப்பற்றினர்.

1996-2001-தொடக்கத்தில் போரை முடித்துக்கொள்ள தலிபன்கள் ஒப்புதல் அளித்தனர். ஆனால், முல்லா ஓமர் தலைமையில் தலிபான்கள் ஆட்சி மிகக் கடுமையாக இருந்தது. தீவிர இஸ்லாமியக் கொள்கைகளைப் பின்பற்றினர். பெண்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டன, கல்வியும் மறுக்கப்பட்டது.

2000 - தலிபன்கள் ஓபியம் போதைப்பொருட்கள் உற்பத்தியை ஒழித்தனர். இதனால் அந்த தொழிலில் இருந்த ஏராளமான மக்கள் ஏழைகளாகினர்.

2001மார்ச் - பாமியன் மாகாணத்தில் இருந்த மிகப் பெரிய புத்தர் சிலையை உடைத்தனர். இது உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

2001செப் - பில்லேடனை ஒப்படைக்குமாறு முல்லா ஓமருக்கு அமெரிக்க இறுதிக் கெடு விதித்தது.

2001, ஒக்டோபர் 7 அமெரிக்கக் கூட்டுப்படைகள், ஆப்கானிஸ்தானில் படையெடுத்தன.

2001நவம்பர் 13 - தலிபான்களிடம் இருந்து காபூலை அமெரிக்க கூட்டுப்படைகள் மீட்டு, தலைநகருக்குள் நுழைந்தன.

2001டிசெம்பர் 7 - காந்தகாரில் இருந்து முல்லா ஓமர் விலகிச் சென்றபின், தலிபான் ஆட்சி சீர்குலையத் தொடங்கியது.

2001டிச 22 - காபுல் நகருக்கு கர்ஸாய் வருகை. ஆப்கானை நிர்வகிக்கும் 29 உறுப்பினர்களுக்கும் கர்ஸாய் தலைவராகப் பொறுப்பேற்பு.

2004-2009 ஆப்கானில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டு, அங்கு கர்ஸாய் அதிபராகத் தேர்வுசெய்யப்பட்டார்.

2014ஏப்.5 - ஆப்கானிஸ்தானில் நடந்த தேர்தலில் அஸ்ரப் கானி, அப்துல்லா இருவரும் வெற்றி பெற்றவர்களா அறிவிக்கப்பட்டனர். அதன்பின் அதிகாரப்பகிர்வு அடிப்படையில் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜான் கெர்ரி நடத்திய பேச்சின் அடிப்படையில் அஷ்ரப் கானி அதிபராகவும், அப்துல்லா தலைமை நிர்வாகியாகவும் நியமிக்கப்பட்டனர்.

2015-2018 - தலிபான்கள் மீண்டும் வலிமையாக உருவெடுத்து, நாள்தோறும் ஆப்கன் அரசுக்கும், அமெரிக்கப் படைகளுக்கும் எதிராகத் தாக்குதல் நடத்தினர். கிழக்குப்பகுதியில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கம் உருவாகியது, தலிபான்கள் பாதிக்கும் மேற்பட்ட நாட்டை கைப்பற்றினர்.

2018 செப் - அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்கப் படைகளை திரும்பப்பெறும் வகையில் தலிபான்களுடன் பேச்சு நடத்த அமெரிக்க அதிகாரி ஜல்மே கலிஜாத்தை நியமித்தார்.

2019 செப் - ஆப்கானிஸ்தானில் அதிபர் தேர்தல் நடத்தப்பட்டு பலமாதங்கள் முடிவு அறிவிக்கப்படவில்லை.

2019, நவம்பர் 24- ஆப்கானிஸ்தான் சென்று அமெரிக்கப் படைகளை அதிபர் ட்ரம்ப் பார்வையிட்டார். தலிபன்களுடன் அமைதி ஒப்பந்தம் குறித்த பேச்சை அதிபர் ட்ரம்ப் அறிவித்தார்.

2020, பெப்ரவரி 18 - ஆப்கானிஸ்தான் தேர்தலில் அஷ்ரப் கானி வெற்றி பெற்றதாகத் தேர்தல் ஆணையம் அறிவித்தது. ஆனால் அப்துல்லா தேர்தல் முடிவை ஏற்க மறுத்துவிட்டார்.

2020, பெப்ரவரி 28 - அமெரிக்கா, தலிபன் இடையே கட்டார் தலைநகர் டோஹாவில் அமைதி ஒப்பந்தம் கையொப்பமானது. அமெரிக்கப் படைகள் அடுத்த 14 மாதங்களில் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற முடிவு செய்யப்பட்டது.

## குருதித்தானம்

வவுனியா,மார்ச்.2
பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஊழியர் தெய்வேந்திரன் பகீசனின் நான்காவது வருட நினைவாக, பிரதேச அபிவிருத்தி வங்கியின் வடமாகாண ஊழியர் நலன்புரி சங்கம் நடத்திய குருதித்தான முகாம், வவுனியா பிரதேச அபிவிருத்தி வங்கியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.
தெய்வேந்திரன் பகீசனின் திருவுருவப்படத்துக்கு விளக்கேற்றி, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து குருதித்தானம் வழங்கப்பட்டது. (க-110)





# சங்கிலிப் பாலத்தால் பயணிப்பது சங்கடம்

## சீரமைக்குமாறு மக்கள் கோரிக்கை



முல்லைத்தீவு, மார்ச் 2
முல்லைத்தீவு நகரை அண்மித்துள்ள சங்கிலிப் பாலம் சில வருடங்களுக்கு முன்னர் பாதிப்படைந்தபோதும், இதுவரை சீரமக்கப்படவில்லை. அதனால் அந்தப் பாலத்தால் பயணம்செய்யமுடியாத நிலையில், அதைச் சுற்றிப் பயணிக்கவேண்டியநிலைமை இன்னும் நீடித்துக்கொண்டிருக்கின்றது என்று பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சங்கிலிப் பாலம் முல்லைத்தீவு பரந்தன் பிரதான வீதியில் முல்லைத்தீவு நகரை அண்மித்துக் காணப்படுகின்றது.
சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட பாலமே இவ்விதம் பாதிக்கப்பட்டுள்ளது.
சங்கிலிப்பாலம் சேதமடைந்ததால், பாலத்தின் இரு புறமும் வீதித்தடை ஏற்படுத்தப்பட்டு, பாலத்தின் அருகே சிறியதொரு பாதை தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளது.
தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள வீதிக்கு மேலால் மழைக் காலங்களில், இரண்டு அடிக்கு வெள்ளம் மூடிப் பாயும். இதனால் அந்த வீதியில் பயணிக்கமுடியாத நிலை ஏற்படும். பாடசாலை மாணவர் ஒருவர் சில வாரங்களுக்கு முன்னர் குறித்த பாலத்துக்கு அருகே விபத்துக்குள்ளாகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
பிரதான வீதியில் அமைந்துள்ள மிக முக்கிய பாலமாகவும், இது உள்ளது. இது தொடர்பில் பல தடவைகள் உரியவர்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தும், யாரும் கவனம் செலுத்தவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. எனவே எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளைக் கருத்திற்கொண்டு, உடனடியாக இந்தப் பாலத்தைச்சீரமைத்துத்தரவேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுக்கின்ற னர். இது பற்றி முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர் க.கனகேஸ்வரனிடம் கேட்டபோது, முல்லைத்தீவு மாவட்டத்தில் மிக முக்கிய மூன்று பாலங்களான வட்டுவாகல் பாலம், சங்கிலிப் பாலம், கொக்கிளாய் பாலம்என்பவைசீரமைக்கப்பட வேண்டியுள்ளன. இது பற்றிய கோரிக்கைகள் மற்றும் திட்டங்கள் உரிய அமைச்சுக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
இந்தச் சீரமைப்புத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு உரியவர்களிடம் நிதி கோரப்பட்டுள்ளது. பெருந்தொகை நிதி தேவைப்படுவதன் காரணமாக, இதுவரை அந்த நிதி கிடைக்கப்பெறவில்லை. அந்த நிதி கிடைக்கப்பெற்றதும் குறித்த பாலங்களை மறுசீரமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். - என்றார். (த-246)

## பிரிட்டன் நாட்டவர் மூழ்கிச் சாவு

கொழும்பு, மார்ச் 2
வெலிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொல்வது மோதர பகுதியில் கடலில் நீராடச் சென்ற வெளிநாட்டுப் பெண் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் பிரிட்டனைச் சேர்ந்த 62 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அவரது உடல் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைகளுக்காக மாத்தறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்றும், சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## சீனக் கடலட்டை பண்ணைக்கு சீல்

மன்னார்,மார்ச்.2
மன்னார் மாவட்டத்தில் இயங்கிய சீன நாட்டவர்களின் கடலட்டைப் பண்ணை, உரிய சட்ட திட்டங்களைப்பின்பற்றிச் செயற்பட வில்லை எனத் தெரிவித்து கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளால் சீல் வைக்கப்பட்டது.
மன்னாரில் இயங்கும் பண்ணையில் ஆயிரம் கிலோவையே கையிருப்பில் வைத்திருக்க முடியும் என்ற நிலையில், இந்தப் பதப்படுத்தல் ஏற்றுமதிப் பண்ணையில் பல ஆயிரம் கிலோ கடலட்டைகள் சேமிப்பில் வைக்கப்பட்டிருந்தன எனத்தெரிவிக்கப்டுகிறது. மாவட்டத் திணைக்களத்துக்கு அப்பால், பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் இருந்து வருகை தந்த அதிகாரிகள் குழுவினர் அங்கு திடீர்ச் சோதனையில் ஈடுபட்டனர். இதன்போது 2 ஆயிரம் கிலோவுக்கு மேற்பட்டகடலட்டைகள் கையிருப்பில் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. அதனையடுத்து அதிகாரிகளால் பண்ணைக்குச்சீல்வைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-105)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் இளைஞர் நாடாளுமன்றத் தேர்தல்

யாழ்ப்பாணம்,மார்ச்.2
யாழ்பல்கலைக்கழகத்திலிருந்து இளைஞர் நாடாளுமன்றுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான இலத்திரனியல் மூலம் வாக்களிப்பு இன்று திங்கட்கிழமை யாழ் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி , வவுனியா ஆகிய வளாகங்களில் அமைக்கப்பெற்ற வாக்களிப்பு நிலையங்களில் நடைபெறும்.
நாடளாவிய ரீதியில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்படும், இளைஞர் நாடாளுமன்றுக்கு, பிரதேச செயலகப்பிரிவு ரீதியாக தலா ஒவ்வொரு உறுப்பினரைத் தெரிவு செய்து கொள்வதற்கான தேர்தல்கள் கடந்த மாதம் நடைபெற்று உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.
இளைஞர் நாடாளுமன்றுக்கு நாடளாவிய ரீதியில் பல்கலைக் கழகங்களிலிருந்து மேலும் 20 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் இன்று காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெறும். யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள தேர்தலில் யாழ், கிளிநொச்சி, வவுனியா வளாகப் பிரிவுகளில் இருந்து 7 பேர் போட்டியிடுவர். இதில் இரண்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். சுமார் 11 ஆயிரத்து 733 பேர் வாக்களிக்கவுள்ளனர்.
இதேவேளை கடந்த காலங்களில் யாழ் பல்கலைக் கழகத்திலிருந்து ஒரு உறுப்பினர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு வந்த நிலையில், முதற்தடவையாக இரண்டு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இளைஞர் நாடாளுமன்றத் தேர்தல்கள் இலத்திரனியல் மூலம் வாக்களிப்பு முறை முதல் தடவையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்டதேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி சிறிமேனன் வினோதினி தெரிவித்துள்ளார். (க-39)





# இசை வெளியீடு

வடமராட்சி,மார்ச்.2
பருத்தித்துறை பண்ணாரி அம்மன் மீது பாடப்பட்ட பாடல்களின் இசை வெளியீடு மேற்படி ஆலய மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
வரணி மத்திய கல்லூரி அதிபர் எஸ்.செல்வவிநாயகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ.சிறி, சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை நகராட்சி மன்றச் செயலாளர் பு.பரமேஸ்வரன், இசைக்கோயில் வெளியீட்டகச் செயலாளர் க.சூரியகுமாரன், புலோலி மத்தி கிராம அலுவலர் தி.இரங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்
நிகழ்வில் சிவசிறீ சபா உதயகுமாரகுருக்கள் வரவேற்புரையையும், நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், நல்லை ஆதீன சிவாச்சாரியர் து.கு ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் ஆசியுரையையும் நிகழ்த்தினர். (க-159)

# வலி. கிழக்கை இரண்டாக பிரிக்கக் கோரி தீர்மானம்

## வலி.கிழக்கு பிரதேச சபை நிறைவேற்றியது

அச்சுவேலி. மார்ச் 2

வலி.கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலக பிரிவை பொது மக்களின் வசதிக்காக, நிர்வாகத்தை இலகுவாக நடைமுறைப் படுத்தும் நோக்கம் கருதி இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க வேண்டும் என்று வலி.கிழக்குப் பிரதேச சபையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற வலி.கிழக்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் பிரதேச சபை உறுப்பினர் இ.மயில்வாகனம் சமர்ப்பித்திருந்த தீர்மானம் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறை வேற்றப்பட்டது. வலி.கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலக பிரிவை இரண்டாகப் பிரிப்பது தொடர்பாக இந்தச் சபையின் தவிசாளர்தியாகராஜா நிரோஷ் கருத்துத் தெரிவிக்கையில், வலி.கிழக்குப் பிரதேச செயலகப்பிரிவு வல்லையில் இருந்து செம்மணி வரையும் உரும்பிராய் ஊரெழு பகுதியையும் உள்ளடக்கிய விசாலமான பிரதேசம். 102.23சதுரகிலோமீற்றர்விஸ்தீரணம் கொண்டது. 22ஆயிரத்து 826 குடும்பங்களையும் 75ஆயிரத்து 334 மக்கள்தொகையையும்கொண்டது. இந்தப் பகுதியை இரண்டு செயலகப் பிரிவுகளாகச்செயற்படவைக்கவேண்டியது காலத்தின்கட்டாயமாகும். மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு வலி.கிழக்குப்பிரதேசசெயலகத்தைஇரண்டு பிரிவுக ளாகப் பிரிப்பதற்கு வலி.கிழக்குப் பிரதேச சபை ஏற்புடைய நடவடிக்கைகளை முன்னெடுக்கும். இரண்டாகப் பிரித்து செயற்பட வைக்கும்போது புதிய செயலகப் பிரிவு அச்சுவேலியை மத்தியாகக்கொண்டு செயற்படவேண்டும். வலி. கிழக்குப் பிரதேசம் விவசாயிகள் பெருமளவில் வாழும் விசாலமான பிரதேசம். இரண்டும் பிரதேச செயலகப் பிரிவுகளாக செயற்படும் போது மக்களுக்கு தமது தேவைகளைச்சிரமமின்றிப் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்படுவதோடு பிரதேசமும் அபிவிருத்தி அடையும் என்றார். (த-11)

### யாழ்.பொலிஸ் நிலையத்தில் வருடாந்தப் பரிசோதனைகள்





யாழ்ப்பாணம்.மார்ச்.2

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தின் வருடாந்த அணிவகுப்புப் பரிசோதனைகள், பொலிஸ் நிலைய மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் தலைமையில் நடைபெற்ற அணிவகுப்புப் பரிசோதனையில் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணவில கலந்து கொண்டு பொலிஸ் அதிகாரிகளுக்கான அணிவகுப்புப் பரிசோதனையை மேற்கொண்டார்.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களும் பரிசோதிக்கப்பட்டனர். அத்துடன் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் பயன்படுத்தப்படும் வாகனங்களும் பரிசோதிக்கப்பட்டன.

பரிசோதனையை அடுத்து, பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கான அணிவகுப்பு மரியாதையும் நடைபெற்றது. (க-111)

### அவதாரப் பெருவிழா

யாழ்ப்பாணம்.மார்ச்.2

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர், ஆன்மிகக்குரு அருள்திரு பங்காரு அடிகளாரின் 80 ஆவது அவதாரப் பெருமங்கல விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கல்வியங்காடு மேல்மருவத்தூர் சுயம்பு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தில் நடைபெறும். (க)

## நிறைவான கிராமம் திட்டத்தை பொறுப்பேற்காதிருக்க முடிவு

### வலி.கிழக்குப் பிரதேச சபையின் சிறப்புக் கூட்டத்தில் தீர்மானம்

அச்சுவேலி, மார்ச் 2

வலி.கிழக்குப் பிரதேச சபைப் பிரிவில், கிராமப் பொது அமைப்புக்களின், மக்களின் விருப்பில் தெரிவுசெய்யப்பட்ட 'நிறைவான கிராமம்' (சப்ரிகம) வேலைத் திட்டம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், அத்தகைய வேலைத் திட்டங்களை பிரதேச சபை பொறுப்பேற்று நிறைவுசெய்வதில்லை என்று சபையின் சிறப்புக் கூட்டத்தில் தீர்மானி க்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக தலா 20 லட்சம் ரூபாவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இந்த நிதியில் என்னென்ன வேலைகள் இடம்பெறவேண்டும் என்று கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்கம், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் நிர்வாகிகள் உள்ளடங்கிய கூட்டத்தில் தீர்மானி க்கப்பட்டிருந்தன.

அந்த வேலைத்திட்டத் தெரிவுகள் தனிப்பட்ட முறையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு, வலி.கிழக்குப் பிரதேச சபையின் மேற்பார்வையில் நிறைவு செய்யப்பட வேண்டிய வேலைத் திட்டங்களில் 31 வேலைத்திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

வலி.கிழக்குப் பிரதேச சபை நிறை வு செய்ய வேண்டிய 49 வேலைத்திட்டங்களில் 18 வேலைத்திட்டங்கள் மட்டும் பொது அமைப்புக்களின் நிர்வாகிகள் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவை என்று கூறப்படுகின்றது.

மேற்படி வேலைத்திட்டத்தில் குழறுபடி செய்தமை தொடர்பாக சிறப்புக் கூட்டம் கூட்டப்பட வேண்டும் என்று வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர்கள் 15 பேர் கையொப்பமிட்டுத் தவிசாளரிடம் கோரியிருந்தனர்.

மேற்படி பிரதேச சபையின் கூட்டத்தில் கிராமமட்ட பொது அமைப்புக்களின் தீர்மானத்தை நிராகரித்துத் தனிப்பட்ட முறையில் தீர்மானிக்கப்பட்ட வேலைத்திட்டங்களைப் பிரதேசசபை பொறுப்பேற்றுக் கொள்வதில்லை எனத் தீர்மானிக்க ப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

'நிறைவான கிராமம்' வேலைத் திட்டங்கள் முன்னரே தெரிவுசெய்யப்பட்டிருந்தன. எனினும், நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் அதில் மாற்றங்கள் செய்துவருகின்றார் என்று பலரும் குற்றஞ்சாட்டிவருகின்றனர். (த-11)

## மாதம் இருதடவை நடமாடும் நீதிமன்று

### வவுனியா வடக்கில் தீர்மானம்



வவுனியா, மார்ச் 2

வவுனியா வடக்கில் மாதத்தில் இரண்டு தடவைகள் நடமாடும் நீதிமன்ற நடவடிக்கை ஏற்படுத்த வேண்டும் என்று பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு உதவிப் பிரதேச செயலாளர் த.தர்மேந்திராவின் ஒழுங்குபடுத்தலில் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் தர்மபால செனவிரட்ன தலைமையில் வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சில நாள்களுக்கு முன்னர் நடைபெற்றது.

இதன்போது, முன்னர் வவுனியா வடக்கு, நெடுங்கேணிப் பகுதிகளில் நடமாடும் நீதிமன்றம் இயங்கியது. பின்னர் போரால் கைவிடப்பட்டிருந்தது. தற்போது மாதத்தில் இரண்டு நாள்கள் வவுனியா வடக்கில் நடமாடும் நீதிமன்றத்தை ஏற்படுத்தித் தருமாறு கிராம மட்ட பொது அமைப்புக்கள் உதவிப் பிரதேச செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர். இது அபிவிருத்திக் குழுக் கூட்டத் தீர்மானத்துக்காக முன்வைக்கப்பட்டது. இது தொடர்பான கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வவுனியா வடக்கில் நடமாடும் நீதிமன்றை அமைக்க அனுமதி வழங்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் வவுனியா மாவட்ட நீதிபதிகளுடன் பேசி குறித்த விடயத்தை முன்னகர்த்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. (த-18)

## சூடுவெந்தபுலவில் சுகாதார நிலையம்



வவுனியா,மார்ச் 2

வவுனியா சூடுவெந்தபுலவு கிராமத்தில் குடும்பநல சுகாதார நிலையம் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டது.

இரண்டு மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட நிலையத்தை நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் மக்களின் பாவனைக்குக் கையளித்தார்.

நிகழ்வில் மேலதிக மாவட்டச் செயலர் ரி.திரேஸ்குமார், வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் க.சிவகரன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பவானி பசுபதிராசா, வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் கெ.தெய்வேந்திரம், செட்டிகுளம் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுரேந்திரன், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், குடும்பநல மருத்துவ உத்தியோகத்தர்கள், மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டனர். (க-110)

# அடிப்படை வசதிகளின்றி அல்லாடும் கணேசபுரம்!

## 10 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்கின்றது துயர வாழ்க்கை

**மன்னார்,மார்ச்.2**

**மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெள்ளாங்குளம் கணேசபுரம் 'சேவா' கிராமத்தைச் சேர்ந்த மக்கள் மீள் குடியேறி சுமார் 10 வருடங்கள் கடந்தும், இதுவரை அடிப்படை வசதிகள் இன்றியும், காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படாத நிலையிலும், சொந்த வீடுகளில் அகதிகளாக வாழும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.**

2012 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தின் அடிப்படையில், போரால் பாதிக்கப்பட்ட, பெண் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பம், மாற்றாற்றல் கொண்டோர் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு காட்டுப் பகுதி துப்புரவு செய்யப்பட்டு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது.

இருப்பினும் வீடுகள் ஒழுங்கான முறையில் அமைக்கப்படவில்லை. தற்போது அவற்றில் அநேகமான வீடுகள் உடைந்த நிலையில் காணப்படுகின்றன. அடிப்படை வசதிகளான போக்குவரத்து வீதிகள், வைத்தியசாலை என எதுவுமே கிராம மக்களுக்கு இல்லை.

காணிகளுக்கான உறுதிபத்திரங்களை உடனடியாக மக்களுக்கு வழங்குமாறு மாகாண காணி ஆணையாளரால் கடிதம் அனுப்பப்பட்ட போதிலும், இது வரை வீடுகளுக்கான காணி ஆவணங்களோ, உறுதிப் பத்திரங்களோ பிரதேச செயலகத்தால் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.



இது குறித்து, பிரதேச செயலாளர் மற்றும் உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்திய போதிலும், அலட்சியமாக பதில் அளிக்கின்றனர். மக்களை மதிக்காது செயற்படுகின்றனர். என்று இந்திய வீட்டு திட்டம் கணேசபுரம் கிராம மக்கள் கவலை தெரிவித்தனர்.

அதேவேளை மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் முன்னாள் கிழக்கு மாகாண காணி ஆணையாளர் மு.குருநாதன் ஊடாக விசேட விளக்கமளிக்கும் கூட்டம் நேற்றுக் கிராமத்தில் நடைபெற்றது. அதில் மக்களின் பிரச்சினைகளை அலட்சியம் செய்யும் அதிகாரிகளுக்கு எதிராக, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்வதுடன், மேல் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்வது தொடர்பாகவும் பரிசீலிக்கப்பட்டது. (க-56)



உடுவில் பிரதேச செயலாளராகக் கடமையாற்றி புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற பிரதேச செயலாளர் சி.ஜெயகாந்த் சுன்னாகம் சமுர்த்தி வங்கிச் சமூகத்தினரால் மதிப்பளிக்கப்பட்டார். (க-39)

# ஆணைக்குழுவின் காலம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 2

அரசியல் பழிவாங்கல் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்ட கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கான கால எல்லை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாளர் வி.பி பர்ல் கே.வீரசிங்க தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த வருடம் நவம்பர் மாதம் 29ஆம் திகதி வரை இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரட்னவின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழு தனது அறிக்கையை ஆறு மாதங்களுக்குள் ஜனாதிபதியிடம் கையளிக்கத் திட்டமிட்டிருந்தது. (எ)

# நாட்டினுடைய பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 2

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்ன ஆகியோர் நாட்டின் பாதுகாப்பை தற்போது உறுதிப்படுத்தியுள்ளனர் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கண்டியில் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவதற்காக பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். ஒவ்வொரு வாரமும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலும் பாதுகாப்புக் கூட்டமும் நடத்தப்பட்டு வருகின்றது. தமது பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்தியா உள்ளிட்ட நாடுகள் அழைப்பு விடுக்கும் பட்சத்தில் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் தயாராக இருக்கின்றோம். - என்றார். (எ)

# உரும்பிராய் நாகபூஷணி ஆலயத்துக்கு மண்டபம்

யாழ்ப்பாணம்,மார்ச்.2

உரும்பிராய் வடக்கு நாகபூஷணி அம்மன் கோவிலில் அமைக்கப்பட்ட மண்டபம் கடந்த வியாழக்கிழமை திறக்கப்பட்டது.

கோவில் நிர்வாக சபைத்தலைவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் மண்டபத்தைத் திறந்தார்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம் சித்தார்த்தனின் நிதி ஒதுக்கீட்டில் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் நேசன் என்பவரது தனிப்பட்ட நிதியில் அமைக்கப்பட்ட ஆலயத்துக்கான தேர்முட்டியும் திறக்கப்பட்டது.

விருந்தினர்கள் ஆலய நிர்வாகத்தினரால் மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் சி.அகீபன் மற்றும் ஊரெழு பகுதிக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாட்டாளர் சி.முகுந்தன், ஆலய நிர்வாகத்தினர், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(க)



# பொலிஸ் சேவைக்கு விண்ணப்பம்கோரல்

கிளிநொச்சி,மார்ச்.2

பொலிஸ் உத்தியோகத்தருக்கான ஆட்சேர்ப்புக்கு, கிளிநொச்சி பொலிஸ் மக்கள் தொடர்பாடல் பிரிவு விண்ணப்பங்கள் கோரியுள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவின் பணிப்புக்கமைவாக பொலிஸ் உத்தியோகத்தர்களைச் சேவைக்கு இணைக்கும் நோக்குடன், நாடு முழுவதும் விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் விண்ணப்பித்தவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளது. எனவே வேலை வாய்ப்புக்காகக் காத்திருக்கும் 18 முதல் 28 வரை வயதெல்லை கொண்ட திருமணமாகாத இளைஞர்கள் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று, தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கிளிநொச்சி பொலிஸ் மக்கள் தொடர்பாடல் பிரிவின் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.ஜெகத் குமார தெரிவித்துள்ளார்.

விண்ணப்பப்படிவங்களை கிளிநொச்சி பொலிஸ் நிலைய மக்கள் தொடர்பாடல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். மாவட்டத்தில் தற்போது காணப்படும் குற்றச் செயல்கள், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்டவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும், மக்களுக்கான பாதுகாப்பு மற்றும் சேவைகளுடன் நாட்டின் சட்டத்தைப் பாதுகாக்கவும் நடைமுறைப்படுத்தவும், பொலிஸ் சேவையில் இணைந்து பணியாற்ற கிளிநொச்சி மாவட்ட இளைஞர்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (க-35)

# ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாடு தீர்க்கப்படும்

## அரசு கூறுகின்றது



கொழும்பு, மார்ச் 2

நீண்டகாலமாக தொடர்ந்துவரும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடுகளை முற்றாகத் தீர்ப்பதற்கு அரசு தீர்மா னித்துள்ளது. ஆசிரியர் சேவையை ஒன்றிணைந்த சேவையாக மாற்றுவதற்கும் அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பு நேற்றுமுன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நீண்டகாலமாக நிலவிவரும் ஆசிரியர்கள் அதிபர்கள் மற்றும் கல்வித் துறையுடன்தொடர்புபட்ட அனைத்துத் தொழில் துறையினரின் சம்பளம் மற்றும் சேவை நிலை தொடர்பான பிரச்சினைகள் மீது அரசு கவனம் செலுத்தியுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவைக்கான அனைத்து சேவைகளையும் ஒன்றிணைந்த சேவையாக்குவதுடன், சம்பளம் மற்றும் சேவை யாப்பை வகுத்து பொருத்தமான சம்பள முறை ஒன்று வகுப்பது, அத்தியாவசியமாகும்.

ஜனாதிபதியின் சுபீட்சமான தொலை நோக்கு கொள்கைத் திட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆசிரியர், அதிபர்சேவையில் உள்ள சம்பள முரண்பாடுகள் குறித்து கல்வி அமைச்சரால், அமைச்சரவைக்கு விரிவான வகையில் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அரச சேவையில் சம்பளம் தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொண்டு, நிலவும் முரண்பாடுகளை நீக்கக்கூடிய வகையில் புதிய சம்பளக் கொள்கை ஒன்றை வகுப்பதற்காக ஜனாதிபதியால் அண்மையில் தேசிய சம்பள ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய தேர்தலின் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முதலாவது வரவுசெலவு திட்டத்திலேயே ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளுக்குத் தீர்வு வழங்கப்படும்.என்றார். (எ-24)



## ‘கிராமத்துக்கு வீடு’ திட்டத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 2

கிராமத்துக்கு வீடு எனும் திட்டத்தின் கீழ் கிளிநொச்சியைச் சேர்ந்த மூன்று பிரதேச செயலர் பிரிவுகளிலும், சில வீடுகளுக்கான அடிக்கல் நடப்பட்டது.

புதிய அரசின் புதிய திட்டத்துக்கு அமைவாகவே கிராமத்துக்கு வீடு எனும் தொனிப்பொருளில் இந்த வீடுகளுக்கான அடிக்கல் கடந்த வியாழக்கிழமை நடப்பட்டது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் அரசக்கேணி கிராமத்திலும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் காஞ்சிபுரம் கிராமத்திலும் மற்றும் கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிருஷ்ணபுரம் கிராமத்திலும் வீட்டுக்கான அடிக்கல் நடப்பட்டது.

மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் அடிக்கல்லை நட்டார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புலோப்பளை கிராமத்துக்கு நிறைந்த கிராமம் திட்டத்தினூடாக முன்பள்ளி மற்றும் வைத்தியசாலைக்குமான சுற்றுமதில் கட்டவும் அடிக்கல் நடப்பட்டது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் சுபாஸ்கர், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-214)

## சக்கர நாற்காலி அன்பளிப்பு

வவுனியா,மார்ச்.2

வவுனியா பீடியாபாமைச் சேர்ந்த, கால்கள் பாதிப்படைந்து நடக்க முடியாது அவதிப்பட்டு வந்த குடும்பத்தலைவருக்கு சக்கர நாற்காலி வழங்கப்பட்டது. சரஸ்வதி பவுண்டேசன் நிறுவன ஸ்தாபகர், கொக்குவில் நந்தாவிலைச் சேர்ந்த லண்டன் வாழ் சமூக ஆர்வலர் எஸ். கஜேந்திரன், இருக்கை மலசலகூட வசதி கொண்ட சக்கர நாற்காலியை வழங்கினார். மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் ஊடாக குநத்த சக்கர நாற்காலி வழங்கப்பட்டது. (க-222)

## 7 முன்பள்ளிகளுக்கு முதலுதவிப் பெட்டி

மன்னார்,மார்ச்.2

மடு பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஏழு முன்பள்ளிகளுக்கு முதலுதவிப் பெட்டிகள் மற்றும் முன்பள்ளி ஆசிரியைகளுக்கு 4 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் வன்னி மாவட்ட இணைப்பாளர் ச.ரூபன் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் உதவிகளை வழங்கினார். நிகழ்வில் மடுப்பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தேக்கம், குஞ்சுக்குளம், பூமலர்ந்தான், மழவராயர் கட்டையடம்பன், இரணை இழுப்பைக்குளம், கீரி சுட்டான், தட்சனாமருதமடு, பெரிய பண்டிவிரிச்சான், போன்ற பகுதிகளில் உள்ள மாதர் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், விளையாட்டுக் கழகம் போன்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் நிகழ்வில் கலந்துகொண்டனர். (க)



## நிலுவை 2000 ரூபாவெனில் மின்சாரம் துண்டிக்கப்படும்

வவுனியா,மார்ச் 02

மின்சாரக் கொடுப்பனவுகள் சீராகச் செலுத்தப்படாது மின் பட்டியலில் இரண்டாயிரம் ரூபாவுக்கு மேல் நிலுவைகாணப்படின்.குறித்தமின்பாவனையாளருக்கான மின்சாரம் துண்டிக்கப்படும் என்று வவுனியா, மன்னார் மாவட்ட பிரதான மின் பொறியியலாளர் திருமதி மாலினி தயாபரன் அறிவித்துள்ளார். வவுனியாவின் நான்காம் கட்டை, கற்பகபுரம், குழுமாட்டுச்சந்தி, பாரதிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த இரண்டு நாள்களாக சுமார் 20 க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதற்கான எந்தவித முன்னறிவித்தலும் தமக்கு வழங்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா, மன்னார் மாவட்ட பிரதான மின் பொறியிலாளர் திருமதி மாலினி தயாபரனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, "மின்சார சபை ஊழியர்களால் மின் பட்டியல் கொடுப்பனவுகள் நிலுவையில் உள்ளவர்களுக்கான மின்சாரம் துண்டிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.




ஆயிரம் ரூபாவுக்கு மேல் கட்டணம் நிலுவையில் உள்ளவர்களுக்கு மின்சாரம் துண்டித்தலுக்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இருப்பினும் இரண்டாயிரம் ரூபாவுக்கு மேல் மின்பட்டியல் கொடுப்பனவு நிலுவையில் உள்ளவர்களுக்கே மின் துண்டிப்பைதற்போது முன்னெடுத்துள்ளோம். கடந்த வருட இறுதியில் அறவிடப்பட வேண்டிய மின் பட்டியல் நிலுவைகள், வவுனியாவில் இடம்பெற்ற அசாம்பாவிதம் காரணமாக சீராக அறவிடப்படவில்லை.

அதனால் மின் பட்டியலில் நிலுவையில் உள்ள பணத்தை அறவீடு செய்வதற்கான வழமையான நடைமுறைகளின் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. முன்னறிவித்தல்கள் வழங்கப்படுகின்றன-என்றார். (க-18)

## விபத்தில் சிக்கிய இளைஞர் காயம்



கொழும்பு, மார்ச் 2

மோட்டார் சைக்கிளில் அதிவேகமாகப் பயணித்த இளைஞர் ஒருவர் வீதியில் திடீரென்று குறுக்கே சென்ற பெண்ணுக்கு வழி விட்ட போது சைக்கிள் மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. அதில் பயணித்த இளைஞன் படுகாயமடைந்தார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி ஜும்ஆப் பள்ளி வீதியிலேயே இந்த விபத்து நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் வீதிக்குக் குறுக்கே சென்ற பெண்ணுக்கு வழிவிட்டபோதே தடுமாறி மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளா னார் என விபத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான குறித்த இளைஞர் ஆபத்தான நிலையில் வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு இடமாற்றப்பட்டுள்ளார். இந்த விபத்துத் தொடர்பானமேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# சுவரொட்டி, பதாகைகளை பயன்படுத்துவதற்கு தடை!

## தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு



**கொழும்பு, மார்ச் 2**

**தேர்தல் பரப்புரைகளின்போது சுவரொட்டிகள் மற்றும் பதாதைகளைக் காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேர்தல் காலங்களில் சுவரொட்டிகள் மற்றும் பதாதைகளைக் காட்சிப்படுத்தினால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்போதைய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்துவற்கு அறிவிக்கப்படுமாயின், அதனை நடத்துவதற்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம் - என்றார். அதேவேளை இலங்கை சோஷலிச குடியரசின் 8 ஆவது நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான முழுமையான அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடைத்ததும், அவர் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்குச் செல்வார் என்று தெரிவிக்கப்படுகின்றது.(எ)

# போராட்டத்தை விளக்கி கல்வி அமைச்சுக்கு கடிதம்

## ஆசிரிய சேவைச் சங்கம் தெரிவிப்பு

ஆசிரியர், அதிபர் இடைக்கால சம்பள சுற்றறிக்கை மற்றும் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு அழுத்தம் கொடுக்கும் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் சு.பிரதீப் தெரிவித்துள்ளார்.

இடைக்கால சம்பள முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் முக்கிய கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக கடந்த 26ஆம் திகதி நாட்டின் சகல பாடசாலைகளின் அதிபர் ஆசிரியர்கள் சுகவீன விடுமுறையை அறிவித்துவிட்டு பாடசாலைக்கு சமூகமளிக்காது போராட்டத்தை மேற்கொண்டனர். கல்வி அமைச்சுக்கு முன்னால் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியிலும் ஈடுபட்டிருந்தனர். எனினும், எமது கோரிக்கை தொடர்பாக கல்வி அமைச்சு மற்றும் அரசு சாதகமான பதில் வழங்கவில்லை. இதனால் சட்டப்படி வேலைசெய்தலில் ஈடுபடவுள்ளோம். கல்வி அமைச்சு முன்மொழிந்த இடைக்கால சம்பளத்தை வழங்கும் சுற்றறிக்கையை வெளியிடுதல் மற்றும் ஏனைய கோரிக்கைகளான, 23 வருடங்களாகக் காணப்படும் அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கி சம்பள உயர்வை வழங்குக என்றும் அரசியல் பழிவாங்கல் என்ற போர்வையில் உயர்பதவி மற்றும் வரப்பிரசாதங்களை வழங்குதலை நிறுத்துதல், ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் ஆசிரியர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் மேலதிக செயற்பாடுகளை நிறுத்துதல், பெற்றோர்களிடமிருந்து பணம் அறவீடு செய்வதை நிறுத்தி மொத்த தேசிய வருமானத்தில் கல்விக்கு 6 சதவீதத்தை ஒதுக்க வேண்டும் என்றும், 2016 க்கு பின்பு நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியத்தை மீண்டும் வழங்க வேண்டும், இடை நிறுத்தப்பட்ட தேசிய பாடசாலை ஆசிரிய இடமாற்றத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளை உள்ளடக்கிய கடிதத்தை அனுப்பியுள்ளோம் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-159)

# தடுப்பூசி அட்டைகளை கவனமாக வைத்திருக்கவும்

சாவகச்சேரி,மார்ச்.2

வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்பட்டமைக்காக, வழங்கப்படும் அட்டையைக் கவனமாக வைத்திருக்குமாறு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சு.சுதோகுமார் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளார்.

வளர்ப்பு நாய்களுக்கு 3 தடவைகள் விலங்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்பட்டதை உறுதிப்படுத்தும் அட்டை வைத்திருப்பின், அந்த நாயால் கடிபடுபவர்கள் தடுப்பூசி மருந்து ஏற்ற வேண்டிய அவசியமில்லை.

விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டதற்கான அட்டை இல்லாததால், மருத்துவமனைகளில் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றுவதை அவதானிக்க முடிகிறது.

தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டதாக நாய் வளர்ப்போரால் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அதற்குரிய அட்டை இல்லாததால், விலைகூடிய தடுப்பு மருந்தை நாயால் கடிபடுவோருக்கு ஏற்ற வேண்டியுள்ளது.

வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர், நோய்த் தடுப்பு ஊசி ஏற்றப்படும், போது, உள்ளூராட்சி சபைகள் மற்றும் கால்நடை மருத்துவர் பணியகம் போன்றவற்றால் வழங்கப்படும் தடுப்பூசி ஏற்றப்பட்டமைக்கான அட்டையைக் கவனமாக வைத்திருந்து நாயால், பொதுமகனொருவர் கடியுண்டால் குறித்த அட்டையைக் காண்பித்தால் விலங்கு விசர் நோய்த் தடுப்பு மருந்து ஏற்றப்படமாட்டாது என்றும் அவர் அறிவித்துள்ளார். (க-9)



# வட்டக்கச்சியில் பெட்டிப்பாலம்

கிளிநொச்சி,மார்ச்.2

வட்டக்கச்சி வட்டாரத்தில் கட்சன் வீதி, ஐந்து வீட்டுத்திட்ட வீதியில் பெட்டிப்பாலம் அமைப்பதற்கான அடிக்கல் நேற்று நடப்பட்டது.

கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிதன் பாலத்துக்கான அடிக்கல்லை நட்டார். நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம அலுவலர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-222)

# யாழ்ற்ரன் கல்லூரி இல்ல மெய்வன்மை

யாழ்ப்பாணம், ,மார்ச்.2

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் தி. மதிவதனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் தம்பதியர் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினராக தீவக வலய கணக்காளர் பரதன் மற்றும் பாடசாலையின் பழைய மாணவியும், தற்போது லண்டனில் வசிப்பவருமான கணக்காளர் திருமதி காந்திதேவி முருக தாஸன் மற்றும் காரைநகர் பிரதேச சபை உப தவிசாளர் க.பாலச்சந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் வழமைபோன்று மைதான நிகழ்ச்சிகள், இடைவேளை நிகழ்ச்சி என்பவை இடம்பெற்றன. வெற்றிபெற்ற மாணவர்கள் பரிசில்கள், வெற்றிக்கேடயங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (து)



# பொலிஸாருக்கு ஒத்துழைக்கவும்

## போக்குவரத்துப்பிரிவின் பொறுப்பதிகாரி வேண்டுகோள்

வவுனியா,மார்ச்.2



வவுனியாவில் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தவும், வீதி விபத்துத்துளைக் குறைப்பதற்கும் சாரதிகள், போக்குவரத்து வழிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடித்து, பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று வவுனியா போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி காமினி திசாநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை பொலிஸ்மா அதிபரால் நாடளாவிய ரீதியிலுள்ள போக்குவரத்துப் பொலிஸ் நிலையங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கையாக வவுனியா போக்குவரத்துப்பிரிவில் உப பொலிஸ் பரிசோதகராகக் கடமையாற்றிய காமினி திசாயாநக்கவுக்கு, நேற்று முதல் பொலிஸ் பரிசோதகராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வவுனியாவில் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்குப் பொலிஸாருக்குப் போதிய ஒத்துழைப்புக்களை வழங்குமாறும், போக்குவரத்து வழிமுறைகளைக்கடைப்பிடித்து நடக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-110)

# வாழ்வாதார உதவி

யாழ்ப்பாணம்,மார்ச்.2

தீவகம் அனலைதீவைச் சேர்ந்த, போரில் கணவனை இழந்த பெண்ணொருவருக்கு வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது.

கோழி வளர்ப்புக்கான வாழ்வாதார உதவி “வறுமை ஒழிப்போம் வாழ வைப்போம்” திட்டத்தின் கீழ் மனிதாபிமான தொண்டு நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

நிறுவனத்தின் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான அலுவலக திறப்பு விழாவின்போது, இவருக்கான உறுதிப்படுத்தல் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைவாக நிறுவனத்தின் தீவக பிரதேச இணைப்பாளர் தலைமையில் கடந்த சனிக்கிழமை குறித்த உதவி வழங்கப்பட்டது.(க-154)




# கையேந்தும் நிலைக்கு தள்ளப்படும் இலங்கை



## சாடுகின்றார் ரணில்

**கொழும்பு, மார்ச் 2**
**சீனா மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளிடம் கூட கையேந்தும் நிலைமைக்கு தற்போதைய அரசு தள்ளப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாத்தறையில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:
இலங்கை யாரிடமும் கையேந்தும் தேசமாக ஒருபோதும் இருக்கக்கூடாது. எமது ஆட்சிக் காலத்தில் பொருளாதாரத்தைப் பலப்படுத்த பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. கடன்களைச் செலுத்தவும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு பொருளாதாரத் திட்டமொன்று இருந்தமையாலேயே சர்வதேச நாணய நிதியம் நிதி வழங்கியது. ஆனால் புதிய அரசு பொருளாதாரத்தை நிர்வகிக்க முடியாமையால் சீனாவிடமும், இந்தியாவிடமும் கடன் சலுகை கோருகின்றது.
இலங்கையைச் சர்வதேசத்திடம் கையேந்தும் நிலைக்கு தள்ளுவது நாட்டின் மீதான பிம்பத் தைத் சீரழிக்கும்- என்றார். (எ)



## விஞ்ஞான அறிவியல்

யாழ்ப்பாணம்,மார்ச்.2
'ஒளிரும் எதிர்காலத்துக்கான விஞ்ஞானக் கல்வி' என்னும் தொனிப்பொருளிலான பாடசாலை மாணவர்களுக்கான 'விஞ்ஞான அறிவியல் நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகும்.
நிகழ்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடத்தில், விஞ்ஞான பீடத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளன.
நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள அறிவியல் சார் நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதி வரை காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும்.
நிகழ்வு தரம் 6 முதல் 11 ஆம் வகுப்பு வரையான மாணவர்கள் பயன்பெறும் வகையில் தாவரவியல், விலங்கியல், இரசயனவியல், பௌதீகவியல், கணனி விஞ்ஞானம், பரிசோதனைகள், விளக்கவுரைகள் , காட்சிப் பொருள் கள் போன்ற விடயங்களின் பாடப்பரப்புக்களைத் தழுவியதாக அமையும் என்று ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது. (க-7)

## கல்வி மட்டும் மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்காது

### சாள்ஸ் எம்.பி. தெரிவிப்பு

மன்னார்,மார்ச்.2
மாணவர்கள் கல்வியுடன் மட்டும் நில்லாமல், விளையாட்டிலும் ஆர்வத்துடன் செயற்பட வேண்டும். அவர்களே பூரணமான மனிதர்களாக எதிர்காலத்தில் திகழ்வர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.
மன்னார் வட்டக்கண்டல் அ.த.க பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி, பாடசாலை விளையாட்டு மைதானத்தில், அதிபர் அ.தேவதாஸ் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது. நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் விளையாட்டுக்களில், மாகாண மட்டம், தேசிய மட்டத்துக்குச் செல்வதற்குத் தங்களைத் தயாா்ப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். மாணவர்கள் விளையாட்டையும், கல்வியையும் ஒன்றாக இணைத்துப் பயணிக்க வேண்டும்.
அதனைவிட மாணவர்கள் கூடுதலாக கணித, விஞ்ஞானப் பாடங்களைத் தெரிவு செய்து படிக்க வேண்டும். அப்படிப் படிக்கின்றபோது, அவர்கள் பல்கலைக்கழகம் செல்லாவிட்டாலும், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்திகளைப் பெற்றிருந்தால், ஏதாவதொரு அரச நியமனத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். எதிர்காலத்தில் எந்தத்துறையில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியுமோ அல்லது எந்தத்துறையில் இடைவெளிகள் இருக்கின்றதோ அதை நிரப்புவதற்கு உரிய துறையைத் தெரிவு செய்ய வேண்டும் - என்றார். (க-51)



# 100,000 மரக்கன்றுகள் முல்லைத்தீவில் நடுகை

முல்லைத்தீவு,மார்ச்.2
'அவலோன் றிசோட் இஸ்பா' நிறுவனம் பல லட்சம் ரூபா செலவில் ஒரு லட்சம் மரக் கன்றுகள் நடும் வேலைத்திட்டத்தை முல்லைத்தீவில் நேற்று ஆரம்பித்தது.
முல்லைத்தீவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் 'அவலோன் றிசோட் இஸ்பா' நிறுவனம், கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையுடன் இணைந்து மரக் கன்றுகளை நடுகை செய்யவுள்ளது. ஆரம்ப நிகழ்வில் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைத் தவிசாளர், உறுப்பினர்கள் அவலோன் நிறுவன இலங்கைக்கான இணைப்பாளர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-35)

## பெண்களுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்.2
வடக்கு மாகாண பெண் தொழில் முயற்சியாளர்களுடனான சந்திப்பு யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.
எதிர்வரும் 10 ஆம் திகதி "பெண்களை வலுப்படுத்துவோம் சமத்துவம் பேணுவோம் " என்ற தொனிப்பொருளில் யாழ்.கிட்டுப் பூங்காவில் நடைபெறவுள்ள மகளிர் தினத்தை முன்னிட்டு, சந்திப்பு நடத்தப்பட்டது. மகளிர் தினத்தில் உற்பத்தி பொருட்களுக்கான காட்சிப்படுத்தல் மற்றும் விற்பனை நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அது தொடர்பில் பெண் முயற்சியாளர்களுடன் கலந்துரையாடப்பட்டது.
மகளிர் தின நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ் மாவட்டச்செயலர் கணபதிப்பிள்ளை மகேசன், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் திருமதி. எழிலரசி அன்ரன் யோகநாயகம், சிறப்புப் பேச்சாளராக கொழும்பு மாநகர சபை உறுப்பினர் திருமதி. உமா சந்திரபிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்வர் என்று குறித்த சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. (க)



# கிடைக்கும் நீருக்கு ஏற்ப விவசாயம் மேற்கொள்க

## விவசாயிகளுக்கு அறிவிப்பு

முல்லைத்தீவு. மார்ச்.2
கிடைக்கும் நீருக்கேற்ப நிலத்தைப் பண்படுத்திப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளுங்கள் என்று ஒட்டுசுட்டான் கமநலச்சேவை பெரும்பாக உத்தியோகத்தர் ம.சற்குணநேசன் அறிவுறுத்தினார்.
கற்சிலைமடு பெரியகுளச் சிறுபோகக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
எதிர்வரும் மாதங்களில் வெப்ப நிலையுடன் கூடிய காலநிலை நிலவும்.
ஆகையால் குளங்களில் உள்ள நீரின் அளவுக்கேற்ப காணிகளைத் தெரிவு செய்து பயிர்ச்செய்கை மேற்கொள்ளுங்கள்.
அளவுக்கதிகமான நிலங்களில் விவசாயத்தை மேற்கொண்டு நீர் போதா மையால், நட்டமடைவதை விடுத்து, அளவுக்கேற்ப செய்கையை மேற்கொள்ளுங்கள்.
அனைத்து விவசாயிகளும் சட்ட திட்டங்களை மதித்துச் செய்ய வேண்டிய கடமைகளை உரியகாலத்துக்குள் செய்து ஒத்துழைப்பு வழங்குங்கள். சட்ட திட்டங்களுக்கு முரணான செயற்பாடுகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு குற்றப்பணம் அறவிடப்படும்.
அவர்கள் மீது சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். குளங்களைப் பராமரிக்கத் தவறினால், குளம் உடைப்பெடுத்தால் அரசாங்கத் தால் நிதி வழங்கப்படமாட்டாது- என்றார். (க-500)

# சிவில் செயற்பாடுகளில் படையினர் இதுவே ராஜபக்ஷ அரசின் பலவீனம்!

## ஐ.தே.க. கடும் அதிருப்தி



**கொழும்பு, மார்ச் 2**

**'கோத்தாபய, மஹிந்த தலைமையிலான இலங்கையின் புதிய அரசின் பலவீனமான முகாமைத்துவமானது சிவில் செயற்பாடுகளில் படையினரை ஈடுபடுத்தியதன் ஊடாகப் புலப்படுகின்றது' இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: 'தற்போது பொதுப் போக்குவரத்து நிர்வகிப்புச் செயற்பாடுகளில் பொலிஸாருடன் இணைந்து படையினரையும் அரசு ஈடுபடுத்தி வருகின்றது.

அரச நிறுவனங்கள், திணைக்களங்களுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை நியமித்து வருகின்ற அதேவேளை, சிவில் சேவைகளிலும் படையினரை ஈடுபடுத்திவருவது பெரும்விமர்சனத்துக்குள்ளாகி வருகின்றது.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் நடைபெற்ற அமர்வில் உரையாற்றியிருந்த மனித உரிமைகள் ஆணையாளரும் அரசின் இந்தச் செயற்பாடுகளுக்குக் கண்டனம் வெளியிட்டிருந்தார்.

சர்வதேச சமூகத்துடன் கடந்த நல்லாட்சி அரசு சிறந்த தொடர்பைப் பேணிவந்த போதிலும், புதிய அரசானது அந்த உறவுகளைச் சேதப்படுத்தும் வகையில் செயற்படுகின்றது.

நாங்கள் சர்வதேசத்துடன் பிரச்சினைகள் இருக்கின்றபோது அவற்றைச் சிறப்பாக முகாமை செய்து கொண்டோம். அவர்களுடன் பேச்சு நடத்தினோம். ஐ.நா. தீர்மானத்திலிருந்து விலகுவதானது மிகவும் இலகுவான விடயம். உடனடியாக விலக முடியும். ஆனால், விலகுவதல்ல முக்கியம், அந்த இடத்தில் நின்று அவர்களுடன் பேச்சு நடத்தி தவறான தீர்மான யோசனைகள் இருந்தால், அவற்றை நீக்கியிருந்தால் பிரச்சினையில்லை.

மாறாக முழு தீர்மானத்திலிருந்தும் விலக எடுத்த முடிவானது ஐக்கிய நாடுகளுக்கு எதிராக எடுத்த நடவடிக்கையாகக் கருதப்படும்.

சர்வதேச சமூகத்துடன் நாங்கள் மனக்கசப்பை ஏற்படுத்திவிட்டால் அதனால் ஏற்படுகின்ற பின்விளைவுகள் என்னவாக இருக்கும் என்பது புரியும்' என்றார். (ம-22)

# 'ஐ ரோட்' திட்டத்தில் 23வீதிகள்சீரமைப்பு

சாவகச்சேரி, மார்ச் 2

'ஐ ரோட்' புனரமைப்புத் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவில் 51.82 கிலோ மீற்றர் நீளமுள்ள 23 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஆரம்ப அடிக்கல் நுணாவில் சந்தியில் நேற்று நடப்பட்டது. 4.35 கிலோமீற்றர் நீளமுடைய நுணாவில் சரசாலை வீதி புனரமைப்புக்கான அடிக்கல் நடப்பட்டது.

6.09 கிலோ மீற்றர் நீளமான சாவகச்சேரி. டச் வீதி இருகட்டங்களாகவும், 5.76 கிலோ மீற்றர் நீளமான மீசாலை வரணி வீதி, 4.11 கிலோ மீற்றர் நீளமுடைய வரணி குடத்தனை வீதி, 4.45 கிலோமீற்றர் நீளமான மட்டுவில் அம்மன் கோவில் பின் வீதி, 6.6 கிலோ மீற்றர் நீளமான கச்சாய் கெற்பேலி ஆனையிறவு வீதி, 1.43 கிலோ மீற்றர் நீளமான மட்டுவில் தேவாலய வீதி, 1.51 கிலோமீற்றர் நீளமான மட்டுவில் பிலிப் அரசடி வீதி (இரு கட்டங்கள்), கைதடி கிழக்கு அண்ணமார் கோவில் வீதி, கைதடி மூத்தியாவத்தை வீதி, வரணி மருத்துவமனை-இடைக்குறிச்சி சிறிசுப்பிரமணியம் இணைப்பு வீதி, பிச்சைப்புலம் வெள்ளவாய்க்கால் வீதி, கொடிகாமம் மடத்தடி வீதி, மீசாலை வடக்கு தட்டான்குளம் பிள்ளையார் கோவில் வீதி, பருத்தித்துறை குடமியன் அ.த.க. பாடசாலை இணைப்பு வீதி, இராமாவில் கட்டைபறித்தான் மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலய வீதி, கொயிலாமனை வீதி, செல்லையா வீதி, மடத்தடி முதலாம் ஒழுங்கை, கல் வயல் புலுட்டையன் பிள்ளையார் கோவில் வீதி, நுணாவில் மணங்குணாய்ப்பிள்ளையார் கோவில் வீதி, மீசாலை வயல்கரை வீதி,தாமோதரம் பிள்ளை முதலாம் ஒழுங்கை ஆகிய வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. -(க-9)



# இராமகிருஷ்ண வித்தியில் முதலாவது திறன் வகுப்பறை

கிளிநொச்சி, மார்ச் 2

கிளிநொச்சி இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் முதலாவது திறன் வகுப்பறை கடந்த வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது.

வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சு. பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன் ஆகியோர் வகுப்பறையைத் திறந்தனர்.

வகுப்பறைக்கான நிதியுதவி தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரங்கள் மீள்குடியேற்றம் மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சால் வழங்கப்பட்டது.

பாடசாலை அதிபர் ஜோயல் பியசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அயல் பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-222)

# கூட்டத்தில் தள்ளுப்பாடு இருவர் மருத்துவனையில்

வவுனியா, மார்ச் 2

வவுனியாவிலுள்ள ஊழலற்ற மக்கள் அமைப்பின் தலைவர் க. பார்த்தீபன் மீது நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுவதுடன்.அதன் காரணமாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கிராமஅலுவலர் ஒருவரே அவரைத் தாக்கியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வவுனியா குடியிருப்பு கலாசார மண்டபத்தில் அலியாமருதமடு குளத்தின் கீழ் செய்கை பண்ணப்படும் வயல் நிலங்கள் தொடர்பில் பிரதேச செயலாளர் தலைமையில் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இருவருக்கும் இடையிலான முரண்பாடு காரணமாகவே தாக்குதல் நடந்தது என்று தெரிவிக்கப்படுவதோடு, கிராம அலுவலர், தன்னைப் பார்த்தீபன் தாக்கினார் என்று குற்றஞ்சாட்டி மருத்துவமனையில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பிரதேச செயலரிடம் கேட்டபோது, "அலியாமருதமடுகுள சிறுபோக நெற்செய்கை தொடர்பாகக் கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர், கிராம அலுவலர் இந்தக் கூட்டத்தில் இருந்தால் தன்னால் இருக்கமுடியாது என்று பார்த்தீபன்தெரிவித்திருந்தார். இதன்போது கிராமஅலுவலரும், பார்த்தீபனும் எனது சொல்லைச் செவிமடுக்காது வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். இருவரும் தள்ளுப்பட்டுக்கொண்டிருந்தனர். இதன்போது யார் தாக்கினார் என்பது சரியாகத் தெரியவில்லை" -என்றார். (த-110)



# நெற் கதிர்களை உறிஞ்சும் ஈக்கள்

## விவசாயிகளுக்கு பெரும் நட்டம்

மன்னார், மார்ச் 2

மன்னாரில் தாமதமாக நெல் செய்கை பண்ணப்பட்ட வயல்களில் ஈக்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. நெற்கதிர்கள் பால் பருவமாக இருப்பதால், நெல் மணிகளில் உள்ள பாலை உறிஞ்சி பயிர்களை ஈக்கள் நாசம் செய்கின்றன என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருட இறுதியில் பெரும்போக நெற்செய்கை உரிய காலத்தில் விதைப்பு மற்றும் பயிர் நடுகைக்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிலையில், வெள்ளத்தால் பயிர்கள் அழிவடைந்தன. அங்கு புதிதாக மீண்டும் செய்கை மேற்கொள்ளப்பட்டது. கடந்த மழைக் காலத்தில் ஏற்பட்ட அழிவிலும், பல மடங்கு நட்டம் தற்போது ஏற்பட்டுள்ளன. சில இடங்களில் தெளிக்கும் கிருமி நாசினிகளுக்கு ஈக்கள் கட்டுப்படவில்லை என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (க-213)

# மக்களின் ஒத்துழைப்பே டெங்கு குறைய காரணம்

## தென்மராட்சி சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவிப்பு

சாவகச்சேரி, மார்ச் 2

பிரதேச மக்கள் வழங்கிய ஒத்துழைப்புக் காரணமாக டெங்குத் தாக்கத்தைக் குறைக்கமுடிந்தது. இவ்வாறு தொடர்ந்து ஒத்துழைப்புக் கிடைக்குமாயின், இந்தப் பகுதியில் டெங்குத் தாக்கத்தை இல்லாமல் செய்யமுடியும்" என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சு.சுதோகுமார் தெரிவித்தார். கடந்த மாதத்துக்குரிய டெங்கு தொடர்பான அறிக்கையை வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த டிசெம்பர் மாதத்தில் மழை காரணமாக தென்மராட்சியில் 203 பேர் டெங்குத் தொற்றுக்கு இலக்காகினர். டெங்கு அபாயம் உள்ள பிரதேசமாக இது அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து தென்மராட்சி பிரதேச செயலரின் ஏற்பாட்டில் ஒரே நாளில் பிரதேசத்தின் அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் பொலிஸார், படையினர், சாவகச்சேரி நகரசபையினர், சாவகச்சேரி பிரதேச சபையினர், கிராமிய டெங்குக்குழுக்கள் மற்றும் டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்களுடன் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்மூலமாக ஜனவரி மாதத்தில் டெங்குத் தொற்று 153 ஆகக் குறைந்திருந்தது. பெப்ரவரி மாதத்தில் 43 ஆகக் குறைந்துள்ளது என்று தெரிவித்தார். (த-9)

# மாறுபட்ட சூழலில் தேர்தலில் போட்டி

## சஜித் பிரேமதாச விளக்கம்

கொழும்பு, மார்ச் 2

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியதைப் போன்றல்லாது, வேறுப்பட்ட சூழ்நிலையிலேயே பொதுத் தேர்தலில் களமிறங்குகின்றேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஹோமாகம பிரதேசத்தில் நடத்திய மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ஜனாதிபதித் தேர்தலுக்கு எமது எதிர்தரப்பினர்களுக்கு இருந்த கால நேரம் எமக்கு இருக்கவில்லை. காரணம் எம்மை அனைத்து இடங்களுக்கும் அனுப்பினர். எமக்கும் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எங்கும் செல்வதில்லை. அப்படி செல்ல நான் தயாராகவும் இல்லை. இந்த நாட்டுக்குப் புதிய ஆற்றல் மிகுந்த ஆரம்பம் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதே எமது நோக்கம். - என்றார். (எ)

# கேபிள்களைத் துண்டிக்கும் குழு சிசிரிவியில் சிக்கியது

கொடிகாமம், மார்ச் 2

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொலைக்காட்சிக் கேபிள்கள் நீண்ட காலமாக இனந்தெரியாதோரால் துண்டிக்கப்பட்டு வரும் நிலையில், அத்தகைய ஒரு குழு கேபிள்களைத் துண்டிக்கும் காட்சி சிசிடிவி காணொலியில் பதிவாகியுள்ளது. அந்தக் குழுக்களைக் கைது செய்து நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்குமாறு வல்வெட்டித்துறைப் பொலிஸில் முறையிடப்பட் டுள்ளது.

குடாநாட்டில் நீண்ட காலமாக கேபிள் இணைப்புகள் பல்வேறு பகுதிகளிலும் திட்டமிட்டுத் துண்டிக்கப்பட்டு வந்தன. இவை பற்றிப் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்திருந்தாலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுவந்தது.

இந்தநில்லயில், வல்வெட்டித்துறையில் தொண்டைமானாறு பகுதியில் ஒரு குழுவினர் தொலைக்காட்சி கேபிள்களைத் துண்டிக்கும் காட்சி சில நாள்களுக்கு முன்னர் சிசிடிவியில் பதிவாகியுள்ளது.

யாழ்ப்பாணத்து அரசியல்வாதி ஒருவரின் தொலைக்காட்சி நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனத்தில் வந்தவர்களே வீடொன்றுக்கு முன்பாக தொலைக்காட்சிக் கேபிள்களைத் துண்டித்துவிட்டுச் செல்கின்றமை பதிவாகியுள்ளது என்றும் அதை அடிப்படையாகக் கொண்டு துண்டிக்கப்பட்ட கேபிள் இணைப்புக்குச் சொந்தமான நிறுவனம் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-159)


## மரண அறிவித்தல்

### பொனிப்பாஸ் (அன்ரனி) அரசரட்ணம்



பிறப்பு 10.10.1956 இறப்பு 01.03.2020

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொனிப்பாஸ் (அன்ரனி) அரசரட்ணம் நேற்று(01.03.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.03.2020) திங்கட்கிழமை மாலை 3.30 மணியளவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

84, கடற்கரை வீதி,
நாவாந்துறை

(CS/31613)(11,17)

தகவல்:
சகோதரன், சகோதரிகள்.

077 401 1133

## கண்ணீர்அஞ்சலி



வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் கடமையாற்றும்
திருமதி சுதாயினி ஞானச்சந்திரன் அவர்களின்
அன்புத் தந்தை
**கந்தையா பரம்சோதி**
கடந்த 2020.02.28ம் திகதி வெள்ளிக்கிழமை அன்று
இறை பதமடைந்த அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதுடன்
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம்

## கண்ணீர்அஞ்சலி



வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் கடமையாற்றும்
திருமதி சுதாயினி ஞானச்சந்திரன் அவர்களின்
அன்புத் தந்தை
**கந்தையா பரம்சோதி**
கடந்த 2020.02.28ம் திகதி வெள்ளிக்கிழமை அன்று
இறைபதமடைந்த அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதுடன்
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
மயிலிட்டி உபஅலுவலகம், வலிகாமம் வடக்கு பிரதேச சபை.

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு

## விலைக்கேள்விக்கான கோரல் - 2020

1. வடக்கு மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவுக்காக, பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகைமையுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடுசெய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசியபோட்டிவிலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும், இருப்பினும் வியாபார ப்திவினை வடக்குமாகாண நிர்வாக எல்லைக்குள் கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்களே விண்ணப்பிக்கமுடியும்.
3. விலைக்கேள்வியாளர்கள் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருப்பவரும் 04/2016(i) ம் இலக்க30.09.2016 ம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (**CIDA**) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் வடக்கு மாகாணத்திற்குள் செல்லுபடியான வியாபா்ர/கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 229 0111) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை.முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
6. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக **ரூபா 1000/=** காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் **02.03.2020 தொடக்கம் 16.03.2020** வரையான **காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை** நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் **17.03.2020 ஆந்** திகதி **10.00** மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் **17.03.2020** ஆம் திகதி **10.30** மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்
8. முன்னாயத்த விலைகூறல் தொடர்பான ஒன்றுகூடல் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் **10.03.2020** ஆம் திகதி **10.30** மணிக்கு நடைபெறும்.

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| வேலையின் தொகுதிகள் | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணைவிபரம். | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை | தேவைப்படும் காலம். |
| 01 | PSSP/B/MU/2020/01-1 | Construction of Genrtator Room at DH Moonkilaru. | 0.60 | 2 மாதங்கள் | C10 (கட்டடங்கள்) | 6,000.00 | 16.06.2020 வரை |
| | PSSP/B/MU/2020/01-2 | Modification of Room for well woman clinic, ANC and PNC Clinic at DH Moonkilaru | 0.11 | | | 1,000.00 | 16.06.2020 வரை |
| | PSSP/B/MU/2020/01-3 | Construction of staff wash room at DH Moonkilaru | 0.66 | | | 6,000.00 | 16.06.2020 வரை |
| | PSSP/B/MU/2020/01-4 | Modification of Existing Dental Room at DH Moonkilaru | 0.14 | | | 1,000.00 | 16.06.2020 வரை |
| 02 | PSSP/B/MU/2020/02-01 | Construction of waste collection Point at DH Moonkilaru | 1.02 | 2 மாதங்கள் | C10 (கட்டடங்கள்) | 10,000.00 | 16.06.2020 வரை |
| | PSSP/B/MU/2020/02-2 | Construction of Cycle & Motor bike park for Visitors/Patients at DH Moonkilaru | 0.57 | | | 5,000.00 | 16.06.2020 வரை |
| | PSSP/B/MU/2020/02-3 | Construction of Cycle & Motor bike park for staff at DH Moonkilaru | 0.27 | | | 2,000.00 | 16.06.2020 வரை |
| 03 | PSSP/B/MU/2020/03-1 | Construction of waste collection Point at DH Sampathnuwara | 1.02 | 2 மாதங்கள் | C9 (கட்டடங்கள்) | 10,000.00 | 16.06.2020 வரை |
| | PSSP/B/MU/2020/03-2 | Modification of ETU and ETU Related area DH Sampathnuwara | 0.75 | | | 7,000.00 | 16.06.2020 வரை |
| | PSSP/B/MU/2020/03-3 | Renovation of wash room at DH Alampil | 0.48 | | | 4,000.00 | 16.06.2020 வரை |
| 04 | PSSP/B/MU/2020/04-1 | Estimate for the Renovation of old OPD Block at DH Sampathnuwara | 1.20 | 2 மாதங்கள் | C9 (கட்டடங்கள்) | 10,000.00 | 16.06.2020 வரை |
| | PSSP/B/MU/2020/04-2 | Estimate for the Improvement work for the Ambulance Garage with drivers room at DH Sampathnuwara | 1.51 | | | 15,000.00 | 16.06.2020 வரை |

**வைத்திய கலாநிதி. செ.சுகந்தன்**
தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு

# தமிழரின் கோரிக்கை நியாயம் என்பதை ஏற்றுள்ளது சர்வதேசம்

## சரவணபவன் எம்.பி. சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், மார்ச் 2**

**இலங்கையில் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எந்த விதத்திலும் இலங்கை அரசிடம் இருந்து நியாயம் பெற்றுக் கொள்ளமுடியாது என்பதைச் சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ளமை ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளரின் அறிக்கை மூலம் தெளிவாகின்றது. இந்தக் காரணங்களால்தான் தமிழ் மக்களாகிய நாம் ஒரு சர்வதேச விசாரணையின் மூலம் நீதியை நிலை நாட்டுமாறு கோரினோம்.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இணை அனுசரணை வழங்கியிருந்த தீர்மானத்தில் இருந்து விலகுவதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2015ஆம் ஆண்டு ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 30ஆவது கூட்டத் தொடரில் இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான தீர்மானம் இலங்கை அரசின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்டது. அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் 2017ஆம் ஆண்டும், 2019ஆம் ஆண்டும் இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கப்பட்டது. இரு தடவைகள் கால அவகாசம் வழங்கப்பட்டபோதும், தற்போது அந்தத் தீர்மானத்தில் இருந்து விலகிக் கொள்வதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

### சப்பைக்கட்டு கட்டும் அரசு

இந்தத் தீர்மானத்துக்கு அனுசரணை வழங்குவதில் இருந்து பின்வாங்குவதற்குப் பல காரணங்களை இலங்கை அரசு கூறுகின்றது. அவற்றில் முக்கியமானதாக, இந்தத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்ட பல விடயங்கள் இலங்கையின் அரசமைப்புக்கு விரோதமானவை என்றும், இலங்கையின் இறைமையைக் கேள்விக்குட்படுத்துகின்றது என்றும் கூறப்படுகின்றது. இந்தத் தீர்மானம் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு உட்பட்டவை என்பதுடன், அது 47 நாடுகளால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டதுமாகும். அப்படியான ஒரு தீர்மானம் இலங்கை அரசமைப்புக்கு முரணானது என்றால் சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் தவறானவையா?. 47 நாடுகள் பிழையான பாதையில் சென்று தவறான முடிவு எடுத்துள்ளனவா?.

### இனவாதத்துக்குள் குறுக்கப்பட்ட நாடு

தீர்மானத்திலிருந்து விலகிக்கொண்டமை ஒரு பெரும் வரலாற்றுச் சாதனை என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பெருமைப்பட்டுக்கொண்டுள்ளார். ஒரு நாடு தன்னைத்தானே சர்வதேசத்திலிருந்து தனிமைப்படுத்துவது வரலாற்றுச் சாதனை என நம்பும் அளவுக்கு சிங்கள அரசியல், பௌத்த சிங்கள இனவாத உலகத்துக்குள் குறுக்கப்பட்டு விட்டது என்பதையே அவரது கருத்து வெளிப்படுத்தி நிற்கிறது.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கை தொடர்பாக தனது கடும் கண்டனங்களை வாய் மூல அறிக்கை மூலம் வெளியிட்டுள்ள மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல்ட் பச்லெட், இலங்கை அரசு உள்ளகப் பொறிமுறைகள் மூலம் விசாரணைகளை மேற்கொள்ளப்போவதாக குறிப்பிட்டிருப்பதை நிராகரித்துள்ளார். கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறைகளின் மீது நம்பிக்கை இல்லை எனக் கூறியிருக்கின்றார். நீதி கிடைப்பதற்கான எவ்வித உத்தரவாதமும் இல்லை. நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் என்பவற்றுக்கு எதிரான கட்டுப்பாடற்ற நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தும் முயற்சிகளை இல்லாமல் செய்யும் அபாயம் ஏற்படும். சிவில் நிர்வாக விடயங்களில் இராணுவ அதிகாரிகளை நியமித்ததன் மூலம் இராணுவமயப்பட்ட ஆட்சியை உருவாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பும் வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

மனித உரிமைகள் ஆணையாளரின் இந்த அறிக்கையிலிருந்து இலங்கையில் தமிழ் மக்கள் மேல் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எவ்விதத்திலும் இலங்கை அரசிடமிருந்து நியாயங்களை பெற்றுக்கொள்ள முடியாதென்பதை சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ளதென்பது தெளிவாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### சர்வதேசத்துக்கு விடுக்கப்பட்ட சவால்

இது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளின் ஒரு பகுதியாய் உள்ள அதே வேளையில், சர்வதேசத்துக்கு இலங்கை அரசால் விடுக்கப்பட்ட ஒரு சவால் என்றே கருதுகிறோம்.

ஐக்கிய நாடுகள் சபையும், உலக நாடுகளும் இலங்கை அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமான, ஜனநாயகத்திற்கு எதிரான, மனித குல தர்மத்துக்கு விரோதமான நடவடிக்கைகளை, சர்வதேச அரங்குக்கு கொண்டு சென்று சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக்கொள்வதற்கும், பறிக்கப்பட்ட உரிமைகளை திரும்ப பெறுவதற்கும் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக தனித்துவத்துடனும், இறைமையுடனும் வாழ்வதற்கான அடித்தளத்தை உருவாக்குவதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு நீதியை நிலை நாட்ட வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

சுயநல அரசியலுக்காக ஒரு இனத்தின் தனித்துவத்தையும், சுயாதிபத்தியத்தையும் அழிக்க முனையும் அரசின் முயற்சிகளை தமிழ் மக்கள் தோற்கடிப்பார்கள் என்பதை திட்டவட்டமாக கூறிவைக்க விரும்புகிறோம். தனது இனத்தையும் தனது மக்களையும் விற்று அரசியல் செய்யும் மூன்றாந்தர அரசியல்வாதிகளை வரலாறு குப்பைக்கூடைக்குள் தூக்கியெறியும் என்பது கடந்த காலம் கற்றுத்தந்த அனுபவ பாடமாகும். அதிலிருந்து இவர்களும் தப்பிவிட முடியாது.- என்றுள்ளது. (எ)

# வறிய மாணவர் ஐவருக்கு உதவி

யாழ்ப்பாணம், மார்ச் 2

வயாவிளான் மானாம்பிராய் பிள்ளையார் கோவில் அறக்கட்டளை நிதியம் வசதியற்ற மாணவர்கள் ஐந்து பேருக்கு மாதாந்த நிதி உதவிகள் நேற்றுமுன்தினம் வழங்கியது.

புலம்பெயர்ந்து அமெரிக்காவில் வசித்துவரும் தாயக உறவான பொறியியலாளரர் ஞா. சின்னையாவின் எண்ணக்கருவில் ஆரம்பிக்கப்பட்ட அறக்கட்டளை நிதியத்தினூடாகத்தெரிவு செய்யப்பட்ட ஐந்து மாணவர்களுக்கு கற்றல் நடவடிக்கைக்காக மாதாந்த உதவித் தொகைகள் வழங்கப்பட்டன.

சமூக மேம்பாட்டுக்காகவும் வசதியற்ற பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கையை மையமாகக்கொண்டும் வசதியற்ற மாணவர்களை ஊக்கப்படுத்தும் நடவடிக்கையாகவும் உதவிகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் அறக்கட்டளை நிதியத் தலைவர் த.மகாலிங்கம், செயலாளர் சி.வதனகுமார் ஆகியோர் கலந்து கொண்டு உதவி வழங்கினர். (த-110)





# மாணவர்கள் கௌரவிப்பு

வவுனியா,மார்ச்.2

வவுனியா மாவீரன் பண்டாரவன்னியன் மறுமலர்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் 2019 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். மன்றத்தின் தலைவர் மா. கதிர்காமராஜா தலைமையில், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி அ. புஸ்பநாதன், மேலதிக மாவட்டச் செயலர் மற்றும் சட்டத்தரணிகள், பாடசாலை அதிபர்கள், கலைஞர்கள், மாணவர்கள் சமூக ஆர்வலர்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-110)

# தமிழருக்குள் மதக்கட்சிகள் தமிழ் தேசியத்துக்கு ஆபத்து

## நகரசபை உறுப்பினர் எதிர்வுகூறல்

தமிழருக்குள் மதக்கட்சிகள் உருவாகினால், தமிழ் தேசியம் அழிவடையும் என்று வவுனியா நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் மோகன் தெரிவித்தார். வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருக்கேதீஸ்வர வளைவுப் பிரச்சினையை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தீர்த்திருக்க வேண்டும். ஆலய நிர்வாகத்தினர் மற்றும் கிறிஸ்தவ மதத் தரப்புகளை உள்ளடக்கி காலம் தாழ்த்தாது தீர்த்திருக்க வேண்டும். இன்று சைவ மதம் சார்ந்த கட்சி உருவாக்கபட்டு சுயேட்சை யாகத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதே போன்று கிறிஸ்தவ மதத்தவர்கள் சார்பிலும் கட்சியொன்று கட்சிஒன்றை உருவாக்கப்படவுள்ளது. இந்த நிலை மாற்றப்படவேண்டும். எமது கலை, கலாசாரங்கள் வளர்க்கப்பட வேண்டும்.

அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இதே செயற்பாடுகள் தொடர்ந்தால் இனப் பிரச்சினை மதப் பிரச்சினையாக மாறி இறுதியில் நாங்கள் இருப்பதற்கு கூட இடமில்லாத நிலைமை ஏற்படும்- என்றார். (க-110)

# தினமும் வீணாகும் 500 போத்தல்கள் கள்

## சந்தை வாய்ப்பில்லாமல் உற்பத்தியாளர்கள் கவலை

கிளிநொச்சி, மார்ச்.2

நாள் ஒன்றுக்கு 500 போத்தல்களுக்கு மேல் கள் வீணாக ஊற்றப்படுகிறது. எனினும் தென்னிலங்கையிலிருந்து போத்தல்களில் கள் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது என்று கிளிநொச்சி கள் உற்பத்தித் தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.



கிளிநொச்சியில் கடந்த சனிக்கிழமையன்று தொழிலாளர்கள் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் 150க்குத் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது பருவ கால உற்பத்திகள் போதுமான அளவு கிடைக்கின்றன.

எனினும் சந்தைப்படுத்த முடியவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு தென்னிலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட கள் விற்பனை தாராளமாக நடைபெறுகிறது.

இதனால் நாம் பெறும் கள்ளை நிலத்தில் ஊற்ற வேண்டியுள்ளது.

கண்டாவளைப் பிரதேசத்தில் மாத்திரம் 200 போத்தல்களுக்கு அதிகமாக கள் நாளாந்தம் வீணாக ஊற்றப்படுகின்றது.

ஏனைய இடங்களிலும் இதே நிலைமை தான்.

போதிய உற்பத்திகள் இல்லாத சந்தர்ப்பத்தில் போத்தல்களில் அடைக்கப்பட்டவற்றை விற்பனை செய்யலாம்.

ஆனால் பருவகால உற்பத்திகள் அதிமாகக் கிடைக்கும் சந்தர்ப்பத்திலும் எமக்குச் சந்தை வாய்ப்புக் கிடைக்கவில்லை.

எனவே வீண் விரயமாக்கப்படும் எமது உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை உரியவர்கள் மேற்கொள்ள வேண்டும். என்றனர்.

(சு-35)

### சந்திரிகாவை மீள அழைக்கிறது சு.க.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் மீண்டும் இணைந்து கொள்ளுமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளரான தயாசிறி ஜயசேகர ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார். எதிர்வரும் பொதுத் தேர்தலை நோக்காக கொண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி பல்வேறு செயற்றிட்டங்களை ஆரம்பித்துள்ளது என்று கூறட்டு கின்றதுகட்சியின்பலத்தை மேலும் வலிமைப்படுத்துவதற்கு கட்சியில் இருந்து விலகியஅனைவருக்கும் சுதந்திரக்கட்சி அழைப்பு விடுத்துள்ளது. இந்தப் பின்னணியிலேயே சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கும் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் அழைப்பு விடுத்துள்ளார். (எ)

### சிறுவனுக்கு மருத்துவ உதவி

யாழ்ப்பாணம்,மார்ச்.2

ஜீவ ஊற்று அன்பின் கரம் ஊடாக சிறுவனொருவருக்கு மருத்துவ உதவி வழங்கப்பட்டது. கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிறுவனொரு வனுக்கு மருத்துவ உதவித் தொகையாக 40 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. இதற்கான நிதி உதவியை நிறுவனத்தின் சுவிட்சர்லாந்துக் கிளையைச் சேர்ந்தறொசான், நெதர்லாந்து சிவா ஆகியோர் வழங்கினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சு-222)

### தினேஷ் குழுவினர் நாடு திரும்பினர்

கொழும்பு, மார்ச் 2

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபை அமர்வில் பங்கேற்கச் சென்ற அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட தூதுக் குழுவினர் நாடு திரும்பியுள்ளனர்.

இந்தத் தூதுக் குழுவினர் நேற்று முன்தினம் மாலை நாட்டை வந்தடைந்தனர் என்று கட்டுநாயக்க விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் இருந்து புறப்பட்ட ஈ.கே654 என்ற விமானத்தினூடாகவே வெளியுறவுத்துறை அமைச்சர் உள்ளிட்ட தூதுக்குழுவினர் நாட்டை வந்தடைந்தனர் என்று கூறப்படுகின்றது.

கடந்த அரசு இணை அனுசரணை வழங்கிய 40/1 மற்றும் அதற்கு முந்தைய 30/1, 34/1 ஆகிய தீர்மானங்களிலிருந்துவிலகுவதற்கான முடிவை இலங்கை அரசு சார்பாக உத்தியோகப்பூர்வமாக அறிவிப்பதற்காக தினேஷ் குணவர்தன ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபை அமர்வில் பங்கேற்கச் சென்றிருந்தனர். (எ)

### இன்றும், நாளையும் மின்சாரம் தடைப்படும்

யாழ்ப்பாணம், மார்ச்.2

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்றும், நாளையும் வடக்கின் குறிப்பிட்ட சில இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று சுன்னாகம் இலங்கை மின்சார சபையின் மின்வழங்கல் கட்டுப்பாட்டு நிலையத்தின் மின்பொறியிலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

அதற்கமைவாக இன்று திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்ப்பாணம்** அராலி பிரதேசம், செட்டியார்மடம் சந்தி, கரம்பிட்டி பிள்ளையார் கோவிலடி, அராலி ஐயனார் கோவிலடி, அராலி குடியிருப்பு, அராலி சரஸ்வதி பாடசாலை, யாழ்ப்பாணம் மயிலியதனை, ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி** கௌதாரி முனை, நெற்புலவனூர், பரமங்கிராய் ஆகிய இடங்களிலும், வவுனியா முகத்தாங்குளம் 2 ஆம் வட்டாரம், சாளம்பைக்குளம், பகல அளுத்வத்த கிராமம், கூமாங்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் **மன்னார்** இசைமழைத்தாழ்வு, நரிக்காடு, ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை, மன்னார் இசைமழைத் தாழ்வு, நரிக்காடு, வட்டுபித்தன்மடு, புதுக்காமம் ஆகிய இடங்களிலும் **வல்வெட்டித்துறை** சிதம்பராக் கல்லூரிப் பகுதிகளிலும் ஆகிய இடங்களிலும், **வவுனியா** முகத்தாங்குளம் 2 ஆம் வட்டாரம், சாளம்பைக்குளம், பகல அளுத்வத்த கிராமம், கோவில்புதுக்குளம் கிராமம், நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய பிரதேசம், நேரியகுளத்திலிருந்து செட்டிக்குளம் வரை, கஜசிங்கபுர இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவித்துள்ளார். (க)

தென்மராட்சிப் பகுதியில்

## டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை 11 இலிருந்து

தென்மராட்சி, மார்ச் 2



நாட்டில் காணப்படும் டெங்கு நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த மத்திய சுகாதார டெங்குக் கட்டுப்பாட்டு அலகினர் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தவுள்ளனர்.


இதுபற்றிசகலதிணைக்களங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மழைக்காலத்தில் அனைத்துப் பகுதிகளிலும் டெங்குத் தாக்கம் காணப்பட்டது. சுகாதாரத்துறைத் திணைக்களத்தினர், பொலிஸார், படையினர், பிரதேச செயலகத்தினர், உள்ளூராட்சி சபையினர் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட கட்டுப்பாட்டு நடவடிக்கை காரணமாக பெப்ரவரி மாதத்தில் பெரும்பாலான பிரதேசங்களில் டெங்குத் தாக்கம் குறைந்து காணப்பட்டது. இந்நிலையில், சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டு அலகினர் அனைத்துத் திணைக்களங்களுடனும் இணைந்து டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தில் செயற்படுத்தி வருகின்றனர். தென்மராட்சியில் டெங்குத் தாக்கம் அதிகமாகக் காணப்படும் மூன்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் ஒருநாள் சோதனையும் தென்மராட்சி கல்வி வலயத்தின் அனைத்தும் பாடசாலைகளிலும் ஒரு நாள் சோதனையும் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் சிரமதானம் செய்யவும் திட்டமி டப்பபட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 11 ஆம் திகதி வரணி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட கரம்பைக்குறிச்சி, வடவரணி பிரிவுகளிலும், 12 ஆம் திகதி கொடிகாமம் மத்தி கிராம அலுவலர் பிரிவிலும், 13 ஆம் திகதி வலயத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் 14 ஆம் திகதி சாவகச்சேரி நகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலுள்ள கோயிற்குடியிருப்பு பிரிவிலும் சோதனையும் 15 ஆம் திகதி துப்புரவுப் பணிகளும் நடைபெறும் என்று சுகாதாரப் பகுதியினர் மேலும் தெரிவித்தனர். குடியிருப்பாளர்கள் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளை துப்புரவாக வைத்திருக்குமாறும், நீரேந்து பொருள்கள் காணப்படின் அவற்றை அப்புறப்படுத்துமாறும் அறிவித்துள்ளனர். டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய இடங்கள் காணப்படின் குடியிருப்பாளர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த-9)

# கோடீஸ்வர யோகம் யாருக்கு அமையும்?




சோதிடத்தில் எந்தக் கிரகம் கெட்ட இடத்தில் இருந்தாலும், அந்த இடத்தை குரு பார்க்க நேரிட்டால், கெட்ட தோஷம் அடியோடு நீங்கிவிடும்.

நவக்கிரகங்களுக்கு மேலான குரு பகவான் பிரம்மாவின் பேரன் என்று புராணம் கூறுகிறது. இந்த குரு பலம் ஒருவரின் திருமணம் போன்ற மங்கலகரமான காரியங்களுக்கு அடிப்படையாக அமைகிறது.

ஒருவர் ஜாதகத்தில் குருவும், கேதுவும் இணைந்து அமைந்திருந்தால், அவர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலியாக இருப்பார் என்றும் ஒருநாள் கோடீஸ்வரர் ஆவார் என்றும் சோதிடம் கூறுகிறது.

ரிஷபம் லக்னமாக அமைந்து, பாக்கிய ஸ்தானமான 5ம் வீட்டில், அதாவது கன்னி ராசியில் குருவும், கேதுவும் இணைந்திருந்தால், அந்த ஜாதகத்தை உடையவர் கோடீஸ்வரர் ஆவது உறுதி.

**கோடீஸ்வர யோகம் யாருக்கு அமையும்?**

நடுவிரல், சனி விரல் என்று அழைக்கப்படும் விரலின் அடிப்பாகத்தில் அமைந்திருப்பது சனி மேடு என்று அழைக்கப்படுகிறது.

இந்த சனி விரலின் கீழ் காணப்படும் வட்டத்துக்கு சனி வளையம் என்று பெயர்.

ஒருவரின் கையில் நடுவிரலில் சனி வளையம் அமைந்து, அந்த வளையத்தில் இருந்து சிறு ரேகைகள் மேல் நோக்கிச் செல்லும். அதே சமயம் விதி ரேகை, கங்கண ரேகையில் இருந்து எந்த குறுக்கு வெட்டும் இல்லாமல் நேராக சனி விரலை தொட்டு நிற்கும் அல்லது சனி மேட்டில் முட்டி நிற்கும். இவ்வாறான கைரேகை அமைப்பு அனைவருக்கும் அமையாது. ஆனால் இப்படி உள்ளவர்களுக்கு கோடீஸ்வர யோகம் உண்டு என்று கைரேகை சாஸ்திரம் கூறுகிறது.



# காது, மூக்கு குத்துவது எதற்காக?

காது, மோதிர விரல் இந்த இரண்டு இடங்களிலாவது உலோகம் பயன்படுத்தினால் உடல் ஆரோக்கியம், மன உறுதி, உயிர்த் தன்மையில் சமநிலை ஆகியவை ஏற்படும்.

இந்த உடல் வெறும் எலும்பு, மாமிசம் மட்டும் இல்லை. இந்த உடலுக்கு அடிப்படையாக ஒரு சக்தி மண்டலமும் இயங்குகிறது. இந்த சக்தி மண்டலத்தில் நம் காது, மூக்கு, தொண்டைக்குழி, மோதிர விரல் மற்றும் சில கால் விரல்கள் போன்ற சில உறுப்புகள் மிகவும் முக்கியமானவையாக இருக்கின்றன. எம் உடல் ஆரோக்கியம் மற்றும் மன உறுதி போன்றவை சமநிலையுடன் இருப்பதற்கு இந்த சில உறுப்புகளில் உள்ள சக்தி மையங்களைக் கவனிப்பது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. அந்த இடங்களில் சிறிது உலோகத்தை உபயோகப்படுத்துகிறோம். இப்படிச் செய்யும்போது அங்குள்ள சக்திமண்டலம் தூண்டப்படுகிறது. இதனால் உடல்நிலை உறுதியாகிறது. மேலும் ஆரோக்கியமும் மேம்படுகிறது.

இதனால் குழந்தைகளுக்கு ஒரு வயது பூர்த்தியாவதற்கு முன்பு காது குத்தப்படுகின்றது. பெண் குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட வயது தாண்டுவதற்கு முன்பு மூக்கு குத்தப்படுகின்றது. அனைத்துக் கலாசாரங்களிலும் ஓர் உணர்தலின் பேரில்தான் குத்தப்படுகின்றது

குறைந்தபட்சம் காது, மோதிர விரல் இந்த இரண்டு இடங்களிலாவது உலோகம் பயன்படுத்தினால் உடல் ஆரோக்கியம், மன உறுதி, உயிர்த்தன்மையில் சமநிலை ஆகியவை ஏற்படும்.

# அகமும் முகமும்



ஒவ்வொரு நாளும் பல்வேறு வகைப்பட்ட மனிதர்களை நாம் சந்திக்கின்றோம். சந்தித்த மனிதர்களோடு நாம் பழகுவதற்கும், அவர்களைப் பற்றி புரிந்துகொள்வதற்கும் முயற்சிக்கின்றோம். மற்றவர்களிடம் கேட்டுப் புரிந்து கொள்வது ஒருரகம். பார்த்தவுடன் உருவ அமைப்பைக் கண்டு இவர்கள் இப்படித்தான், இவர்கள் குணம் இப்படித்தான் இருக்கும் என்பதை அறிந்து கொள்வது மற்றொரு ரகம். இதில் 2வது ரகத்துக்கு உறுதுணையாக இருப்பது தான் சாமுத்ரிகா லட்சண சாஸ்திரம். ஒரு சிலரைப் பார்த்தவுடனேயே காரணம் தெரியாமலேயே அவர்களைப் பிடித்துவிடுகின்றது. சிலரிடம் வலியச் சென்று நாமே பேசத் தொடங்குகிறோம். உங்களை எங்கோ பார்த்தது போல் இருக்கிறதே? நீங்கள் என்ன செய்கிறீர்கள்? என்று தம்மையறியாமலேயே கேள்விக்கணைகளைத் தொடுக்கத் தொடங்குகிறோம். எல்லாவற்றிற்கும் தோற்றப் பொலிவுதான் காரணம் என்கிறது சாமுத்ரிகா லட்சண சாஸ்திரம்.

அங்க அமைப்புகளை வைத்து ஒருவருடைய எண்ணங்களை யூகிக்க நாம் முயற்சிக்கின்றோம். அந்த யூகம் ஓரளவேணும் சரியாக இருப்பதால்தான், சாமுத்ரிகா லட்சண சாஸ்திரத்தைப் பலரும் நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துகிறார்கள்.

மனிதர்களின் எல்லா அங்கங்களுக்கும் இந்த சாஸ்திரத்தில் பலன்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. எந்த அங்கம் எந்த அளவில் இருந்தால் எந்த மாதிரியான வாழ்க்கை அமையும்? என்ன மாதிரியான குணங்கள் இருக்கும் என்பதை முன்னோர்கள் வரையறுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

**நீண்ட மூக்கு**

குறிப்பாக மூக்கு நீண்டு இருப்பவர்கள், கிளி மூக்குத் தோற்றத்தில் அமைந்தவர்கள் மிகுந்த புத்திக் கூர்மையுடையவர்களாகவும், ராஜதந்திரிகளாகவும் இருப்பார்கள் என்கிறது இந்த சாஸ்திரம். வலதுபக்கம் மூக்கு வளைந்திருந்தால், பிறர் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்துகொள்ள மாட்டார்கள். சப்பை மூக்கைப் பெற்றவர்கள் எதிலும் ஆர்வம் காட்டமாட்டார்கள். நடப்பது நடக்கட்டும் என்று இருப்பார்கள்.

**அகம்**

ஒருவரது முகத்தை வைத்தே அகத்தை (மனதை) அறிந்துகொள்ளலாம். எனவேதான் 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்று சொல்லி வைத்தார்கள். ஒருவரது தலை வட்ட வடிவமாக இருந்தால், அவருக்கு சகல செல்வங்களும் கிடைக்கும். நரம்புகள் புடைத்துக்கொண்டு தென்பட்டால் அவர்களுக்குப் பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்படும். உடம்புக்கு ஏற்ற விதத்தில் அளவான தலை இருந்தால் ராஜயோகம் பெற்றவர்களாக விளங்குவர்.

**கன்னத்தில் குழி**

கன்னத்தில் பள்ளம் இருந்தால் பொருள் வளம் பெற்றவராக இருப்பார்கள். அதைப்பார்த்து பணக்குழி விழுகின்றது என்பார்கள். அவர்களுக்கு வாய்த்த பிள்ளைச் செல்வங்களாலும் பெருமைகள் வந்து சேரும். ஒருவருடைய முகம் அழகாகவும், பிரகாசமாகவும் இருந்தால், அவருக்கு அரசருக்கு இணையான வாழ்க்கை அமையும். பரந்த முகமாக இருந்தால் யோகியாகும் வாய்ப்பு கிட்டும். நீண்ட முகத்தைப் பெற்றவர்கள் பொருளாதாரப் பற்றாக்குறையில் சிக்கித் தவிப்பார்கள். சதைப்பிடிப்பான முகத்தைப் பெற்றவர்கள் சுகங்களையும், சந்தோஷங்களையும் அதிகமாக அனுபவிப்பார்கள். ஏறு நெற்றியாக இருந்தால் ஆயுள் தீர்க்கமாக இருக்கும்.

**கண்கள்**

இரண்டு புருவங்களுக்கும் மத்தியில் பள்ளம் இருக்கக்கூடாது என்கிறது சாமுத்ரிகா லட்சண சாஸ்திரம். அப்படி இருந்தால் வறுமை தாண்டவமாடும். இரண்டு புருவங்களும் ஒன்றாக இணைந்திருந்தால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். ஒன்றை ஒன்று தொடாமல் வில்லைப்போல் வளைந்திருந்தால் பெரிய செல்வந்தர்களாக விளங்குவர்.

நீண்டு அகண்ட பெரிய கண்களை உடையவர்கள் செயல்வீரர்களாகவும், நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிக்கும் அசகாய சூரர்களாகவும் இருப்பர்.

சிறிய காதுடையவர்கள் மிகுந்த சிக்கனமானவர்கள். தன்னுடைய தேவைகளைக் கூடப்பூர்த்தி செய்யத் தயங்குவார்கள். அகண்ட பெரிய காதுகளை கொண்டவர்கள், கேள்வி ஞானம் பெற்றவர்களாக இருப்பார்கள். நியாயத்திற்கு குரல் கொடுப்பார்கள். சிறிய வாயைக் கொண்டவர்கள் நிதானமாகச் செயல்படுவர். எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துப் பேசுவர். அகன்ற வாயைக் கொண்டவர்கள் எதையும் சிந்திக்காமல் பேசுவர். தான் எடுத்த முடிவே சரியானது என்று வாதிடுவார்கள்.

தாடையில் பள்ளம் இருந்தால், இருகூறாகக் காட்சி தந்தால் அவர்களுக்குப் பொதுநல ஈடுபாடு இருக்கும். பதவிகள் தேடிவரும். வாழ்வின் மையப் பகுதியிலிருந்து வருமானம் குவியத் தொடங்கும்.

இப்படி முக அமைப்பைக் கொண்டே முக்கிய குண நலன்களை நாம் அறிந்துகொள்ளலாம்.

## வீட்டின்...

டுள்ளது. தாக்குதலுக்குள்ளான வீட்டின் சுவரில் ஆவா குழு என்றும் எழுதப்பட்டுள்ளது.

பண்டாரிக்குளம், கூமாங்குளம் வீதியில் உள்ள வீட்டின் முன்னால், மோட்டார் சைக்கிள்களில் வந்த இளைஞர்கள் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளதுடன், வீட்டுச் சுவரில் ஆவா 001 என்றும் எழுதியுள்ளனர்.

வீட்டில் இருந்தவர்களை கூப்பிட்டதாகவும், அவர்கள் அச்சத்தால் வெளியில் வராமையால் கேற் மீது கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பகுதிக்குச் சென்ற அயலவர்கள் வீட்டாருடன் பேசி பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பண்டாரிக்குளம் மற்றும் வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விசாரணைகளின் போது மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்த இளைஞன் ஒருவரை விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளதுடன், மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர். (ஒ-5)

## ரூ.5 லட்சம்...

பொருள் மற்றும் ஜிபிஎஸ் கருவி என்பவற்றுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று மாலை 5 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

முறிகண்டியிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த மகேந்திரா ரக வாகனத்தை சந்தேகத்தின் அடிப்படையில் விசேட அதிரடிப் படையினரும், இராணுவப் புலனாய்வு பிரிவினரும் இணைந்து சோதனை செய்த போது ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான ஐம்பது கிராம் ஐஸ் போதைப் பொருளும் ஜிபிஎஸ் கருவியும் கைப்பற்றப்பட்டதோடு. சந்தேகநபரான வாகன சாரதியும் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஒ-5-214)

## பரப்புரைக்...

களை விடுவிக்க கோரி கேப்பாபிலவு பிரதான இராணுவ முகாமுக்கு முன்பாக நேற்று மாபெரும் போராட்டத்துக்கு தயாராகிக் கொண்டிருந்தனர்.

கேப்பாபிலவு மக்களின் ஜனநாயக வழி போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் மூன்று வருடம் பூர்த்தியாகிய நிலையில் அதுகுறித்து அடையாளப்போராட்டத்துக்கே அவர்கள் தயாராகிக் கொண்டிருந்தனர். இந்த நிலையில் போராட்டத்தில் பங்குபற்றவிருந்த ஒரு தொகுதி மக்களை, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தான் நடத்தும் இளைஞர் மாநாட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார். (ஒ-5)

## மூவின...

யைப் படுதோல்வியடையச் செய்ய நாட்டிலுள்ள சிங்களம், தமிழ், முஸ்லிம் என மூவின மக்களும் அணிதிரள வேண்டும். இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளார் முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின்தலைவருமானரணில்விக்கிரமசிங்க. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் மீண்டும் ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷ அரசு நாட்டை நாசமாக்கும் நடவடிக்கைகளில்தான் ஈடுபட்டு வருகின்றது.

இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தைக்கூட நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வக்கற்ற இந்த அரசு, வரிகளைக் குறைக்கின்றோம் என்று கூறிவிட்டு பொருள்களின் விலைகளை உயர்த்தி அப்பாவி மக்களின் வயிற்றில் அடித்துள்ளது.

அதேவேளை, இலங்கை தொடர்பான ஐ.நா. தீர்மானங்களின் இணை அனுசரணையிலிருந்து விலகி சர்வதேச மட்டத்தில் நாட்டுக்கு இருந்த மரியாதையையும் இந்த அரசு இல்லாமலாக்கிச் செய்துவிட்டது. பாரதூரமான விளைவுகளை எமது நாடு சந்திப்பதற்கு இந்த அரசு களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

மீண்டும் குடும்ப ஆட்சி நடத்தும் இந்த அரசை பொதுத்தேர்தலில் வெல்ல வைத்தால் இங்கு காட்டாட்சிதான் நிலவும்.

எனவே, ஏப்ரல் 25ஆம் திகதி நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ராஜபக் ஷ அரசைப் படுதோல்வியடையச் செய்யும் விதத்தில் மூவின மக்களும் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்தவேண்டும்-என்றார். (ஒ-5-22)

## 14 தங்க....

தங்க விருதுகளைக் கைப்பற்றியுள்ளது. நிதிச் செயலாற்றுகையின் தொடர்ச்சியான முன்னேற்றத்துக்காக நாடாளுமன்ற பொதுக் கணக்குகள் குழுவால் 2015ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட இணைய மயப்படுத்தப்பட்ட நிதிச் செயலாற்றுகையில் மதிப்பீட்டின் கீழ் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், மாவட்டச் செயலகங்கள் அதிகார சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் அடங்களாக 844 நிறுவனங்களினது நிதிச் செயலாற்றுகை மதிப்பீடு செய்யப்பட்டது.

2018ஆம் ஆண்டு அதிஉயர் செயலாற்றுகையை வெளிப்படுத்திய 110 நிறுவனங்களுக்கு தங்க விருதுகளும் 114 நிறுவனங்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண சபையைச் சேர்ந்த 32 அலுவலகங்களில் 14 அலுவலகங்களுக்கு விருதுகளும், 17 அலுவலகங்களுக்குசான்றிதழுமாக31திணைக்களங்கள் உயர் கௌரவத்தைப் பெற்றன.

இதன் பிரகாரம் வடக்கு மாகாண சபையின் நிறுவனங்களின் பெறுபேற்றின் அடிப்படையில் நிதிச் செயலாற்றுகை பெறுப்பேற்றினை அடிப்படையாகக் கொண்டு வடக்கு மாகாண சபைக்கு பிரத்தியேக முதன்மை விருதும் வழங்கப்பட்டது. (ஒ-5-105)

## எஞ்சிய....

வலியுறுத்தியுள்ளனர்.

கேப்பாப்புலவு காணிவிடுவிப்பு தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், கேப்பாப்பிலவு மக்கள் நேற்றுப் போராட்டம் முன்னெடுத்திருந்தனர். இந்தப் போராட்டத்திலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது பூர்வீக நிலத்துக்கான போராட்டம் ஆரம்பித்து மூன்று வருடங்கள் நிறைவு பெற்று, நான்காவது வருடத்தில் கலடி பதித்திருக்கின்றோம்.

இந்த நாளில் எமது நிலங்களை விடுவிக்குமாறு கோரி போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

அதேவேளை கடந்த பதினொரு வருடங்களிலே, தற்போது நாட்டுக்குப் புதிய தொரு ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில் மூன்றாவது ஜனாதிபதியிடம் நீதி கோரும் வகையில் இந்தப் போராட்டம் அமைந்துள்ளது.

இந்த மூன்றாவது ஜனாதிபதியவது, எங்களுடைய நிலங்களுக்கான ஒரு நீதியைப் பெற்றுத்தருவார் என்ற ஒரு நம்பிக்கையில் நான்காவது வருடத்தில் காலடி எடுத்துவைத்துள்ளோம்.

எமது காணிகளுக்காக நாம் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுப்பதெனத் தீர்மானித்திருக்கின்றோம். அதில் எவ்வித மாற்றமும் இல்லை. பூர்வீகமான 55குடும்பங்களுக்குரிய 59.8 ஏக்கர் காணி விடுவிக்கப்படவேண்டும் என்பதில் எந்தவிதமான மற்றுக் கருத்துக்களும் இல்லை.

தற்போது கேப்பாப்பிலவு இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதி விடுவிக்கப்பட்டு, மறுபகுதி விடுவிக்கப்படாமல் இருக்கின்றது. விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பாடசாலைகள், பொது நோக்குமண்டபம், மைதானம் எவையுமே இல்லாத நிலையில் காணப்படுகின்றது. அனைத்தும் இராணுவம் அபகரித்து வைத்துள்ள பகுதிகளுக்குள்ளேயே காணப்படுகின்றன.

எனவே விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இருக்கின்ற மாணவர்கள் பாடசாலைக்கு செல்ல 4 கிலோமீற்றர் தூரம்வரையில் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. காணிகளை விரைந்து விடுவிக்கக் கோருகின்றோம், என்றனர்.

மேலும் இந்தப் போராட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், வ.கமலேஸ்வரன், மற்றும் பிரதேசசபை உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், த.அமலன், குகநேசன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ஒ-5-246)

## 60 அரச...

சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராணுவ அதிகாரிகள் மீது எமது அரசு மதிப்பு வைத்திருந்தது. அவர்களின் கௌரவம் பாதுகாக்கப்பட்டது. ஆனால், இந்த ஆட்சியின்கீழ் இராணுவத்தின் கௌரவத்துக்கு களங்கம் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

பொலிஸ் அதிகாரிகளால் முன்னெடுக்கப்படவேண்டிய வேலைகளை இராணுவம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த நிலைமை ஏனைய துறைகளுக்கும் வந்துவிடுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அமைச்சுகளின் செயலர்கள், சுங்க திணைக்கள பிரதானி என சிவில் சேவைகளுக்கு தொடர்ச்சியாக இராணுவ நியமனங்கள் வழங்கப்பட்டுவருகின்றன. இதுவரையில் 20 நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் அதிபர் மற்றும் மாவட்டச் செயலர் ஆகிய பதவிகளுக்குகூட இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

பொதுத்தேர்தலின் பின்னர் அரச சேவையின் முக்கிய பதவிகளுக்கு 60 இராணுவ அதிகாரிகளை ஈடுபடுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படுவதாகவும் எமக்கு அறியக் கிடைத்துள்ளது.

நாம் முப்படையினர் மற்றும் பொலிஸாரின் சேவையை மதிக்கின்றோம். அவர்கள் நாட்டுக்காக அளப்பரிய பணி ஆற்றியுள்ளனர். எனினும், அவர்களுக்குரிய பணிகளுக்கு அப்பால் செயலாற்றுமாறு பணிப்புரை விடுக் கப்படுவதே சிக்கலுக்குரிய விடயமாகும்.

ஜனாதிபதி தமது பணிகளை செய்து கொள்வதற்காக இராணுவத்துடன் செல்லும் பயணமானது, நாடு இராணுவ ஆட்சியை நோக்கி சென்றுவிடுமோ என்ற அச்சம் எமக்கு ஏற்பட்டுள்ளது, என்றார். (ஒ-5-44)

## நாடாளுமன்ற...

டுள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வர்த்தமானியில் இன்று கையெழுத்திடுவார். நாடாளுமன்றம் இன்று நள்ளிரவு கலைக்கப்பட்டு, 10 தொடக்கம் 17 நாள்களுக்குள் வேட்பு மனுக் கோரல் இடம்பெறும். 55 தொடக்கம் 60 நாள்களுக்குள் பெரும்பாலும் ஏப்ரல் 25ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் இடம் பெறும். (ஒ-5)

## பெண்...

ருந்து சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு வரப்படும்போது உயிரிழந்தார் என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

பெண்ணின் சாவு தொடர்பாக, பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ. இளங்கீரன் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது. (ஒ-5-9)

## கொள்ளை...

பாலியல் துன்புறுத் தல்களை மேற்கொள்வது போன்ற குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்ட நால்வரையும் நகைக் கடை உரிமையாளரையும் எதிர்வரும்11ஆம்திகதிவரைவிளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் இருவர் மீது கைக்குண்டை வைத்திருந்தமை ஆபத்தான ஆயுதங்களை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டும் மற்றும் நால்வருக்கும் கொள்ளை, ஆபத்தான ஆயுதங்களுடன் கொள்ளையில் ஈடுபட்டமை மற்றும் வீடுடைத்தமை உள்ளிட்ட குற்றச் சாட்டுக்களை முன்வைத்து அச்சுவேலி பொலிஸார், பி அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

கொள்ளைச் சந்தேகநபர்கள் நால்வரும் அவர்களிடம் நகைகளை வாங்கிய நகைக் கடை உரிமையாளரும் மல்லாகம் நீதிவான் முன்னிலையில் நேற்று மாலை முற்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை ஆராய்ந்த நீதிவான், எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஒ-5-26)







# இன்றைய நாள்

**மேடம்:** சமூக நிகழ்வுகள் மனதில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது. சீரான அளவில் பணவரவு கிடைக்கும். வெளியூர் பயணம்பயன் அறிந்துமேற்கொள்ளலாம்.

**இடபம்:** நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். உங்களின் நற்செயல் உறவினரால் பாராட்டைப் பெறும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதலாக பணி புரிவீர்கள். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** நண்பரின் செயலில் குறை காண வேண்டாம். உத்வேகத்துடன் செயல்படுவீர்கள். தொழில். வியாபார வளர்ச்சிக்கு அளவான மூலதனம் உதவும். உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

**கடகம்:** எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். புதிய செயல்கள் அனைத்தும் இனிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். தாயின் அன்பு, ஆசியை பெறுவீர்கள்.

**சிம்மம்:** முன்யோசனையுடன் செயற்பட்டு நண்பரின் பாராட்டைப் பெறுவீர்கள். குடும்பத் தேவைகளைப் பெருமளவில் பூர்த்தி செய்வீர்கள். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.

**கன்னி:** குடும்பத்தினரின் உதவியால் முக்கிய செயலை மறக்காமல் நிறைவேற்றுவீர்கள். மனதில் புதிய நம்பிக்கை பிறக்கும். தொழில், வியாபாரத்தில் உருவாகும் இடையூறை தாமதமின்றி சரிசெய்வீர்கள்.

**துலாம்:** சிலர் உங்களுக்கு தந்த வாக்குறுதிக்கு மாறாக செயல்படுவர். தொழில், அளவான பணவரவு கிடைக்கும். சீரான ஓய்வு ஆரோக்கியம் பெற உதவும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** எண்ணம், செயல் சிறந்து கூடுதல் நன்மை தரும். விமர்சனம் செய்தவரின் அன்பை பெறுவீர்கள். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்கி மகிழ்வர்.

**தனுசு:** லட்சிய மனதுடன் பணிபுரிந்து நிர்வாகத்திடம் பாராட்டை பெறுவீர்கள். திட்டமிட்ட பணிகள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும்.

**மகரம்:** எந்த செயலையும் பலமுறை பரிசீலனை செய்யவது நன்மை தரும். நண்பரால் தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். புதிய இனங்களில் பணச்செலவு ஏற்படலாம்.

**கும்பம்:** தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் வளரும். தொழில், வியாபார வளர்ச்சியில் தாமதம் ஏற்படலாம். அதிக பயன்தராத பொருளை வாங்க வேண்டாம். அளவான பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** செயலில் தியாக குணம் வெளிப்படும். புதியவர்கள் விரும்பி வந்து அன்பு பாராட்டுவர். குடும்பத்தில் மகிழ்ச்சி, ஒற்றுமை நிலைத்திருக்கும். குடும்பத் தில் மகிழ்ச்சி, ஒற்றுமை நிலைத்திருக்கும்.



சிரியா - துருக்கி இடையிலான மோதலை அடுத்து இரு நாடுகளின் எல்லைப் பகுதிகளிலும் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து பலநூறு சிரியர்கள் அகதிகளாக கிரீஸுக்குள் நுழைந்துள்ளனர். (ம)

## ஆப்கானிஸ்தானில் இருந்து

# 4,000 சிப்பாய்களை மீளப்பெற்றது அமெரிக்கா!

காபூல், மார்ச் 2

தலிபன்களுடன் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்தானதை அடுத்து ஆப்கானிஸ்தானில் இருந்து 4,000 சிப்பாய்களை திரும்பப் பெற்றது அமெரிக்கா.



ஆப்கானிஸ்தானில் 2001ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப்போர் நடைபெற்று வருகிறது. இந்தப் போரில் ஈடுபட்டுவரும் தலிபன் பயங்கரவாதிகளை அழிக்க உள்நாட்டுபடையினருக்கு அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் ஆதரவு வழங்கி வருகின்றன.

இந்த நடவடிக்கைகளுக்காக ஆப்கானிஸ்தானில் 13 ஆயிரம் அமெரிக்கச் சிப்பாய்கள் குவிக்கப்பட்டுள்ளனர். இதற்கிடையே உள்நாட்டு போரை முடிவுக்கு கொண்டுவர ஆப்கானிஸ்தான் அரசின் உதவியோடு தலிபன்களுடன் கடந்த சில மாதங்களாக அமெரிக்கா அமைதிப் பேச்சு நடத்தியது. இந்தப் பேச்சில் இணக்கம் ஏற்பட்டு நேற்றுமுன்தினம் அமெரிக்கா - தலிபன் இடையில் அமைதிப் பேச்சு கைச்சாத்தானது. இதையடுத்து 4 ஆயிரம் சிப்பாய்களை அமெரிக்காவில் இருந்து திரும்பப் பெறுவதற்கு அமெரிக்கா முடிவு செய்துள்ளது. (ம)



# அமைதி ஒப்பந்தம் வரவேற்றது ஐ.நா

வொஷிங்டன், மார்ச் 2

அமெரிக்கா- தலிபன் இடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானமைக்கு ஐ.நா சபை பொதுசெயலர் குத்தேரஸ் வரவேற்றுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் 2001ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப்போர் நடைபெற்று வருகிறது. உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவர அந்த நாட்டு அரசின் உதவியோடு தலிபன்களுடன் கடந்த சில மாதங்களாக அமெரிக்கா அமைதி பேச்சு நடத்தியது.

இதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட அமெரிக்காவும், தலிபன் பயங்கரவாத அமைப்பும் ஒப்புதல் அளித்தன. இந்த ஒப்பந்தத்தை ஐ.நா சபை வரவேற்றுள்ளது. (ம)

# மலேசியாவுக்கு புதிய பிரதமர்!

கோலாலம்பூர், மார்ச் 2



மலேசியாவின் புதிய பிரதமராக முகைதீன் யாசின் தற்போது அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து மலேசியாவின் அரண்மனைத் தரப்பில், 'முன்னாள் உள்துறை அமைச்சர் முகைதீன் யாசின் மலேசியாவின் புதிய பிரதமராக அறிவிக்கப்பட்டிருக்கிறார். இதனைத் தொடர்ந்து அவர் ஞாயிற்றுக்கிழமை பதவி ஏற்க உள்ளார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து கட்சித் தலைவர்களின் பிரதிநிதிகள், தனிப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் கருத்துகளைக் கேட்டறிந்த பிறகு மலேசிய மன்னர் இதனை அறிவித்துள்ளார். பிரதமர் மகாதீர் முகமது தலைமையிலான ஆட்சி அமைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகிய நிலையில் பிரதமர் பொறுப்பை அன்வார் இப்ராகிமிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூட்டணிக் கட்சியில் சில பிரிவினர் வலியுறுத்திய நிலையில், ஆளும் கூட்டணியின் கட்சித் தலைவர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் முடிவில், மலேசியப் பிரதமர் மகாதீர் முகமது ராஜினாமா செய்யும் நாள் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் பிரதமர் மகாதீர் முகமது தனது பதவியை ராஜினாமா செய்தார். (ம)

# கொரோனா வைரஸால் 3,000 பேர் உயிரிழப்பு

பீஜிங், மார்ச் 2

கொரோனா வைரஸின் தாக்கம் சீனாவுக்கு வெளியிலும் மிகப் பெருமளவில் பரவி வருகின்றது. இந்த நிலையில் சீனாவில் மட்டும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூவா யிரத்தைத் தாண்டியது.



வுகான் நகரில் தோற்றம் பெற்ற கொரோனா அதிவிரைவாகசீனாவெங்கும் பரவியுள்ளது.

சீனாவுக்கு வெளியில் தென்கொரியா, ஈரான் ஆகிய நாடுகளில் கணிசமான அளவு பாதிப்பை ஏற்படுத்தத்தொடங்கியுள்ளது. ஆஸ்திரேலியா, அமெரிக்காநாடுகளிலும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சீனாவில் மட்டும் மூவாயிரத்தைத் தாண்டியது.

சுமார் 87 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சுமார் 9 ஆயிரம் பேர் தீவிர சிகிச்சைக்கு உட்பட்டுள்ளனர். (ம)



அமெரிக்கா - தாய்லாந்து இராணுவச் சிப்பாய்கள் இணைந்து தாய்லாந்தின் ஷொன்பெரி மாகாணத்தில் நேற்றுமுன்தினம் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டனர். (ம)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அமரர் திருமதி

**சசிதரன் அனுரதி**

**திதி: 02.03.2020**





கடந்த 01.02.2020 அன்று இறைபதம் அடைந்த அமரர் திருமதி சசிதரன் அனுரதி அவர்களின் 31 ஆம் நாள் ஆராதனைகள் இன்று (02.03.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

**077 742 7207**

கிளானை, இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.


# சிரியாவில் பதற்றம் விரைவில் குறையும்

## ரஷ்யா நம்பிக்கை





மொஸ்கோ, மார்ச் 2

துருக்கிச் சிப்பாய்கள் சிரியப் படையால் கொல்லப்பட்டத்தை தொடர்ந்துசிரியாவில் பதற்றமான சூழல் நிலவுகிறது. இந்த நிலையில் விரைவில் பதற்றம் குறையும் என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சகம் கூறும் போது, 'துருக்கி ரஷ்யா சமீபத்தில் நடத்திய பேச்சில் சிரியாவில் பதற்றங்களை குறைப்பதற்கான நம்பிக்கையை இரு நாடுகளும் வெளிப்படுத்திகொண்டன.

இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். எனினும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட தீவிரவாதிகளுக்கு எதிராக போராட்டம் தொடரும்' என்று தெரிவித்தது. (ம)


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 . 03 . 1927 | 01 . 03 . 2020 |

**திருமதி கோமதி நாகேந்திரம்**

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை மற்றும் காரைநகர் சம்பந்தர் கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோமதி நாகேந்திரம் நேற்று (01.03.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற Dr. சின்னையா நாகேந்திரம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி மல்லிகாதேவி லோகேஸ்வரன் (பிரான்ஸ்) அவர்களின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சேதுநாயகி சுபாரத்தினம் மற்றும் பார்வதி சேனாதிராஜா, தேவகி இராசரத்தினம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2020) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மதிமனை"
சம்பந்தர்கண்டி,
காரைநகர்.

**076 908 4500**

தகவல்:
குடும்பத்தினர்.



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## அந்தியேட்டியும் 60ஆம் நாள் நினைவஞ்சலியும்





**அமரர் வன்னியசிங்கம் வரதீபன்**

கடந்த 05.01.2020 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எமது செல்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (03.03.2020) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 04.03.2020 புதன்கிழமை அவரது தந்தையின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(CS/31615)(11,17)

"தண்டிகை வாசா"
உடுவில் வீதி, மானிப்பாய்.
021 225 5358

**வன்னியசிங்கம் (அப்பா)**




# ரெட் றோஸை தோற்கடித்து இறுதியில் சென். நீக்கிலஸ்!



யாழ்ப்பாணம், மார்ச் 2
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்படும் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் நாவாந்துரை சென். நீக்கிலஸ் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
களனி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து ரெட் றோஸ் அணி மோதியது.
ஆட்டத்தின் ஆரம்பம் முதலே சீரான இடைவெளியில் சென். நீக்கிலஸ் அணி முன்னிலை வகித்து வந்தது. கிடைத்த வாய்ப்புக்களைச் சரியாகப் பயன்படுத்திய அந்த அணி முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்றது. சென். நீக்கிலஸின் சார்பில் றொக்சன் இரு கோல்களையும், விக்கி மற்றும் சாம்சன் இருவரும் தலா ஒரு கோலையும் பதிவுசெய்தனர். (ம-23)

## பாடும்மீன் அணி அபார வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 2
வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியில் நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் குருநகர் பாடும்மீன் அணி வெற்றிபெற்றது. வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பூநகரி இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி மோதியது.
இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 6:0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. கெயின்ஸ் 3 கோல்களையும், கீதன் 2 கோல்களையும், விசோத் ஒரு கோலையும் பதிவுசெய்தனர். (ம-23)






## பரபரப்பான நிலையில் இந்தியா, நியூசிலாந்து

வெலிங்டன், மார்ச் 2
இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இரண்டு அணிகளும் சம பலத்துடன் ஆதிக்கம் செலுத்துகின்றன.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 242 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக விஹாரி 55 ஓட்டங்களையும், பிருத்வி 54 ஓட்டங்களையும், புஜாரா 54 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ஜெமிசன் 5 இலக்குகளையும், சவுத்தி, போல்ட் இருவரும் தலா 2 இலக்குகளையும், வாக்நெர் ஓர் இலக்கையும் பெற்றனர். பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி 235 ஓட்டங்களுக்குள் சுருண்டது. லாதம் 52 ஓட்டங்களையும், ஜெமிசன் 49 ஓட்டங்களையும், பன்ரெல் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் சமி 4 இலக்குகளையும், பும்ரா 3 இலக்குகளையும், ஜடேயா 2 இலக்குகளையும், உமேஸ் யாதவ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் 90 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்தது. விஹாரி 5 ஓட்டங்களுடனும், பண்ட் ஓர் ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். இந்திய அணி இதுவரையில் 97 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. (ம)

## மன்னார் மாட்டிஸ் கழகம் வெற்றி

மன்னார், மார்ச் 2
மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மன்னார் பிரிமீயர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்திம் இடம்பெற்ற ஆட்டத்தில் மாட்டிஸ் கழகம் வெற்றி பெற்றது.
'மன்னார் பிரிமீயர் லீக்' தலைவரும், இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் உப தலைவரும், மன்னார் நகர முதல்வருமான ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் குறித்த போட்டி இடம்பெற்றது.
ஈடன் கால்பந்தாட்டக் கழகத்தை எதிர்த்து மாட்டிஸ் கால்பந்தாட்ட கழகம் பலப்பரீட்சை நடத்தியது. 3:0 என்ற கோல் கணக்கில் மாட்டிஸ் வெற்றிபெற்றது. எஸ். சாள்ஸ் 21ஆவது நிமிடத்தில் ஒரு கோலையும், ஜே.ரிசிகேசன்; 68ஆவது நிமிடத்தில் ஒரு கோலையும், ஜே.ஜஸ்ரின் 71 ஆவது நிமிடத்தில் ஒரு கோலையும் பதிவுசெய்தனர். (ம-56)



## வேகநடையில் சாதித்தார் தனுசியா!

யாழ்ப்பாணம், மார்ச் 2
31ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் ஓர் அங்கமான பெண்களுக்கான வேகநடைப் போட்டியில் ஜெயராசா தனுசியா 32.20 செக்கனில் நிறைவுசெய்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார். (ம-23)



# ஊக்கமருந்து பாவனை சீன வீரருக்குத் தடை!

பீஜிங், மார்ச் 2

ஊக்கமருந்து விவகாரம் காரணமாக சீனாவின் பிரபல நீச்சல் வீரர் சுன் யாங்குக்கு 8 ஆண்டு தடை விதிக்கப் பட்டுள்ளது. இவர் ஒலிம்பிக் போட்டிகளில் மூன்று தங்கப் பதக்கம் பெற்றவர்.

விளையாட்டு வீரர்கள் அனைவரும் ஊக்க மருந்து பரிசோதனைக்கு உட்பட வேண்டும் என்று உலக ஊக்க மருந்து தடுப்பு (டபிள்யூஏடிஏ) அமைப்பு தெரிவித்துள் ளது. அவர்கள் கேட்கும்போது குருதி, சிறுநீர் மாதிரி களை வழங்க வேண்டும் என்பது விதியாகும். ஆனால் 2018ஆம் ஆண்டின்போது சுன் யாங் தனது குருதி, சிறுநீர் மாதிரிகளை வழங்க மறுத்துவிட்டார்.

இதையடுத்து அவருக்கு 8 ஆண்டுகள் தடை விதிக்கப் பட்டது. இதை எதிர்த்து சுவிட்சர்லாந்திலுள்ள விளை யாட்டுக்கான நடுவர் நீதிமன்றத்தில் (சிஏஎஸ்) வழக்கு நடைபெற்று வந்தது. இந்த நிலையில் நேற்று அதன் தீர்ப்பு வெளியானது. அதன்படி சுன் யாங்குக்கு, உலக ஊக்க மருந்து தடுப்பு அமைப்பு விதித்த 8 ஆண்டு தடை செல்லும் என்று நடுவர் நீதிமன்றம் அறிவித்தது. (ம)





# கலீசனின் காட்டடியில் வீழ்ந்த ஆஸ்திரேலியா

ஜொகன்ஸ்பேர்க், மார்ச் 2

தென்னாபிரிக்கா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முத லாவது ஒருநாள் ஆட்டத்தில் கலீச னின் அதிரடியால் தென்னாபிரிக்கா அணி வெற்றிபெற்றது.



நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் இடம்பெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி அந்த அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 291 ஓட்டங் களைப் பெற்றது. கலீசன் ஆட்டமி ழக்காமல் 123 ஓட்டங்களையும், மில்லர்64ஓட்டங்களையும், வெரைன் 48 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கம்மின்ஸ் 3 இலக்கு களையும், ஸ்ராக் 2 இலக்குகளை யும், ஹசில்வூட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரே லிய அணி 217 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்து 74 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. சிமித் 76 ஓட்டங்களையும், லபக்ஸ் சேன்ஜ் 41 ஓட்டங்களையும், வோர் ணர் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நெக்டி 3 இலக்குக ளையும், சம்சி, நோர்ஜி இருவரும் தலா இரு இலக்குகளையும், மகா ராஜ், பிளுக்வையோ இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். கலீசன் ஆட்டநாயகனானார். (ம)

# இலங்கைத்தொடரில் மார்க் வூட் விலகல்!

கொழும்பு, மார்ச் 2

இலங்கைக்கு எதி ரான டெஸ்ட் தொட ருக்கான இங்கி லாந்து அணியில் இருந்து இடுப்புப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக மார்க் வூட் விலகி யுள்ளார்.




இங்கிலாந்து அணி இலங்கையில் சுற் றுப் பயணம் செய்து இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில்விளையாடு கிறது. முதல் போட்டி காலியில் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக் கான இங்கிலாந்து அணியில் வேகப்பந்து வீச்சாளர் வூட் இடம்பிடித்திருந்தார். இடுப்புப் பகுதியில் ஏற்பட்ட காயத்தை அடுத்து வூட் இலங்கைக்கு எதிராக டெஸ்ட் தொடரில் இருந்து விலகினார். (ம)

# பலே பாண்டியா!

துடெல்லி, மார்ச் 1



சுமார் ஐந்து மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் கிரிக்கெட் அரங்குக்குத் திரும்பிய பாண்டியா, தனது முதலாவது ஆட்டத்திலேயே சகலதுறைகளிலும் அசத்தியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சு சகலதுறை வீரராக உள்ள வர் ஹார்டிக் பாண்டியா. இவர் முதுகுப் பகுதியில் ஏற்பட்ட காயத்துக்கு அறு வைச் சிகிச்சை மேற்கொண்டார். அதன்பின் சுமார் ஐந்து மாதங்கள் கிரிக்கெட் விளையாடாமல் இருந்தார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உள்ளூர் ரி20 ஆட்டமொன்றில் 38 ஓட்டங்களை விளாசியதுடன், 3 இலக்குகளையும் கைப்பற்றியுள்ளார் அவர். (ம)

# ஆசியக் கிண்ணம் டுபாயில்

இஸ்லாமபாத், மார்ச் 1

பாகிஸ்தானில் நடக்கவிருந்த ஆசியக் கிண்ண கிரிக் கெட் தொடர் டுபாய்க்கு மாற்றப்பட்டுள்ளது. இந்திய அணி பாதுகாப்புக் காரணமாக பாகிஸ்தான் செல்ல மறுத்துவிட்ட காரணத்தினால் தொடர் டுபாய்க்கு மாற் றப்பட்டுள்ளது.

செப்ரெம்பரில் நடைபெறும் ஆசியக் கிண்ணத் தொடரை பாகிஸ்தான்தான் நடத்துகிறது. அதில் மாற்றமில்லை, ஆனால் இந்திய அணி பாகிஸ்தான் சென்று விளை யாட முடியாது என்று மறுத்ததால் போட்டித்தொடர் வேறு வழியின்றி டுபாய்க்கு மாற்றப்பட்டுள்ளது.

காஷ்மீர் விவகாரம் தொடர்பாகவும் எல்லை தாண்டிய பயங்கரவாதம் தொடர்பாக வும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சிக்கல் கள் இருந்து வருவதால் இந்தியா எந்த ஒரு விளை யாட்டு அணியையும் பாகிஸ் தானுக்கு அனுப்புவதில்லை. முக்கியமான ஐசிசி தொடர் களில் இந்தியாவும் பாகிஸ்தானும் நடுநிலை மைதானங்களிலேயே ஆடி வருவதுகுறிப்பிடத்தக்கது. (ம)




# டோக்கியோ ஒலிம்பிக்!

டோக்கியோ, மார்ச் 2

கொரோனா வைரஸ் பிரச்சினை இருந்தாலும் திட்டமிட்டபடி டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்படும் என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி உறுதி அளித்துள்ளது.

ஜப்பானின் டோக்கியோ நகரில் வரும் ஜூலை 24ஆம் திகதி முதல் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் நடைபெற்று வரு கின்றன. இந்த நிலையில் சீனாவின் வூஹான் நகரில் கோவிட்19 வைரஸ் பரவி அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள் ளது. இது சீனாவில் மட்டுமல்லாமல் ஜப்பான், தென் கொரியா, இந்தியா உள்ளிட்ட நாடுகளிலும் பரவியுள்ளது. இதனால் ஜப்பானில் திட்டமிட்டபடி ஒலிம்பிக் போட்டி நடைபெறுமா என்ற அச்சம் எழுந்துள்ளது. இதுகுறித்து நேற்றுமுன்தினம் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலை வர் தோமஸ் பேக் கூறியதாவது:

டோக்கியோ நகரில் ஒலிம்பிக் போட்டி திட்டமிட்டபடி நடைபெ றும். போட்டியை வெற்றிகர மாக நடத்துவது என ஐஓசி உறுதி பூண்டுள்ளது. கோவிட் 19 வைரஸ் ஜப்பானில் பரவியி ருந்தாலும் போட்டியை திட்ட மிட்டபடி நடத்துவது என முடிவு செய்துள்ளோம். இதற்காக ஜப் பான் சுகாதாரத்துறை அதிகாரி கள், உலக சுகாதார மையத் தின் (டபிள்யுஎச்ஓ) அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறோம். ஜப்பானில் கோவிட்19 வைரஸை கட்டுப்படுத்து வதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே எடுத்து வருகிறார் - என்றார். (ம)

TOKYO 2020

திருமண அழைப்பிதழ்கள்
நவீன அழகிய, இரசிக்கத்தக்க அழைப்பிதழ்கள்
மிகக் குறைந்த விலைகளில்
கிரிகணன்

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடைபெறும் மகிந்தன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஒலிம்பிக் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

வீடு வாடகைக்கு
வெளிநாட்டிலிருந்து/ வெளியிடங்களில் இருந்து/ சுபகாரியங்களுக்கு ஏற்ற சகல வசதிகளையும் கொண்ட வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு.
T.P: 076 166 1986, 077 469 6695

தேசிய இளைஞர் விளையாட்டு


## வலைப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் சம்பியனானது



யாழ்ப்பாணம், மார்ச் 2

31ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் யாழ் மாவட்ட அணி கிண்ணம் வென்றது. அனுராதபுரம் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற இறுதியாட்டத் தில் யாழ் மாவட்ட அணியை எதிர்த்து அனுராதபுர மாவட்ட அணி மோதியது. இதில் யாழ் மாவட்ட அணி 37:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

அரன் பாதம் சென்றடைந்து ஆண்டொன்று கழிந்ததுவே!
தோற்றம் 01 • 03 • 1949
மறைவு 13 • 02 • 2019



குப்பிழானூர் அமரர் உயர்திரு. சிவமகாலிங்கம்
ஓய்வுபெற்ற உதவிப் பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், முன்னாள் விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை)

நேற்றுப் போலிருக்கிறது
நெஞ்சமெலாம் நின் நினைவு
ஆற்றுவார் யாருமின்றி
அழுத கண்கள் வற்றி விட
தோற்றுப்போய்த் துவண்டிங்கு
துடித்திதயம் கலங்கி நிற்க

வேற்றுலகு சென்ற உமை
வேலவனார் காத்து நிற்க
காற்றோடு கலந்த உங்கள்
கனிவான நினைவுகளைப்
போற்றிப் புகழ்ந்து இந்தப்
பூவுலகில் நினைந்திருப்போம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
(CS/31620)(11,17)

"சிவஜோதி" பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## தட்சணா மருதமடு வி.கழகம் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 2

மடு பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் தட்சணா மருதமடு விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

மரிய கொறற்றி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் இடம்பெற்றது. குஞ்சுக்குளம் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தட்சணா மருதமடு விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் தட்சணா மருத மடு விளை யாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.